தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 266

ஸ்ரீவல்லபேந்திரரின்

# வைத்திய சிந்தாமணி

## [பேஷஜ கல்பம்]

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்

2005

விலை : ரூ. 40-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 266

ஸ்ரீவல்லபேந்திரரின்

# வைத்திய சிந்தாமணி

## [பேஷஜ கல்பம்]

பதிப்பாசிரியர்கள்:

டாக்டர் T.V. வரதராஜன்,
ஆயுர்வேத சிரோமணி, D. A. M.
L. R. யூனிட், தஞ்சாவூர்.

வித்துவான் N. ஸ்ரீநிவாசன்.
வேதாந்த சிரோமணி, முன்னாள் சமஸ்கிருதபண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2005] [விலை: ரு. 40-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : வைத்திய சிந்தாமணி |
| பதிப்பாசிரியர் கள் | : டாக்டர் T.V. வரதராஜன்<br>வித்துவான் N. ஸ்ரீநிவாசன். |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 266 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2005 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 116 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : ராப்பர் கட்டு |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ. |

# வெளியீட்டாளர் முகவுரை

வைத்திய சிந்தாமணி என்றும் பேஷஜ கல்பம் என்றும் அழைக்கப்படும் இந்நூலினை வல்லபேந்திரர் என்னும் மருத்துவ மாமேதை படைத்துள்ளார். ஆயுர்வேதம் எனும் பண்டைய இந்திய மருத்துவ முறையில் முன்னோர்கள் கூறியுள்ள கருத்துக்களை எடுத்துக்கொண்டு தன் அனுபவபூர்வமான மருத்துவக் கருத்துக்களையும் இணைத்து இந்நூலை அவர் வடமொழியில் இயற்றியுள்ளார். சிந்திப்போர் சிந்தித்தபடி வழங்குவதை சிந்தாமணி என்பர். இதைப்போல் மருத்துவ வல்லுநர்கள் அறியவிரும்பும் செய்திகளை இந்நூலில் பெறமுடியும் என்பதே இந்நூலாசிரியரின் கருத்தாகும். சமஸ்கிருத மொழியில் எழுதப்பெற்ற இந்நூல் மூல சுலோகங்களோடு தமிழில் மொழியாக்கம் செய்யப்பெற்று வெளியிடப்பெறுகின்றது.

பஸ்பம், செந்தூரம், தைலம், லேகியம், குளிகை ஆகியவைகள் தயாரிக்கும் முறைபற்றி இந்நூல் செம்மையுற உரைக்கின்றது. நோயின் குணங்கள், அதற்குரிய மருந்துகள், அவை தயாரிக்கும் முறைகள் பற்றியும் விவரிக்கின்றது. இதனைச் சிறப்பாகப் பதிப்பித்த Dr. T. V. வரதராஜன் மற்றும் நூலக முன்னாள் வடமொழிப் பண்டிதர் N. சீனிவாசன் ஆகிய இருவரின் பணி பாராட்டுக்குரியதாகும். இந்நூல் சிறப்பாக வெளிவரச் செயலாற்றிய சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு

மேலாளர் முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மா. வீர சண்முக மணி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*11-8-2005*

# முகவுரை

இந்திய நாட்டின் மிகத்தொன்மையான காலந்தொடங்கி கையாண்டுவந்த வைத்திய முறைகளில் ஆயுர்வேதமும் ஒன்று . இது ஆயுளின் தத்துவங்களை அறிந்தும், நோய் அணுகாவண்ணம் உடல்நலத்தைக் காத்து ஆயுளை நீடிக்கச் செய்யும் முறைகளையும், நோய்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் கூறுவது.

ரிக்வேத காலத்திலும், அதர்வணவேதம், ராமாயணம், மகாபாரதம் ஆகிய காலத்திலும் இந்த ஆயுர்வேத மருத்துவம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளதாக அறிய முடிகிறது. ஆயினும் இந்த சாஸ்திரத்தை ஒழுங்குபெற அமைத்து நூல்களியற்றியவர்கள் சரகர், சுச்ருதர், காசிபர், வாக்படர் முதலியோர்களாவார்.

இவர்கள் மருத்துவத்துக்கு அடிப்படையாகக் கூறும் மூலதத்துவங்களுக்குள் திரிதோஷ தத்துவம் என்பது முக்கியமானது. உடம்பில் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்று தாதுக்கள் இருக்கின்றன. அவையே உடல்நலத்தைக் காக்கின்றன. உடல்நலம் சீரழியும்போது இத்தாதுக்கள் உரிய தன்மையை இழந்து தோஷங்களாக (கோளாறு) மாறுகின்றன. இந்த மூன்று தாதுக்களுக்குள் வாதமே மற்ற இரண்டையும், உடலையும் அடக்கியாளும் ஆற்றலுடையது. இவற்றுள் இரண்டு தாதுக்கள் கோளாறடைந்தால் துவந்ததோஷம் என்றும், மூன்று தாதுக்களும் கோளாறடைந்தால் சன்னிபாதம்-அல்லது சன்னி (ஜன்னி) என்றும் கூறுவர்.

இதனை வைத்தியர் அறிவதற்குரிய முறைகளையும் அறிஞர்கள் விளக்கமாகக் கூறியுள்ளனர். இதனை நிதானம் என்னும் பகுதியில் விரிவாகக் காணலாம். ஆயுர்வேத

மருத்துவத் துறையில் நிதானம் என்னும் என்ற சொல் மிக மிக முக்கியமாக வழங்கப்படுகிறது. நிதானம் என்ற சொல்லுக்கு மூலகாரணம் என்று பொருள்படும். நோய்க்காரணம், பூர்வ ரூபம்-முதற்குறிகள், லக்ஷணம் ஆகியவற்றைக் கூறும் பகுதிக்கும் நிதானம் என்றே வழங்கப்படுகிறது.

1. சந்நிக்ருஷ்ட நிதானம்-நோய்க்கு நேர்முகமான காரணம்.

2. விப்ரக்ருஷ்ட நிதானம்-நோய்க்கு நேர்முக மில்லாததும், பெற்றோர் முதலானோர் மூலமாய் ஏற்படுவதுமான காரணம்.

3. பூர்வரூபம்-நோய் வெளிப்படையாகத் தோன்றுமுன் காணும் அறிகுறி.

4. சம்ப்ராப்தி- தோஷம் உடலில் பரவும் தன்மை.

5. உபசயம், அனுபசயம்-குறிகளை அனுசரித்துச் செய்யும் பரிகாரங்கள்.

ஆகிய மேலே காணும் ஐந்து வகைகளையும் நிதான பஞ்சகம் என்று அழைப்பர். இதனை ஆதாரமாகக்கொண்டு நோயாளியை உற்றுநோக்குதல் நோயாளியின் உடலில் காதை வைத்துக்கேட்டல், நாடி, நாக்கு, கண், மூத்திரம், மலம் முதலியவற்றைபரீக்ஷை செய்வதை அஷ்டஸ்தான பரீக்ஷை என்பர். இம்முறைகளைக் கையாண்டு காய்ச்சல், அதிஸாரம், க்ஷயம், குஷ்டம் முதலிய சகல நோய்களையும் பரீக்ஷை செய்யும் முறையே நிதானம் என்று வகைப்படுத்தியுள்ளனர்.

கி.பி. 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதவர் என்னும் புலவர் நிதானம் பற்றி சிறந்த நூலை இயற்றிப் புகழ்பெற்றார். இந்நூலை மாதவநிதானம் என்றே பிற்காலத்தில் அழைக்கலாயினர். (நிதானே மாதவ சிரேஷ்ட:) என்று கூறுவதுண்டு.

நோய்களுக்குச் சிகித்ஸை செய்யும் பகுதி இரண்டு வகையாகக் கூறுகின்றது ஆயுர்வேதம். இது காய சிகித்ஸை என்றும், சல்ய சிகித்ஸை என்றும் பெயர் பெறும். இதில் காயசிகித்ஸை மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது. 1. கர்ஷணம் 2. சமனம் 3. பிரும்மணம் என்று பெயர் பெறுகிறது. இதனை முறையே 1. மருந்துகளை உட்செலுத்தி விஷச் சத்துக்களை வெளியேற்றுதல், 2. மருந்து முதலியவற்றால் விஷச்சத்துக்களின் வீரியத்தைப் போக்கிக் குணப்படுத்துதல், 3. உடலுக்குப் போஷணை கொடுத்து உடலை வலுக்கச்செய்தல் ஆகிய முறையாகும். மேலும் பட்டினியிருத்தல், வாந்தி செய்வித்தல், மலம் வெளியாக்கல், அசுத்த இரத்தத்தை வெளிப்படுத்துதல், வஸ்திமுறைகள் முதலிய முறைகளை கர்ஷண சிகித்ஸையிலும், பசி உண்டுபண்ணுதல் முதலிய உபாயங்களை சமன சிகித்ஸையிலும் அடங்கும்.

***சல்லிய சிகித்ஸை :*** இது உடலில் புகுந்து துன்புறுத்தும் பொருள் சல்லியம் எனப்படும். அதனை நீக்குதற்கு சல்லிய சிகித்ஸை எனப்படும். இதை தற்காலத்தில் அறுவை சிகித்ஸை என்று அழைக்கப்படுகிறது. இதற்கான கருவிகளை சஸ்திரம் என்றும், இயந்திரம் என்றும் இரண்டு வகையாகப் பெயரிட்டுள்ளனர். இந்த சஸ்திர சிகித்ஸையில் ஒடிந்த உறுப்புக்களுக்குப் பதில் உலோக உறுப்புக்களை வைத்து அமைப்பதும், எறும்பு போன்ற உயிர் வகைகளை வைத்து உறுப்புக்களைத் தைப்பதும் அட்டை முதலியவற்றைக் கொண்டு சிரைகளிலிருந்த கெட்ட ரத்தத்தை வெளிப்படுத்துவதும் அடங்கும்.

மருந்துகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்களின் இரச-வீரிய-விபாக-பிரபாவதி-குணங்கள் இவற்றைக் கூட்டி-குறைத்துப்-பக்குவம் செய்யும் கஷாயம், சூர்ணம், (பொடி) குளிகை (மாத்திரை), வடகம் (வத்தல்), க்ருதம் (நெய் வகைகள்), தைலம், லேகியம், ஆசவம், அரிஷ்டம் முதலியவைகளை விரிவாக இந்த வைத்திய நூல் கூறுகிறது. மேற்படி மருந்துகளைச் செய்யும் முறைகள்,

இரஸ ஔஷதங்களைத்தயார் செய்வதற்கான இடம், உரிய அடுப்பு, கல்வம், யந்திரம் ஆகியவற்றையும் விளக்கமாகக் கூறுகிறது.

இதனுடைய அடிப்படையில் பல புலவர்கள் ஆயுர்வேத வைத்தியத்திற்குப் பல நூல்களை இயற்றினர். பலர் இந்த நூல்களுக்கு உரை எழுதி உரையாசிரியர்களாகவும் இருந்து உலகிற்குத் தொண்டு புரிந்துள்ளனர். இவர்களின் வரிசையில் வல்லபேந்திரர் என்னும் வைத்திய மாமேதை வைத்ய சிந்தாமணி என்னும் நூலை இயற்றியுள்ளார்.

## இந்நூல் வரலாறு

ஆயுர்வேதத்தில் முன்னோர்கள் கூறியுள்ள கருத்துக்களைப் பின்பற்றித் தன்னுடைய கருத்துக்களையும் இணைத்து எழுதியுள்ளார் வல்லபேந்திரர். இவர் தனது நூலுக்கிட்ட பெயர் ' வைத்திய சிந்தாமணி 'சிந்திப்போர் சிந்தித்தபடி கொடுப்பதைச் சிந்தாமணி என்பர். இதைப்போல் வைத்தியம் செய்கின்றவர்கள் அறிய விரும்பும் செய்திகளை இந்நூலில் பெறமுடியும் என்பது இவர் கருத்து. இவர் வாழ்ந்த காலம் பற்றி அறியமுடியவில்லை..

## நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியரின் பெயர் வல்லபாசாரியார். பூவல்லபேந்திரர் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்தவர் என்பது இவரது நூலில் காணப்படும் குறிப்புக்களால் அறியமுடிகிறது. இவரது தந்தையின் பெயர் மல்லேஸ்வரபட்டர் அல்லது அமரேஸ்வர பட்டர் என்றும் அறியமுடிகிறது. ஆபஸ்தம்ப சூத்திரம், ஸ்ரீ வத்ஸகோத்திரம் 'இந்திர கண்டி' என்பது இவருடைய குலப்பெயர். வேதம் கற்றவர் என்னும் செய்திகள் வைத்திய சிந்தாமணியின் (Colophon) குறிப்பினால் அறியமுடிகிறது.[1] இவருடைய வைத்திய சிந்தாமணி ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு உரையுடன் வெளிவந்துள்ளது. இதைப்போலவே மலையான

உரையுடன் கேரளத்தில் வெளிவந்துள்ளதாக அறியமுடிகிறது. ஆனால் இத்தமிழகத்தில் தமிழுரையுடன் இதுகாறும் வெளிவரவில்லை என்றும் அறியலாகும்.

**சுவடியின் வரலாறு**

இந்நூலகத்தில் 'தமிழ்ப் பகுதியில்' இந்நூலின் ஒரே ஒரு சுவடி காணப்படுகிறது. இச்சுவடி தென்னாற்காடு மாவட்டம் சாத்தமங்கலத்தைச் சார்ந்த பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டு 1975ஆம் ஆண்டு இப்பிரிவில் 297ஆம் எண்ணில் ஆக்கம் செய்யப்பெற்றுள்ளது. இதன் எண். D. No. 528. இந்தச் சுவடியைத் தொகுத்தளித்தவர். இந்நூலகத்தின் முன்னாள் சம்ஸ்கிருதப் பண்டிதர் திரு N. K. ராமானுஜ தாத்தாச்சாரியார் அவர்கள். தமிழுரையுடன் காணப்படும் சுவடி இது ஒன்றுதான். ஆயின் இந்நூலும் உரையும் முற்றுமில்லை. சில பகுதிகளே காணப்படுகின்றன. ஆயின் இந்நூலில் காணப்படும் வைத்திய முறைகளை அப்படியே மொழியாக்கம் செய்ததைப்போல பஸ்பம், செந்தூரம், தைலம், லேகியம், க்ருதம், குளிகை ஆகியவைகளைத் தயாரிக்கும் முறைகளை செம்மைப்படுத்திக் கூறுகிறது. மேலும் நோயின் லக்ஷணங்களையும் அதன் குணங்களையும் கூறி அதற்குரிய மருந்துகளையும் அதனைப் பயன்படுத்தும் முறைகளையும் அடுத்தடுத்துக் கூறுகிறது. ஆயின் பதிப்பாகியுள்ள நூல்களில் எடுத்தாண்ட வரிசை முறையில் கூறாது தனித்தனியாகக் கூறுவதால் இந்த ஏட்டை எழுதியவர் ஒரு வைத்தியர் என்பதும், தமது தொழிலுக்கு இந்த முறையைப் பயன்படுத்தியுள்ளார் என்பதையும் நன்கு உணரமுடியும்.

ஆதலால் இந்நூலில் காணப்படும் வைத்திய முறைகளை உள்ளபடியே பதிப்பித்துள்ளோம், மூலஸ்லோகங்களும், அதன் உரையும் சில பகுதிகளுக்கே கிடைத்துள்ளன. கிடைத்தவைகளும் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. இதனை கூடியவரையில் திருத்தம் செய்து தற்போது வெளிவருகிறது.

மேலும் மூல ஸ்லோகங்கள் முற்றுமில்லாமையால் கிடைத்த ஸ்லோகங்களும், அதன் உரையும் வெளிவருகிறது. ஆயின், இந்தச் சுவடியை எழுதிவைத்திருந்தவர் தனது வைத்தியத் தொழிலுக்கு வசதியாக வைத்திய சிந்தாமணியின் சாரத்தை (Gist) அப்படியே தமிழில் தொகுத்துள்ளார் என்பது உறுதி. இந்தப் பகுதி அப்படியே இந்நூலில் கொடுக்கப் பெற்றுள்ளது. மேலும் மணிப்பிரவாள நடையிலுள்ள சில பகுதிகள் தமிழ் நடைக்கு ஏற்ற வண்ணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. நோய்களின் அகரவரிசைப்பட்டியல் மருந்து வகைகள் ஆகியவற்றை உரிய அகரவரிசைப்பட்டியலின் துணைகொண்டு அறியமுடியும்.

## நன்றியுரை

இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை எங்களுக்கு நல்கிய முன்னாள் மாவட்ட ஆட்சியரும் இந்நூலக இயக்குநருமான உயர்திரு O. P. சோசம்மா, இ.ஆ.ப., அவர்களுக்கும், தற்போது இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய இந்நாள் மாவட்டஆட்சியரும் இந்நூலக இயக்குனருமாகிய உயர்திரு சு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தச் சுவடியில் எழுத்துப் பிழைகளும், ஏனைய மரபுப் பிழைகளும் இருந்தன. இவற்றைத் திருத்தம் செய்யும்போதும் மற்ற ஏடுகளுடன் ஒப்பிடும் போதும் உதவிய இந்நூலகத்தின் முன்னாள் சம்ஸ்கிருதப் பண்டிதர் திரு P. M.பத்மநாப சர்மா அவர்களுக்கும், தெலுங்குப் பண்டிதர் திரு N. விசுவநாதன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூல் சிறப்பாகவும், விரைவாகவும் வெளிவர பலவகையிலும் உதவி நல்கிய நிர்வாக அதிகாரி திரு K.பலராமன் அவர்களுக்கும் நூலக வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் நிலை I திரு அ. பஞ்சநாதன், எம்.ஏ., பி.லிப்.எஸ்சி., அவர்களுக்கும் எமது நன்றியை உரித்தாக்குகின்றோம்.

*வாசக அன்பர்களும், வைத்தியர் பெருமக்களும் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம். இதில் ஏதேனும் பிழைகளிருக்குமாயின் அதனைக் குறித்து எழுதினால், அது இந்நூல் மீண்டும் பதிப்பாகும்போது திருந்திய பதிப்பாக வெளிவர உதவும். தொடர்ந்து இதுபோன்ற பணியை எமக்கு நல்க இறைவன் அருள் புரிவானாக.*

இங்ஙனம்,

**தஞ்சாவூர்,**

**11-6-88.**

டாக்டர் T.V. **வரதராஜன்,**

வித்துவான் N. **ஸ்ரீநிவாசன்.**

# இந்நூலில் கொடுக்கப் பெற்றுள்ள மருந்து வகைகள்

## சூர்ணங்கள்


| | | பக்க எண் |
|---|---|---|
| அஸ்வகந்தாதி சூர்ணம் | - | 25 |
| ஏலாதி மகா சூர்ணம் | - | 8 |
| கண்டத்திப்பிலி சூர்ணம்-செய்முறை | - | 27 |
| கந்தகச் சூர்ணம்-செய்முறை | - | 32 |
| சீந்தில் சர்க்கரை எடுக்கும் முறை | - | 11 |
| சைத்திய சூர்ணம் | - | 39 |
| தாளிசபத்திரிச் சூர்ணம் | - | 46 |
| (மகா) தாளிசப்பத்திரிச் சூர்ணம் | - | 30 |
| திப்பிலி ரஸாயணம் | - | 70 |
| பரங்கிப்பட்டைச் சூர்ணம் | - | 25 |
| புளிதாளி சூர்ணம் | - | 70 |


## லேகியங்கள்


| | | |
|---|---|---|
| சரஸ்வதி லேகியம் | - | 3 |
| சேராங்கொட்டை லேகியம் | - | 71 |
| தேங்காய் அமிழ்தம் | - | 23 |
| மன்மத பாணம் | - | 30 |
| ஜீர்ண வடகம் | - | 26 |
| ஸௌபாக்ய சுண்டி | - | 1 |


## மாத்திரை


| | | |
|---|---|---|
| சன்னிக்கு மாத்திரை | - | 10 |
| சம்பளகார மாத்திரை | - | 48 |
| சுரத்துக்கு மாத்திரை | - | 36 |
| நேத்திர சந்திரோதயம் | - | 34 |

## குழம்பு வகைகள்


| | | |
|---|---|---|
| அகத்தியர் குழம்பு | - | 73 |
| அமிர்த தைலம் | - | 34 |
| காஞ்சிரவேர் தைலம் | - | 35 |
| குளுமைக்கு எண்ணை | - | 30 |
| தலைக்குத் தைலம் | - | 22 |
| பாரிச வாயுவுக்குத் தைலம் | - | 56 |
| பீனிசத்துக்குத் தைலம் | - | 29 |
| வல்லாதி நெய் | - | 35 |
| மாந்தத்திற்கு எண்ணை | - | 52, 53, 68 |


## கல்பம்


| | | |
|---|---|---|
| அஸ்வகந்தி கல்பம் | - | 74 |
| தூதுவேளை கல்பம் | - | 77 |
| நிலப்பனங்கிழங்கு கல்பம் | - | 9 |
| பாஷாணம்-ரஸம் கலந்த கல்க்கம் | - | 58 |


## பஸ்ம வகைகள்


| | | |
|---|---|---|
| அயத்தாம்பர வயணம் | - | 59 |
| உப்பு பஸ்பம் | - | 72 |
| கந்தகச் செந்தூரம் | - | 54 |
| கந்தகத் திரவம் | - | 30, 45 |
| கந்தக பஸ்பம் | - | 74 |
| கருவங்கச் சுண்ணம் | - | 46, 63 |
| கருவங்க பஸ்பம் | - | 48 |
| சௌவீர செந்தூரம் | - | 68 |
| தாமிரச்சுண்ணம் | - | 47 |
| தாமிர பஸ்பம் | - | 43, 57 |
| தாளகச் சுண்ணம் | - | 47 |
| நாக பஸ்பம் | - | 55 |
| நெல்லிக்காய் கந்தகம் (மயனம்) | - | 47 |
| பாஷாண பஸ்பம் | - | 66 |
| மண்டூக செந்தூரம் (செய்முறை) | - | 65 |
| ரஸ பஸ்பம் (செய்முறை) | - | 58 |

| | | |
|---|---|---|
| ரஸ பூபதி | - | 28 |
| வங்கரஸம் | - | 70 |
| வெண்காரக்கட்டு | - | 47 |
| வெள்ளி பஸ்பம் | - | 74 |
| ஸர்வ ஜ்வர ராமபாணம் | - | 20 |


**கஷாயம்**


| | | |
|---|---|---|
| இசிவுக்குக் கஷாயம் | - | 52 |
| குளிர் காய்ச்சலுக்குக் கஷாயம் | - | 21 |
| பித்தத்துக்குக் கஷாயம் | - | 67 |
| ஜ்வரத்திற்குக் கஷாயம் | - | 8 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்

# எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| ஜாதக அலங்காரம் | 125-00 |
| காலபிரகாசிகா | 100-00 |
| நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-I) | 200-00 |
| நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-II) | 100-00 |
| அமரகோசம் (பாகம்-I) | 65-00 |
| அமரகோசம் (பாகம்-II) | 60-00 |
| அமரகோசம் (பாகம்-III) | 60-00 |
| பிரகதீஸ்வர மாகாத்மியம் | 43-00 |
| ஜைனிஸம் கேட்லாக் | 10-00 |
| தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை | 35-00 |
| காயத்ரீ கோசம் | 30-00 |
| கீதகோவிந்தம் | 25-00 |
| கல்பலதா (ஸ்ரீருத்ரபாஷ்யம்) | 22-00 |
| பாணினீய தாதுபாடம் | 30-00 |
| விருத்தரத்னாவளி | 30-00 |
| பலவதி | 120-00 |
| நந்திநாகரி சுவடிகளின் அட்டவணை | 25-00 |
| பிரபஞ்சசாரசார ஸங்கிரஹம் (பாகம்-I) | 180-00 |
| பிரயோக ரத்னமாலா | 55-00 |
| ரத்ன பரீக்ஷை | 40-00 |
| சப்தம் தாளம் சொற்கட்டு | 40-00 |
| ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ தீபிகா | 100-00 |
| ஸ்தோத்ர ராமாயணம் | 25-00 |
| நாககுமார காவியம் | 55-00 |
| விமானார்ச்சன கல்பம் (பாகம்-II) | 75-00 |
| சூலினிகல்பம் | 50-00 |
| சூர்யசதகம் | 50-00 |
| தஞ்சை நாயக்கர் வரலாறு | 205-00 |
| யதிராஜவிஜயம் | 35-00 |
| பிரபோதசந்திரிகை | 70-00 |

श्रीवल्लभेन्द्रेण रचिता

# ॥ भेषजकल्पं नाम वैद्यचिन्तामणिः ॥

श्रीनाथं पार्वतीनाथं वाणीनाथं सरस्वतीम् ।
दुर्गावटुकहेरम्बान्सततं च नमाम्यहम् ॥

**श्रीवत्सगोत्रतिलकः** जगद्वैद्यपितामहः ।
अमरेश्वरभट्टस्य प्रियसूनुः गुणान्वितः ॥

तादृशा वल्लभेन्द्रेण क्रियते हितकारकः ।
वैद्यचिन्तामणिर्नाम भैषज्यग्रन्थः उत्तमः ॥

निदानं लक्षणज्ञानं रसयोगाः कषायकाः ।
वक्ष्यते वैद्यलाभाय चैतत्सर्वं सुविस्तरम् ॥

तेषां मध्ये पुरा वक्ष्ये निदानं शास्त्रसंमतम् ।
आदौ समस्तरोगेषु अष्टस्थानं परीक्षयेत् ॥

नाडीं स्पर्शश्चरूपश्च शब्दं नेत्रेपुरीषकम् ।
मूत्रवर्गं च जिह्वां च एतत् पश्येद्भिषग्वरः ॥

करमूले पादमूले नाडी वहति दृश्यताम् ।
नारीणां वामभागे च पुंसां दक्षिणभागके ॥

वातपित्तद्वयस्याऽपि श्लोष्मनश्च गतिस्तथा ।
यथा नाडी तथाचर्या विज्ञेया वैद्यपारगैः ॥

[(டீகா) மும்மூர்த்திகளாகத் திகழும் பிர்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகியோரையும் விநாயகன், சரஸ்வதி, துர்காதேவி, வடுகபைரவர் முதலிய தேவதைகளையும் வணங்குகிறேன்.

வைத்திய சாஸ்திரத்திற்கு பிதாமஹரும், ஸ்ரீவத்ஸ கோத்திரத்தின் திலகமாகத் திகழ்கின்றவர் **அமரேஸ்வர பட்டர்.** அவருடைய புதல்வன் நான். எனது பெயர் **'வல்லபேந்திரன்.'** மக்கள் எளிதாகக் கையாளுவதற்கு ஏற்ப "**வைத்திய சிந்தாமணி**" என்னும் பெயரில் இந்த நூலை இயற்றியுள்ளேன். இந்த நூலில் நிதானம், திரவ்ய சுத்தி, ரசங்களின் சேர்க்கை மற்றும் கஷாய வகைகள் ஆகியவற்றை விளக்கமாக எழுதியுள்ளேன். இதில் கூறப்பட்டுள்ள செய்திகள் முன்னோர்களின் கருத்துக்கு ஏற்ப, வைத்திய சாஸ்திரத்தின் வழிக்கு ஏற்ப விளக்கம் தரப்பட்டுள்ளது.] [1]

முதலில் அனைத்து ரோகங்களுக்கும் எட்டு ஸ்தானங்களையும் பரீக்ஷை செய்யவேண்டும். அது எப்படி என்றால் நாடீஸ்பர்ஸம், தேஹஸ்பர்ஸம், சப்தம், (வார்த்தை) கண்கள், கங்கணங்கள், மலமூத்திரங்கள், நாக்கு இவைகளை வைத்தியனாக இருப்பவன் பார்க்க வேண்டியது. கையில் பெருவிரல் தொடங்கி மூன்று விரலுக்குட்பட்ட கோதுமை பிரமாணம் நாடி. இது சர்வாங்கத்திலும் கூடியிருக்கும். கையில் கையில் பெருவிரலடியிலும், காலில் முழங்காலுக்குக் கீழும் நாடி இருக்கும். பெண்களுக்கு இடது பக்கத்திலேயும், புருஷாளுக்கு வலது பக்கத்திலும் பார்க்க வேண்டும். வாதநாடி தர்ஜனி (ஆட்காட்டி) விரலில் அடிக்கும். பித்த நாடி நடுவிரலில் அடிக்கும். பித்த நாடி நடுவிரலில் அடிக்கும். ஸ்லேஷ்ம

---

1. மூலச்சுவடியில் இப்பகுதிக்கு உரையில்லை ஆதலால் இங்கு வாசகர்கள் எளிதில் அறியும் பொருட்டுத் தமிழாக்கம் செய்யப் பெற்றுள்ளது.

நாடி அநாமிக (மோதிர) விரலில் அடிக்கும். மூன்று நாடியும் கூடி நடந்தால் திரோதோஷ நாடி எனப்படும்.

वातनाडी वक्रगतिः भेकालाबुकसर्पवत् ।
बालस्य डोलिकाभा च जलूकाया गतिर्भवेत् ॥

(டீகா) வாதநாடி வக்ரகதியாயும், தவளை போலவும், மாடப்புறாவைப் போலவும், பாம்பைப் போலவும், சிறுகுழந்தைகளின் தொட்டில் அசைவதைப் போலவும் நடக்கும். இப்படி நடந்தால் வாதநாடி என்று அறிக.

**पित्तनाडी लक्षणम् (பித்தநாடி லக்ஷணம்)**

चपला पित्तनाडी च गच्छेन्मण्डूक बर्हिवत् ।
मरालस्यगतिर्नाडी कपोतगति सन्निभा ॥

(டீகா) பித்தநாடி சபலமாயிருக்கும். விரித்து ஆடுகின்ற மயில் போலவும், தவிட்டுப் புறாப்போலவும் நடக்கும். இவ்வகைகளின் நடையில் நாடி நடந்தால் பித்நாடி என்று அறியவும்.

**श्लेष्मनाडी लक्षणम् (ஸ்லேஷ்ம நாடி லக்ஷணம்)**

कफच्छिरगतिः प्रोक्ता कुक्कुटस्यगतिस्तथा ।
मरालस्येव चटका टिट्टिभ्योश्च गतिर्यथा ॥

(டீகா) ஸ்திரமாய் நடக்கும். கோழியைப் போலவும், மாடப்புறாவைப் போலவும், ஊர்க்குருவியைப் போலவும், மீன்கொத்திக் குருவியைப் போலவும் இவ்வகைக் கதிகளைக்கொண்டு நடந்தால் ஸ்லேஷ்ம நாடி என்று அறியவும்.

क्षणेर्विषधरगतिः मुहुर्मण्डूकवद्भवेत् ।
वातपित्तगतिं प्राहुः विजानीयाद्भिषग्वरैः ॥

(டீகா) முதலில் பாம்புபோலே நடந்த நாடி உடனே தவளைபோல் நடந்தால் அந்த நாடி வாத பித்தம் என்று அறிக.

मुहुर्विषदरगति मुहुर्मण्डूकबर्हिवत् ।
वातपित्तगतिं प्राहुः तद्विजानाति पण्डितः ॥

(டீகா) முன்பு மாடப்புறாவைப் போல நடந்த நாடி உடனே மயில் போல் நடந்தால் அது வாதபித்த துவந்தநாடி என்று அறியவும்.

कुक्कुटस्य गतिर्नाडी मुहुर्नाडी जलूकवत् ।
श्लेष्मवातगतिर्ज्ञेया वैद्यविद्याविशारदैः ॥

(டீகா) முதலில் கோழிபோல் நடந்த நாடி உடனே அட்டைபோல் நடந்தால் அது வாத ஸ்லேஷ்ம துவந்தநாடி என்று அறியவும்.

अजीर्णा भेकगतिर्नाडी जीर्णा च सुप्तकाकवत् ।
. . . . . . . . . . . . . . . . . . . . . ॥

(டீகா) அஜீர்ண நாடி தவளை போலே நடக்கும். தீபனநாடி நித்திரை பண்ணுகின்ற காக்கைபோலே நடக்கும். ஸ்த்திர சங்கம நாடி இவ்விரண்டிலும் தீவிரமாக நடக்கும். திரியும் அன்னம் போலே நடந்தால் மலபந்தம் என்று அறியவும்.

**सन्निपात लक्षणम् (ஸன்னிபாத லக்ஷணம்)**

काष्टभारस्यमध्ये तु मूषिकागमनं यथा ।
कुटिलं शिथिलं मन्दं सूक्ष्मञ्च चपलं तथा ॥

सन्निपातादगतिं नाड्या विजानीयाद्भिषग्बुधः ॥

(டீகா) சன்னிபாத நாடி விறகுச் சுமைக்குள் திரியும் சுண்டெலி நடையைப் போல நடக்கும். கபடமாக நடக்கும். சஞ்சலிப்பாய் மூன்று நாடிகளும் கூட நடந்தால் சன்னிபாதம் என்று அறியக்கடவன்.

**स्वरूपलक्षणम् (ஸ்வரூப லக்ஷணம்)**

ततः स्वरूपं दृश्यते श्यामाभं च प्रभञ्जने ।
हरिद्रं रक्तवर्णं वा गात्रं पित्ते विनिर्दिशेत् ॥

पाण्डुरस्य च वर्णस्य स्वरूपं कफरोगतः ।
मिश्रितं द्वन्द्वरोगे तु विवर्णं सन्निपातके ॥

(டீகா) வாரோகத்துக்குச் சரீரம் கருப்பாயிருக்கும். பித்தரோகத்திர்குச் சரீரம் மஞ்சள் நிறம் அல்லது சிவப்பு நிறமாக இருக்கும். ஸ்லேஷ்ம ரோகியின் சரீரம் வெளுத்திருக்கும். துவந்த ரோகியின் சரீரம் வாத-பித்த வண்ணங்களாயிருக்கும். ஸந்நிபாத ரோகியினுடைய சரீரம் அநேகவிதமான வண்ணங்களுடையதாயிருக்கும்.

**शब्दलक्षणम् (ஸப்த லக்ஷணம்)**

ततः शब्दगुणं वक्ष्ये समशब्दस्समीरणे ।
हर्षीचोल्बणवाक्पैत्ये श्लेष्मरोगे च हीनवान् ।
द्वन्द्वजे मिश्रवान् ज्ञेयो भिषक्छास्त्र विशारदैः ॥

(டீகா) வாததாது உள்ளவனுக்கு வார்த்தைகள் (சொற்கள்) சமமாயிருக்கும். பித்த தாதுவானவனுக்கு வார்த்தைகள் உறத்திருக்கும். ஸ்லேஷ்ம தாதுவானவனுக்கு வார்த்தைகள் ஹீனமாயிருக்கும். துவந்தரோகிகளுக்கு வார்த்தைகள் அநேகவிதமாயிருக்கும்.

**नेत्रपरीक्षा (கண் பரிசோதனை)**

ततो नेत्र परीक्षा च वक्ष्यते शास्त्र निश्चिता ।
किञ्चिच्छूनं श्यामवर्णं तोयं द्रवति मारुते ॥

पीतं लोहितवर्णं च लोचनं पित्तरोगतः ।
नेत्रमलं क्वचित्कुर्यात् पाण्डुरं श्लेष्मजं परम् ॥

हरिद्रा रक्तभानेत्रेऽथवा सन्निपातके ।
अतीव पित्तवर्णं च कामिलायां विशेषतः ॥

(டீகா) வாதரோகிகளின் கண்கள் கருகி நோவு உண்டாயிருக்கும். கண்களில் நீர்பாயும். பித்தரோகிகளின் கண்கள் மஞ்சள் அல்லது சிவப்பு நிறமாகக் காணப்படும். கண்களில் பீளை சொறிந்து காணப்படும். வெண்மை யாகக் காணப்பட்டால் ஸ்லேஷ்ம லக்ஷணமென்று அறியவும்.

சன்னிபாத குணத்திற்குக் கண்கள் மஞ்சள் அல்லது சிவந்தும் பீளை சார்ந்தும் காணப்படும். கண்களில் மஞ்சள் அதிகமாயிருந்தால் காமாலை வியாதி என்று அறியவும்.

## पुरीष लक्षणम् (மலத்தின் நிறம்)

पुरीषलक्षणं वक्ष्ये पवमाने च वद्धवत् ।
अथवा श्यामलं कृष्णं ततः पैत्ये तु पीतवत् ॥[1]
आमं वा श्लेष्मजं प्राहुः मिश्रितं द्वन्द्वजे भवेत् ॥

(டீகா) வாதரோகிகளுக்கு மலபந்தமாக இருக்கும். மலம் கருகிக் கழியும். பித்தரோகிகளின் மலம் மஞ்சள் அல்லது சிவப்பு நிறமாகக் காணப்படும். ஸ்லேஷ்ம ரோகிகளி மலம் வெளுப்பாக அல்லது வழும்பாவது கழியும். துவந்த ரோகிகளின் மலம் நாநாவிதங்களாகக் கழியும்.

## मूत्रपरीक्षा (மூத்திர பரிசோதனை)

ततो मूत्रपरीक्षा च वक्ष्यते शास्त्र निश्चिता ।
वायौ च पाण्डुरं मूत्रं रक्तवर्णश्च पैत्यके ॥

अथवा पीतवर्णश्च कामिलायां तथैव च ।
श्वेतवर्णकफेचैव द्वन्द्वजे मिश्रितं भवेत् ॥

(டீகா) வாதரோகியின் மூத்திரம் வெளுப்பாயிருக்கும். பித்தரோகியின் மூத்திரம் சிவந்து விழும். ஸ்லேஷ்ம

1. 'रक्तश्वेतेषु पित्तवत्' इत्यपि पाठः

கியின் மூத்திரம் நுரைகட்டி விழும். துவந்தரோகியின் திரம் நாநாவிதமான வர்ணங்களாக விழும்.

**ह्वा लक्षणम् (நாக்கின் லக்ஷணம்)**

जिह्वापीता च वर्णाभिः कन्दकद्रवसंयुतः ।
ज्वरः तीक्ष्ण विदाहश्च रक्तजिह्वक लक्षणम् ॥

जिह्वा पीता स्फोटकरा स्पष्टा मारुत लक्षणा ।
श्यामा शोणा भवेत्पित्ते श्वेताजिह्वाद्रवः कफः ॥

न कण्ठककफाशुष्का सन्निपातकलक्षणम् ।
मिश्रवर्णा भवेज्जिह्वा द्वन्द्वे परिकीर्तिता ॥

एवं परीक्षा वैद्यस्तु पश्चात्कुर्याच्चिकित्सितम् ॥

(டீகா) நாக்கு ரக்த வர்ணமாயும், ஈரமில்லாமலும் இருக்க, ஜ்வரம் தீவிரமாயும், தாகமில்லாமலும் இருக்குமாயின் அது ரக்த ஜிஹ்வா (சிவந்தநாக்கு) என்று அறிய வேண்டும்.

நாக்கு பிளந்தும், முள்ளுப்போலவும், பச்சின்னு (பாசி பிடித்ததுபோல்) இருக்கும். இது பித்த லக்ஷணம் என்று அறியலாம்.

நாக்கு கருத்தாகிலும், சிவந்தாகிலுமிருந்தால் பித்த தாது என்று அறியவும்.

நாக்கு பெருத்தும், வெளுத்துமிருந்தால் ஸ்லேஷ்ம தாது என்று அறியவும். முள்ளுப்போலவும், திரவ முண்டாகி கருத்துமிருந்தால் ஸந்நிபாதமென்று அறியவும். நாக்கு நாநாவர்ணமாயிருந்தால் 'துவந்தரோகி' என்று அறிந்து பரிக்ஷை செய்து சிகித்ஸை செய்யக் கடவன்.

**अजीर्ण लक्षणम् (அஜீர்ண லக்ஷணம்)**

अजीर्णस्य निदानं च वक्ष्यते शास्त्रनिश्चितम् ।
अजीर्णे प्रथमेजाते तस्याऽजीर्णं चतुर्विधम् ॥

रसशेषः च विस्पष्ठः विधूमो धूमसंज्ञिकः ।
रसशेषे शिरोभारः विस्पष्ठे देहवेदना ॥

विधूमे चाऽम्लागन्धः च धूमे स्वभावगन्धकम् ।
एतच्च चतुर्विधाजीर्णं विजानीयं भिषस्वरैः ॥

*(டீகா) அஜீர்ணம் நான்கு விதம். அவை ரஸசேஷம், விஸ்பிருஷ்டம், விதூமம், தூமம் என்பன. இந்த நான்குக்கும் நிதானம்*

1. *ரஸசேஷம் - தலைநோவு காணும்.*
2. *விஸ்பிருஷ்டம் - சரீரமெல்லாம் நோகும்.*
3. *விதூமம் - புளித்த ஏப்பம் வரும்.*
4. *தூமம் - ஸ்வபாவமாக நாற்றம் வரும்.*

*இவை நான்கு விதமும் அஜீர்ணம் என்று அறியவும்.*[1]

**वातज्वर लक्षणम् (வாதஜ்வர லக்ஷணம்)**

ऊरुबूकः स्थिरा शुण्ठी तत्कारि हंसपादिका ।
क्वाथो वातज्वरं हन्ति रामेषुरिव रावणम् ॥

*(டீகா) ஆமணக்கம் வேர், சித்தமல்லி, சுக்கு, தழுதாழை வேர், செருப்படை, இவைகள் சமபாகம் கஷாயமிட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி மூன்று நாட்கள் கொடுத்தால் வாதஜ்வரங்கள் போகும்.*

घातकी बदरी क्षुदा फला शुण्ठी हरीतकी ।
सुस्ता नागेन्द्रं सिंहो वा क्वाथो वातज्वरं हरेत् ॥

*(டீகா) ஆமணக்கம் வேர், எலந்தை வேர், கண்டங்கத்திரி வேர், சித்தாமுட்டி வேர், சுக்கு, கடுக்காய் இவைகளை கஷாயமிட்டுக் கொடுத்தால் வாத ஜ்வரங்கள் நீங்கும்.*

---

1. இதன்பின் ஏட்டில் சில பகுதிகள் இல்லை.

जयन्ती त्रिफला कन्या विष्णुक्रान्ता च नागरम् ।
वातज्वरं निहन्त्याशु क्वाथः पिप्पलमिश्रितम् ॥

(டீகா) தழுதாழை வேர், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, உத்தாமணி வேர், விஷ்ணுகிராந்தம், சுக்கு இவற்றை சமமாகக் கஷாயமிட்டுத் திப்பிலியை மேற்பொடியாகப் போட்டுக் கொடுத்தால் வாத ஜ்வரங்கள் போகும்.

वटप्ररोहः केशाम्बुधरो नीली जया निशा ।
शुण्ठी विभीतकं चैषां क्वाथो वातज्वरापहः ॥

(டீகா) ஆலம் விழுது, குறுவேர், நிலவேர்.[1]

## पित्तज्वरलक्षणम् (பித்த ஜ்வர லக்ஷணம்)

(டீகா) நித்திரை பண்ணிக்கொண்டிருக்கும். ஓடிக்கொண்டு திரியும். ஸ்லேஷ்மங்கள் கொள்ள வாய்க்கசப்பு உண்டாயிருக்க, தாகமுண்டாகி இருக்கும், மூர்ச்சையும், புழுக்கமும் உண்டாகும். வாய் உலரும். வாந்தி எடுக்கும். விக்கல் உண்டாகும். தாபம் உண்டாகும். இவைகள் பித்தஜ்வரங்களின் லக்ஷணம்.

## पित्तज्वरचिकित्सा (பித்த ஜ்வர சிகித்சை)

गुडूची चीरमुस्ता च कुष्ठश्चन्दन नागरम् ।
क्वाथः पित्तज्वरं हन्ति गरुडानिव पन्नगम् ॥

(டீகா) சீந்தில் தண்டு, விலாமுச்சி வேர், கோரைக்கிழங்கு, செங்கழுநீர், கோஷ்டம், ஸ்ரீகண்டம், சுக்கு இவைகளை சமமாகக்கூட்டி கஷாயமிட்டுக் கொடுத்தால் பித்தஜ்வரங்கள் நீங்கும்.

काकजंघा शृङ्गिबेरं उशीरं भद्रनागरैः ।
धात्री कुस्तुम्बरुः क्वाथो पैत्यज्वरहरो भवेत् ॥

---

1. ஏடுகள் சிதிலம். விடுபட்டுள்ளது.

(டீகா) மீனாட்டுப்புள்ளை, பூண்டு, பேறாமுட்டி வேர், விலாமுச்சி வேர், கோரைக்கிழங்கு, சுக்கு, நெல்லிப்பருப்பு, கொத்தமல்லி இவைகளைச் சமமாகக் கஷாயமிட்டுக்கொடுத்தால் பித்தஜ்வரங்கள் போகும்.

शताह्वा धान्यकं यष्ठी रास्ना मुस्ता शतावरी ।
ऐलेयं नागरं केश्या क्वाथः पैत्यज्वरापहः ॥

(டீகா) தண்ணீர்விட்டான் கிழங்கு, கொத்தமல்லி, அதிமதுரம், தூம்மராஷ்டம், கோரைக்கிழங்கு, சதகுப்பைவிதை, முசுமுசுக்கைவேர், குருவேர், சுக்கு இவைகள் சமம், கஷாயமிட்டுக்கொடுக்க பித்தஜ்வரங்கள் நீங்கும்.

ऐलेय वनमुद्गा च अमृतानलदञ्जलम् ।
फला नागर यष्ठी च क्वाथः पैत्यज्वरापहः ॥

(டீகா) முசுமுசுக்கைவேர், நரிப்பயத்தன்கொடி, சீந்தில்தண்டு, ஜடாமாம்ஸி, கோரைக்கிழங்கு, சித்தாமுட்டிவேர், சுக்கு, அதிமதுரம் இவைகள் சமமாகக் கூட்டிக் கஷாயமிட்டுக் கொடுத்தால் பித்தஜ்வரங்கள் நீங்கும்.

आस्यं श्वेतं वक्षरुजा कासः श्वासः च जायते ।
अरुचिः जृभाणं किक्का दाहो विकलकण्ठता ॥
ऊर्ध्वश्वासः कण्डूश्च लक्षणं कफकेज्वरे ॥

(டீகா) முகம்வெளுப்போடியிருக்கும். மார்பு நொந்துகொண்டிருக்கும். உப்புசமுண்டாயிருக்கும். நாக்கு அருசியாகவும். இருமல் அதிகமாகவும். விக்கல் உண்டாகும். தாகமுண்டாகி நெஞ்சு நொந்து கொண்டிருக்கும். தினவு உண்டாகும். இது கபஜ்வர லக்ஷணம் என்று அறியவேண்டும்.

**श्लेष्मज्वरचिकित्सा लक्षणम् *(ஸ்லேஷ்மஜ்வர சிகித்சை)***

कण्टकारी बाणपुंखी वासा यष्टी स नागरा ।
क्वाथः श्लेष्मज्वरं हन्ति पिप्पली मधुमिश्रिता ॥

*(டீகா)* கண்டங்கத்திரி, முக்கர்வேளை, ஆடாதொடையிலை, இரகு, செம்முள்ளி, சுக்கு இவைகளைச் சமமாய் கஷாயமிட்டுத் தேனும், திப்பிலியும் மேல் மருந்தாகப் போட்டுக்கொடுத்தால் ஸ்லேஷ்ம ஜ்வரங்கள் போகும்.

वासा वचा वज्रवल्ली व्याघ्री नागर रोहिणी ।
पिप्पिली मधुसंयुक्ता क्षिप्रं श्लेष्मज्वरं हरेत् ॥

*(டீகா)* ஆடாதொடையிலையிரகு, வசம்பு, பிரண்டை, கண்டங்கத்திரி, சுக்கு, கடுகுரோகிணி இவை ஸமமாய் கஷாயமிட்டுக்கொடுத்தால் ஸ்லேஷ்ம ஜ்வரம் போகும்.

क्षुद्राटरूषारात्स्नाभिः पञ्जकोलैः श्रृतं जलम् ।
क्वाथः कफज्वरं हन्ति पिप्पली मधुमिश्रितः ॥

*(டீகா)* தூதுவேளை, சிறுவழுதியிலைவேர், கண்டங்கத்திரி, செம்முள்ளிவேர், சுக்கு இவை சமஅளவு எடுத்து கஷாயமிட்டு தேனும், திப்பிலியும் போட்டுக் கொடுத்தால் ஸ்லேஷ்ம ஜ்வரங்கள் போகும்.

पटोलं त्रिफला तिक्ता सटी वासामृतोद्भवः ।
क्वाथः मधुयुतः पीतः हन्यात्कफकृतं ज्वरम् ॥

*(டீகா)* பேய்ப்புடலங்காய், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, உத்தாமணிவேர், மரமஞ்சள், கடுகு ரோகிணி, சுக்கு, சிறுவழுதியிலைவேர், கண்டங்கத்திரி வேர், ஆடாதொடையிரகு இவைகள் சமமாய் கஷாயமிட்டுக் கொடுத்தால் ஸ்லேஷ்ம ஜ்வரங்கள் போகும்.

निदग्धिका भृङ्गराजः कुण्डली कट्फलं वचा ।
नागरं दीप्यकं क्काथः श्लेष्मज्वर विनाशनः ॥

*(டீகா)* கண்டங்கத்திரி, கரிசலாங்கண்ணி, சக்கன்வேர், பேத்துமுட்டி வேர், வசம்பு, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு இவைகள் சமமாய் கஷாயமிட்டுக் கொடுத்தால் ஸ்லேஷ்ம ஜ்வரங்கள் போகும்.

**वातपित्तज्वर लक्षणम् *(வாதபித்த ஜ்வர லக்ஷணம்)***

अङ्गवैकल्यकृष्णास्यं प्रलापोप्यतिनिद्रता ।
स्वेदः पुरीषबन्धश्च वातपित्तज्वराकृतिः ॥

*(டீகா)* முகம் கருத்தும், அதிக நித்திரைசெய்யவும், அதிகமான புழுக்கமுமுண்டாகும். மலம்கட்டுப் பட்டிருக்கும். இங்ஙனமிருந்தால் அது வாதபித்த ஜ்வரமென்று அறியவும்.

**वातश्लेष्मज्वर लक्षणम् *(வாதஸ்லேஷ்ம ஜ்வர லக்ஷணம்)***

अङ्गव्यथा श्वासकाशं श्वेताश्यं कन्धरव्यधा ।
रोमहर्षणमालस्यं वातश्लेष्मज्वराकृतिः ॥

*(டீகா)* உடல் நோவு உண்டாயிருக்க, உப்புஸம், இருமல், முகம் வெளுத்தல், உடல் நடுக்கம், மென் (கழுத்து) நோவு, அறற்றல் ஆகியவை இருக்குமாயின் வாதஸ்லேஷ்ம ஜ்வரம் என்று அறியவும்.

**पित्तश्लेष्मज्वर लक्षणम् *(பித்தஸ்லேஷ்ம ஜ்வரலக்ஷணம்)***

मदप्रतापो निद्रा च रोमहर्षणकाशयोः ।
वक्षव्यथाऽक्षसन्तापो पित्तश्लेष्मज्वराकृतिः ॥

(டீகா) புழுக்கமுண்டாயிருக்க, பொய்சொல்ல, உடல் விசேஷமான சூட்டுடன் இருக்க, இருமல் தோன்ற, மார்பினுள் நோவு உண்டாகுமானால் இது பித்த ஸ்லேஷ்ம ஜ்வரமென்று அறியவும்.

**तच्चिकित्सा (இதற்கு சிகித்சை)**

उशिरं धान्यकं व्याघ्री काकजंघा दुरालभा ।
त्रिफला नागरैः क्वाथः पित्तश्लेष्मज्वरं हरेत् ॥

(டீகா) விலாமுச்சிவேர், கொத்தமல்லி, கண்டங்கத்திரி, பூனை அமுதாரிவேர், சிறுகாஞ்சோரி வேர், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு இவைகளை சமமாக்கி கஷாயமிட்டுக் கொடுத்தால் பித்த ஸ்லேஷ்ம ஜ்வரங்கள் நீங்கும்.

**द्वन्द्वज्वरचिकित्सा (துவந்த்வ ஜ்வரங்களின் சிகிச்சை)**

गुडूची नागरं मुस्ता भूनिम्बा काकजंघिका ।
त्रिफला पद्मकी क्वाथः द्वन्द्वज्ज्वरहरं भवेत् ॥

(டீகா) சீந்தில் தண்டு, சுக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, மினாட்டுப் பிள்ளைப்பூண்டு, பேராமுட்டி வேர், பேரமல்லி, கடுக்காய் இவைகள் சமமாகக்கூட்டி கஷாயமிட்டுக் கொடுத்தால் துவந்த்வ ஜ்வரங்கள் போகும்.

**भूतज्वरलक्षणम् (பூதஜ்வர லக்ஷணம்)**

अपस्मारो विरूपाक्षं ज्वरोग्रं विप्रलंभनम् ।
अतीवभोजने वाञ्छा रोमहर्षः च गायनम् ॥

आस्स्यश्च नर्तनं हास्यं भूतस्य ज्वरलक्षणम् ॥

(டீகா) பேய்வார்த்தைகள் அதிகமாகச் சொல்வார்கள். கண்கள் பருத்திருக்கும். ஜ்வரம் தீவிரமாயிருக்க, அழுது கொண்டிருக்க, உணவு சாப்பிடுவதில் விருப்பமாயிருக்க,

நித்திரை அதிகம் பண்ண, இது பூதஜ்வர லக்ஷணம் என்று அறியவும்.

**अजीर्णज्वरलक्षणम् (அஜீர்ண ஜ்வரலக்ஷணம்)**

ज्वरोगुंभन हिक्का च मन्दाग्निर्जानुनि व्यथा ।
आम्लस्वाभाविकीद्गारौ अजीर्णज्वर लक्षणम् ॥

(டீகா) ஜ்வரம் உண்டாயிருக்க, இருமல், விக்கல் உண்டாக, தீபனமின்றியிருக்க, புறங்கால் நோவு உண்டாயிருக்குமாயின் அது அஜீரண ஜ்வர லக்ஷணம் என்று அறியவும்.

**तच्चिकित्सा (இதற்கு வைத்தியம்)**

त्रिफला त्रिकटु ग्रन्थि दीप्यकैः वचया कृतः ।
चित्रकाभ्यां च क्काथोऽजीर्णज्जवरापहः ॥

(டீகா) கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலிமூலம், ஓமம், வசம்பு, சித்திரைமூலம், சங்கன்வேர் இது சமபாகம் கஷாய மிட்டுக் கொடுத்தால் அஜீர்ண ஜ்வரம் போகும்.

**अभिघातज्वरलक्षणम् (அபிகாதஜ்வர லக்ஷணம்)**

दूरव्यायामकृषिभिः जायते ज्वर उत्कटः ।
दाहःसर्वाङ्गवैकल्यं स्वेद सन्ताप विभ्रमौ ॥
शीतलं भोजनेवाञ्छा अभिघातज्वराकृतिः ॥

(டீகா) வெகுதொலைவுநடந்து அலுத்தாலும், வயலில் வேலைசெய்து அலுத்தாலும், அபிகாத ஜ்வரம் பிறக்கும்.

**இதன் லக்ஷணம் :**

தாகமுண்டாகும், உடல் நோகும், புழுக்க முண்டாகும். வியர்வை உண்டாகும். குளிரும். ஜ்வரம் தீவிரமாயிருக்கும். இதனை அபிகாத ஜ்வரம் என்று அறியவும்.

**ऐहिकज्वरलक्षणम् (ஐஹிகஜ்வர லக்ஷணம்)**

अतः परं प्रवक्ष्यामि ऐहिकज्वरलक्षणम् ।
शीतं सप्रलुकं श्वास दाह सन्ताप हृद्रुजः ॥

शिरोरुजाङ्गवैकल्यं कुक्षिपार्श्वे च शूलकृत् ।
अपथ्यं वाञ्छा तन्द्रा च पादहृन्मुख शोफकृत् ॥

गात्रं पाण्डुरवर्णं च पीतवर्णे च लोचने ।
नखवर्त्म च नीरक्तं अतिसारस्य जाड्यता ॥

करपाद विदाहश्च ऐहिकज्वरलक्षणम् ॥

ऐहिकज्वरसन्तापो तत्र मूर्च्छा मधूष्णिका ।
वचनाल्पश्रुति स्वल्पौहिकज्वरलक्षणम् ॥

(டீகா) ஜ்வரம் வரும்போது குளிர்வரும். சரீரம் புளகிக்கும். தாகம் உண்டாகும். கண்கள், தலை, உடல், வயிறு, பக்கங்கள் ஆகியவை நோகும். அபத்தியம் பண்ண கால், வயிறு, முகம் இவைகள் வீங்க, சரீரம் வெளுத்திருக்க கண்கள் பெருத்திருக்க, கண்களிலும் நகங்களிலும் இரத்தமின்றியிருக்க, வயிறு போகப் போட்டால் போட்டகை போட்டாப் போலிருக்க, உள்ளங்கால், உள்ளங்கை அழுத்த இவைகளெல்லாம் ஐகிக ஜ்வர லக்ஷணம் என்று அறியவும்.

**तच्चिकित्सा (இதற்கு வைத்தியம்)**

महाबला च भूनिम्बः त्रिफला शारिबा वरा ।
क्काथः नागरसंयुक्तः ऐकाहिकज्वरं हरेत् ॥

**द्व्याहिकज्वरलक्षणम्**

एकरात्रमतिक्रम्य स शीतज्वरसम्भवः ।
मन्दाग्नि हृदयतापः द्व्याहिकज्वरलक्षणम् ॥

**तच्चिकित्सा**

पटोलो जलदं शुण्ठी विशालामृतपर्पटम् ।
क्वाथः पिप्पलिसंयुक्तः हरति द्व्याहिकं ज्वरम् ॥

**त्र्याहिकज्वरम्**

त्रिरात्रां शीतमाधाय ज्वरोज्जृम्भण मान्द्यकम् ।
मलबन्धोऽग्निमान्द्यं च त्र्याहिक ज्वरलक्षणम् ॥

**तच्चिकित्सा**

अरण्यतुलसी द्राक्षा शुण्ठी भाङ्गी विशालिका ।
सहदेवी बला क्वाथः त्र्याहिकं च ज्वरं हरेत् ॥

**चातुर्थिकम्**

त्रिरात्रगतर्मुद्रेच्छर्दीहिध्माह्यरोचकम् ।
रोमहर्षस्समुज्जृम्भा ज्वरसन्ताप विश्लथः ॥
ज्वरः चातुर्थिकश्चैव कृशङ्तस्स्वेद संभवः ॥

**तच्चिकित्सा**

पटोलच्छविका शुण्ठी जीवनी तुलसी बला ।
विष्णुक्रान्ता वराक्काथो हरेच्चातुर्थिकज्वरम् ॥

**पञ्चाऽहिकज्वरम्**

चतुर्दिनं अतिक्रम्य ज्वरश्चर्द्दिर्विज्जृम्भणम् ।
वमनं दाहसन्तापैः पञ्चाहिक ज्वरलक्षणम् ॥

**तच्चिकित्सा**

त्रिफला दीपनी शुण्ठी वाराही शारिबाऽमृता ।
कटुम्बरा हरिद्राभिः क्वाथः पञ्चाहिकं हरेत् ॥

**पक्षान्तज्वरम्**

एकपक्षान्तमाश्रित्य स्नानभोजनजागरैः ।
गुरुत्वं माम्स सम्भूतं पक्षान्तज्वर लक्षणम् ॥

**तच्चिकित्सा**

बलात्रयं काकजंघी भूनिम्बनिम्बचित्रकैः ।
वाराही नागरैः क्काथः सर्वाहिक विनाशनः ॥

**मासान्तज्वरम्**

मासमेकं ज्वरः तीक्ष्णः ज्वरः रक्ताङ्गमाश्रितः ।
आहारश्च विहाराणां क्रोधः शैत्यमरोचकम् ॥
धातुक्षीणं बलक्षीणं मन्दाग्नि धातुशोषितम् ।
मासान्तज्ज्वरमाप्नोति मार्जारवधमाश्रितः ॥

**वर्षान्तज्वरम्**

वातदेहि च मन्दाग्नि आमप्रतिकरं रुजा ।
चश्चारं देहभारश्च गुरुत्वं देहसंभवम् ॥
देहनष्टं मदालस्य वर्षान्तज्वर लक्षणम् ॥

**सर्वकालज्वरलक्षणम्**

धातुशोषश्चमन्दाग्नि अजीर्णं आमवर्धनम् ।
धातुक्षीणं बलंहीनं शरीरं काष्ठसंयुतम् ॥
पाचं च वमनंश्वेदं सर्वकालज्वरं कृतिः ॥

**अस्थिज्वरलक्षणम् (மாம்ஸகத ஜ்வரம்)**

**अन्तर्दाहः बहिर्दाहःकौटिल्यं संहितज्वरः ।**
**क्षयः पाण्डुरदैहः च ज्वरमस्थिमतं विदुः ॥**

*(டீகா) அந்தர் தாஹமுண்டாக, உடம்பு குளிர்ந்திருக்க, குடிலஜ்வரம் ஸந்ததம் உண்டாக, உடம்பு இளைக்க, சரீரம் வெளுக்க இது அஸ்திஜ்வர லக்ஷணம் என்று அறியவும்.*

**रक्तदेहज्वरलक्षणम् (ரக்ததேஹ ஜ்வர லக்ஷணம்)**

ज्वरोष्णं च सतृद्दाहः मदालस्यं मतिभ्रमः ।
अङ्गवैकल्यमूर्च्छे च ज्वरो रक्तगतः स्मृतः ॥

(டீகா) தீவிரமாய் சுரம் உண்டாயிருக்க, தாகம் உண்டாகும். மதி (அறிவு) பிரமையுண்டாகும். இவை இரத்த ஜ்வரத்தின் லக்ஷணம் என்று அறிக.

**मांसगतज्वरम् (மாம்ஸகத ஜ்வரம்)**

अतितीव्रज्वरं श्वासास्वैदत्रिष्णाङ्गसंव्यथा ।
तद्राविदाह पुलकं मूर्च्छमांसगत ज्वरम् ॥

(டீகா) ஜ்வரம் தீவிரமாயிருக்க, இருமல் உண்டாக, புழுக்கம் உண்டாக, உதடு உலர்ந்துபோக, உடல்நோவு உண்டாக, பிரமை உண்டாக, சரீரம் விதஹிக்க, மூர்ச்சை உண்டாக இவை மாம்ஸ ரத்தஜ்வரம் என்று அறியவும்.

**सन्निपातज्वर लक्षणम् (ஸந்நிபாத ஜ்வர லக்ஷணம்)**

अतः परं प्रवक्ष्यामि सन्निपातज्वर क्रमम् ।
कर्णे ललाटवक्षे च स्वेदस्तन्त्रामतिभ्रमः ॥

अङ्गव्यथा शिरोरुग्दाहसर्वाङ्गनेत्रयोः ।
नेत्रे शोणित कफद्दाह मूर्च्छाभ्रान्ति प्रलापकः ॥

हृच्छूल कुम्भनं हिक्का काशश्वासश्च हर्षणम् ।
सन्निपातज्वरं घोरं वैद्योजानाति निश्चयम् ॥

(டீகா) கழுத்து, நெற்றி, மார்பு ஆகிய பகுதிகளில் வியர்வை உண்டாகும். மதிப்பிரமை, உடல்வலி, தலைவலி உண்டாகும். சர்வாங்கங்களும் தகிக்கும். கண்கள் சிவந்தும் அல்லது பச்சை நிறமாகிலும் இருக்கும். மூர்ச்சை உண்டாகும். பிராந்தியுண்டாகும். இருமல், திணறல், விக்கல் உண்டாக, குளிர்ந்து கொண்டிருந்தால் இது ஸன்னிபாத ஜ்வரம் என்று அறியலாகும்.

ततोवक्षोत्रयो तस्यां सन्निपातस्य लक्षणम् ।
तान्त्रिकश्चाण्डकश्चैव रुग्दाहः चित्तविभ्रमः ॥

शीताङ्गः तान्त्रिकःचैव कण्ठकुब्जः च कर्णिका ।
भुग्ननेत्रः च रक्तोष्ठः प्रलापो जिह्वकस्तथा ॥

अभिन्यासः इति प्रोक्ताः सन्निपातास्त्रयोदश ॥

(டீகா) தாந்திரிகம், அண்டகம், ருக்தாகம், சித்தவிப்ரமம், அங்கம் சிலிர்ப்பு, கண்டகுப்ஜம், கர்ணிகம், புக்னநேத்ரம், ரக்தோஷ்டம், ப்ரலாபம், ஜிஹ்வகம், அபின்யாஸம் என்று கூறப்படும் ஸந்நிபாதங்கள் பதின்மூன்று வகைப்படும்.

**तान्त्रिकगुणम् (தாந்திரிகத்தின் குணம்)**

स्वरूपं पूर्वमुच्छ्रला शोहवातश्च वेदनम् ।
कफस्तान्त्रनुतापश्च श्वासःकण्डून रूपहक् ॥
बद्धप्रलापः तन्द्रा च जिह्वा श्यावा सकण्टका ।
कठिना निर्द्रवा शुष्का सन्तापश्चातिसारतः ॥

(டீகா) ஸ்வரூபம் பூர்வம்போலேயிருக்க, குதிரதுண்டாயிருக்க,அள்ளயள் நோக, உடம்புவீங்க, விதாகிக்க, இருமலுண்டாக, அன்யதா சிந்தையா யிருக்க, தாகம் உண்டாக இதி தாந்திரிக ஸந்நிபாத மென்று அறியவும்.

**तच्चिकित्सा**

पाटली चित्रवरुणा सिन्धुवार दुरालभा ।
पटोल नागरैः क्वाथः तान्त्रिके सन्निपातके ॥

(டீகா) பாதிரிவேர், சித்திரமூலம், மாவலிங்கவேர், நொச்சிவேர், சிறுகாஞ்சோறிவேர், பேய்ப்புடல் இவை ஸமம் கூட்டி கஷாயமிட்டு மூன்றுநாள் கொடுத்தால் தாந்திரிக ஜன்னிபோம்.

**भूतभैरव रसः (பூதபைரவ ரஸம்)**

पारदं गन्धकं ताम्रं मर्द्यं वह्निकषायके ।
वज्रभूषान्तरे पाच्यं वालूका यन्द्रके दिनम् ॥
मार्जार जाम्बूकैः पित्तैः भावितं प्रहरद्वयम् ।
गुञ्जामात्रंचानुपानैः दद्यात् शीतोदकेन वा ॥

सन्धिकं तत्क्षणे हन्ति दध्यन्नं पथ्यमाचरेत् ।
नारीकेलोदकं पाने रसोयं भूतभैरवः ॥

(டீகா) சுண்டி, சுத்தி செய்த பாதரஸம், கந்தகம், தாம்பர பஸ்பம் இவை ஸமபாகங்களை சித்திமூல கஷாயத்தில் மர்தித்து வஜ்ரமூசையிலே வைத்து வாலுகா யந்திரத்தில் ஒருநாள் ஆக்கி, இறக்கி, பூனைப்பிச்சிலும், நரிப்பிச்சிலும் இரண்டு சாமம் பாவனை செய்து, குந்துமணிப் பிரமாணம், இளநீரில் அனுபானமாகக் கொடுத்தால் தாந்திரிக ஜன்னி போகும். இதற்கு இச்சாபத்தியம் போடவும். இது ஸண்டிக சன்னிக்கு பூதபைரவ ரஸம்.

**वातानां सङ्ग्रहः *(வாதரோகங்களின் தொகுதி)***

ऊर्ध्ववातः शिरोवातः पक्षघातश्च पार्श्वकः ।
अर्धाङ्गं कण्ठपादश्च ऊरूस्तम्भश्च वातकम् ॥

धूमो विधूमश्शुष्काङ्गः जिह्वाङ्गः कफवातकः ।
स्कन्धकः कन्धर पादाख्यौ मधुवस्ति क्षुतानिलाः ॥

श्रृङ्खलश्चाथ विस्फोटः स्नायुवातोऽथ ग्रध्रकः ।
प्रांशुस्स्खलन शुक्राख्यौ पूतिकाख्यस्त्वचोऽनिलः ॥

भोगकिङ्कसवातौ च कटिवातोऽपरोऽनिलः ।
मलमूत्रबद्धाख्यौ ह्यूरुवातोऽथ सुप्तिकः ॥

ऊरूस्तम्भश्च कम्पश्च बाहुशीत सिरा निलाः ।
नयनं च तथा नासा मुखोदर विकुक्षयः ॥

अजीर्णाम्लानुलोमानां विलोमधनुषोस्तथा ।
पक्षघातोऽथ चार्धाङ्गः पार्श्वातपप्रकोपजौ ॥

अग्निवातोह्याढ्यवातः पाण्डुश्वेतज वातकौ ।
सन्धिवातस्साध्यवातः शिरस्खरविहीनकौ ॥

रक्तवातश्च क्षीणोऽथ खञ्जवातः कलात्मकः ।
सर्वाङ्गवातस्स्त्यानश्च गुल्बजानूद्भवौ मतौ ॥

जङ्घाऽङ्गुलीभवौ वातावस्थि भ्रमणजौ स्मृतौ ।
काकवातः पङ्गुवातः दण्डमन्दौ च कोष्ठकः ॥
गुल्मम्जाक्षतानां च वसाऽणुदधिजा मताः ।
कर्णवातः चोर्ध्ववातः आत्मवातः प्रकीर्तितः ।
इत्येवं कीर्तिता वाताः शास्त्रेऽशीति प्रमाणकाः ॥

**अशीतिर्वातगुणम्**

ऊर्ध्व दोषश्च निश्वासो स्फोटस्याश्वासकाशयोः ।
अन्नं क्षीणं च . . . . . . . . . . . . . . . . . ॥
शिरसः पादपर्यन्तं अर्धाङ्गे हतचेष्टता ।
महच्छूलं दिवारात्रं पक्षघातस्य लक्षणम् ॥
देहस्य शीतलं पार्श्वेप्युन्मादश्च शिरोभ्रमः ।
कर्णनेत्रे च विस्फोटः पार्श्ववातस्य लक्षणम् ॥
करपादयुगे कम्पः देहभ्रमणमुत्कटम् ।
निद्राभङ्गः मतिक्षैण्यं कम्पवादस्य लक्षणम् ॥
ऊरुस्तम्भश्च मेढ्रे च गुदे पादे च शूलकम् ।
रक्तवान्तिर्नखे शूलमुरुवातस्य लक्षणम् ॥
शिखिशूलं महाशुलं निद्राल्यो अङ्गकम्पनम् ।
निद्रानाशः च दुःखं च सन्धिवातस्य लक्षणम् ॥
कटिप्रदेशशूलं च देहशूलावरोधने ।
पादेपीडा शिरोघ्राणे किक्कानिल लक्षणमं ॥

**क्षीणवातस्य लक्षणम्**

क्षीणे च वाते शिरसः व्यथा च
नासानखेरुखिलाङ्गकार्श्यम् ।
दिवा च रात्रौ स्वपन प्रणाशः
कपालनेत्राङ्ग विवृद्धशूलम् ॥

**वातस्य धूम्र**

विषूचिका वान्ति विदाहकाश्च
ज्वरोति तृष्णाप्यति सारतश्च ।
पित्तं च मूर्च्छा भ्रमणं विकारो
धूमाख्यवातन्तु वदन्ति तज्ज्ञाः ॥

**रसवातस्य**

अहोरात्रप्रलापश्च भ्रममूर्च्छा विदाहकाः ।
बाधिर्यं पादतिमिरं रसवातस्य लक्षणम् ॥

**धनुर्वातस्य लक्षणम्**

धनुषिर्वभ्रमनं च अग्निमान्द्य प्रकूजने ।
मृतं कुर्वन्तिचिह्नानि धनुर्वातस्य लक्षणम् ॥

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . 1

**नक्षत्र दोषः**

कृत्तिका नवरात्रन्तुत्रीणिरात्रन्तु रोहिणी ।
मृगशीः पञ्चरात्रन्तु आर्द्रायां प्राणनाशनम् ॥
पुनर्वसूः च पुष्या च सप्तरात्रं विशिष्यते ।
नवरात्रश्च आश्लेषा विंशद्रात्रं मखासु च ॥
फल्गुनी च द्विमासायां उत्तरायां त्रिपञ्चके ।
हस्तेनैव तु जीवन्ति चित्रमासद्धयं तथा ॥
मासार्धन्तु तथा स्वाती विशाखा विंशतिरेव च ।
अनूराधा दशम्यां च ज्येष्ठाया पक्षमेव च ॥
मूले तु नवरात्रन्तु पूर्वाषाढा त्रिपञ्चकम् ।
उत्तराषाढा विंशत्या श्रावण्येकादशी यदि ॥
धनिष्ठा चार्धमासः स्यात् शतभिषन्नवपञ्च च ।
पूर्वभाद्रपदे मोक्षं उत्तरभाद्रपञ्चकम् ॥

---

1. இடையில் சில ஏடுகள் இல்லை.
(अत्र अपूर्णाणि पत्राणि सन्ति)

रेवती शतरात्रन्तु अश्विनी नवरात्रकम् ।
भरण्येकादशदिने नक्षत्राणां यथा क्रमम् ॥

**ज्वरचिकित्सा**

समुद्रवत्सक सैन्धवानां क्षारं, अजमोदकं, वह्निः, हरीतकी, पिप्पली, श्रृङ्गबेरं, हिङ्गुविडङ्गं, मरीचपुन्नाकं, एतानि चूर्णानि कृत्वा,

लुञ्जीत पिण्डी प्रथमेषु पञ्च
वातं प्रमेहं विषमज्वरं च ।
विषूचिका कामिल पाण्डुरोगान्
श्वासश्च कासश्च कफं निहन्ति ॥

मधूकं मातुलार्धं च पयसा शारिबा बला ।
कषायं क्षीरसंयुक्तं गर्भिणी ज्वरनाशनम् ॥

अजमोदं जीरके द्वे तयोस्तुल्यं च शर्करा ।
नवनीतेन संयुक्तं गर्भिणी ज्वरनाशनम् ॥

दुरालभा चला पाठा नागरामुस्तसंयुता ।
गर्भिणी पाचकत्तोयं अतिसारविनाशनम् ॥

आरग्वधी विषामुस्ता शुण्ठी बिल्व स दाडिमम् ।
सर्वज्वरहरं हन्ति सर्वातीसारनाशनम् ॥

निम्बशलाक पटोलगुडूचो
तिक्तघनत्रिफलासमभागम् ।
क्वाथमिदं मधुशर्कयुक्तं
मारुतपित्तकफज्वर नाशम् ॥

**कर्मशेष विपाकः**

गोहत्यया वातरोगं ब्रह्महत्या च कुष्टकम् ।
शिशुहत्या भवेत्गुल्मं भ्रूणहत्या च पित्तजः ॥

कृत्रिमः श्वास रोगः देवं निन्दा भवान्धता ।
यदि निद्राविसर्पः स्याद्दाहकः पापकर्मणा ॥

विश्वासं पातकं चैव नेत्ररोगाश्च उत्कटम् ।
गुरुपत्नीयपेक्षं च रक्तपित्तविशेषतः ॥

भ्रातृपत्निरपेक्षश्च जायते कामिलाक्षयः ।
नित्यपादं सदा प्रोक्ता पुत्रशोकं तथा नरः ॥

रात्रेषु सर्वजीवानां निष्कारणवधं तथा ।
पत्नि वियोगमाप्नोति नित्यदुःखश्च कारणम् ॥

शोभक्षये मदालस्य पाण्डुरोगश्च सम्भवम् ॥

**भृङ्गराजगुणः (மஞ்சள் கரிசலாங்கண்ணியின் குணம்)**

असीति तिलसमेतं पल्लवान्भक्षयेधुः
सवितुरुदयकाले भृङ्गराजस्य पत्रम् ।
समभवच्चिरञ्जीवि व्याधिनिर्मुक्तदेहि
भ्रमरसद्रसकेशि शीर्षश्चक्षुर्मनुष्यः ॥

*(இதற்குப் பிறகுள்ள பகுதிகள் இச்சுவடியில்
காணப்பெறவில்லை. நூல் அபூர்த்தி)*

(अपूर्णोऽयं ग्रन्थः)

# வைத்திய சிந்தாமணி

## (பேஷஜ கல்பம்)

### ஸௌபாக்ய சுண்டி

சுக்கு 10 எண்ணிக்கையை எடுத்து மேல்தோலை நீக்கி அதை சின்னதாக மிளகுபோல் பொடிசெய்து, கரிசிலாங்கண்ணி சாற்றில் ஒருநாள் ஊறப்போட்டு மறுநாள் உலரவைத்து நன்றாக உலர்ந்தபின் முசுமுசுக்கை சாற்றில் ஒருநாள், கல்யாணமுருங்கை சாற்றில் ஒருநாள், விழுதி இலைசாற்றில் ஒருநாள், வல்லாரை இலை சாற்றில் ஒருநாள், இஞ்சி சாற்றில் ஒருநாள் இந்தவகை சாறுகளில், ஒவ்வொரு நாள் ஊறப்போட்டு மறுநாள் எடுத்து நன்றாக உலர்த்தி, இடித்து சலித்துக்கொண்டு பிறகு எலுமிச்சம்பழச்சாற்றை பிழிந்து மேற்படி சூரணித்திலிட்டு கலந்து நிழலில் வைக்கவேண்டும். பிறகு கடைச்சரக்கு

| | |
|---|---|
| திப்பிலி | 1 பலம் |
| வெள்ளமுது | அரைபலம் |
| கருஞ்சீரகம் | ,, |
| தாளீசபத்திரி | ,, |
| சோம்பு | ,, |
| அக்கிரகாரம் | கால்பலம் |
| கோஷ்டம் | ,, |
| கண்டுபாறங்கி | அரைபலம் |
| லவங்கப்பட்டை | கால்பலம் |
| பரங்கிப்பட்டை | அரைபலம் |
| சீரகம் | ,, |
| சித்தரத்தை | ,, |
| கொத்தமல்லிவிதை | ,, |
| ஜடாமாம்ஸி | ,, |

| | |
|---|---|
| அதிமதுரம் | கால்பலம் |
| மஞ்சிட்டி | அரைபலம் |
| லவங்கம் | அரைபலம் |

மேற்கண்ட கடைச்சரக்குகளை சேர்த்து வெய்யிலில் காயவைத்து இடித்து சலித்து வைத்துக்கொள்ளவும். பிறகு,

| | |
|---|---|
| ஜாதிக்காய் | கால்பலம் |
| குங்குமப்பூ | கால் வராகன் |
| கஸ்தூரி | ,, |
| ஜாதிப்பத்திரி | வீசம் பலம் |
| கோரோசனை | அரை வராகன் |

இவைகளை பொடிபண்ணி தனியாக வைத்துக்கொள்ளவும். மேலே சொன்ன கடைச்சரக்குக்கு சரி எடை நாட்டுச்சர்க்கரை வாங்கி பிறகு

கஸ்தூரிமஞ்சள் 5 பலம் சிறியதாய் உடைத்து கஷாயம் வைத்து அந்த கஷாயத்தை வடிகட்டி, அதில் நாட்டுச் சர்க்கரையைப் போட்டு பாகு காய்ச்சி, ஏலம், லவங்கப்பத்திரி ஆகிய இவ்விரண்டுடன் சூரணத்தை போட்டு லேகிய பக்குவத்தில் சுருங்கும்போது மற்ற சூரணங்களையும் பாகில் போட்டு கிளறி ஆறியபின்பு போதுமான அளவு தேன் விட்டு கலந்து இறக்கிவைத்துக்கொண்டு நெல்லிக்காய்ப் பிரமாணம் 40 நாள் சாப்பிடவும்.

***தீரும் வியாதிகள் :*** 1. அக்னிமாந்தீயம் 2. மேகசாறவாதகரம் 3. வாயுவோட சேர்ந்த ரோகங்களுக்கெல்லாம் கொடுக்கலாம்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம், நெய், மோர் அதிகம் சேர்க்கவேண்டும்.

## கரப்பானுக்கு மருந்து

***செய்முறை :*** கொடசாலி ரஸம், வெங்காய ரஸம், எலுமிச்சம்பழ ரஸம், காடி தண்ணீர்,

மேற்கண்டவைகளை சம அளவு எடுத்து ஒன்றாக சேர்த்து ஒரு அவுன்ஸ் வீதம் 5 நாள் அல்லது 3 நாள் உள்ளுக்குச் சாப்பிடவும்.

**வேறுமுறை :** கொடாசாலி இலையை மைபோல அரைத்து, புளித்த மோரிலே குழப்பி, மேலுக்குப் பூசி, மாலையில் வெந்நீரை ஆறவைத்து எட்டுநாள் குளிப்பாட்டினால் களிப்படை கரப்பான் நீங்கும்.

| | |
|---|---|
| வெங்காயச்சார் | எலுமிச்சம்பழச்சார் |
| கொடாசாலி ரஸம் | பழையச் சோற்றின் தண்ணீர் |

இந்த நான்கு ரஸமும் சமமாக கல்ந்து உள்ளுக்கு கொடுத்து கொடாசாலி இலையை மைபோல அரைத்து புளிச்ச மேரிலே குழப்பி மேலுக்கு பூசி மாலையில் வெந்நீரை கைப்பொருக்கும் சூட்டிற்கு ஆறவைத்து, (பச்ச தண்ணீர் கலக்காமல்) குளிப்பாட்டினால் கரப்பான் நீங்கும். இவ்விதம் 3, 5, 7 நாள் செய்யவேண்டியது.

## சரஸ்வதி லேகியம்

*செய்முறை :*

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுகுரோகிணி |
| மஞ்சள் | சிவதைவேர் |
| வசம்பு | பஞ்சதாரம் |
| வாயுவிளங்கம் | வல்லாரை |

மேற்கண்ட சரக்குகளை சம அளவு எடுத்து நன்றாக காயவைத்து இடித்து சலித்து சூரணத்தை தனியாக வைத்துக் கொள்ளவேண்டும். தினம் காலையிலும் மாலையிலும் சாப்பாட்டிற்கு முன் பசுநெய்யில் 10 கிராம் அளவு சூரணத்தை குழைத்து உள்ளுக்குக் கொடுக்க புத்தி கூர்மை உண்டாகும். (கல்வியறிவு உண்டாகும்)

## இனிய குரல் உண்டாக மருந்து

*செய்முறை :* வசப்ர கோஷ்டம் (கோஷ்டம்) திப்பிலி

சுக்கு வல்லாரைஇலை

இவை சமஅளவு எடுத்து காயவைத்து சூரணம் பண்ணி அந்த சூரணத்தை 10 கிராம் அளவு பசுநெய்யில் 22 நாள் சாப்பிட்டால் குயில் போன்ற இனிய குரல் உண்டாகும். மயில் போன்ற குரல் ஓசையும் உண்டாகும். சங்கீதம் கற்றுக் கொள்ளுவதற்கு ஏற்ற குரல் உண்டாகும்.

**பித்த காங்கைக்கு மருந்து**

***செய்முறை :*** சுக்கை எலுமிச்சம்பழச்சாற்றில் சுத்திசெய்து, பின் கரிசலாங்கண்ணி சாற்றிலும், செவ்விளநீர் நீரிலும், திப்பிலியை முசுமுசுக்கை சாற்றிலும், மிளகை பசும்பாலிலும், சுண்டுகிற வாரைக்கும் ஊறவைத்து அதை எடுத்து வெயிலில் காயவைத்து இடித்து சூரணம் பண்ணி அந்த சூரணத்திற்கு சம அளவு சீனி சர்க்கரையோ அல்லது நாட்டு சர்க்கரையோ சேர்த்து 10 கிராம் அளவு 45 நாள் சாப்பிடவும்.

***தீரும் வியாதிகள்:*** கைகால் எரிச்சல், கண் எறிவு, தலை சுற்றல், வாந்தி, உடற்தினவு முதலியன.

**அறிவு வளர்ச்சிக்கு மருந்து**

***செய்முறை :*** சீந்தில்கொடி
வாயுவிளங்கம்
வசம்பு
கோஷ்டம்
நாயுருவிவேர்
நல்ல கடகவிதை
கடுக்காய்
பூனைபிச்சரிவேர்
(பூனைக்காலி வேர்)

மேற்கண்டவைகளை சமஅளவு எடுத்து சூரணம் செய்து நெய்யிலும் கலந்து சாப்பிட்டால் அறிவு வளர்ச்சியை வலுப்படுத்தும்.

**வெறிநாய்க் கடிக்கு மருந்து**

***வெறிநாய் கடித்ததின் அறிகுறி :*** கண்ணிலே சிகப்பு கொடுக்கும், நாய் முனகுவதுபோல் முனகுவான், உடம்பு வீங்கும், வலிப்பு உண்டாகும். சூலை நோவுண்டாகும்,

தலையை ஆட்டிக்கொண்டே இருப்பான், வாந்தி, விக்கல் உண்டாகும். உடம்பு உலர்ந்து போயிருக்கும். இந்த அறிகுறி உள்ள வெறிநாய் கடித்தவருக்கு மருந்து

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வெள்ளைப்பூண்டு |
| இந்துப்பு | வசம்பு |

இவைகள் சமஎடை எடுத்து சூரணம் பண்ணி பசும்பாலிலே உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் தடவினால் வெறிகடித்த விஷம் வாங்கும்.

***வேறுமுறை :*** நாயுருவி செடி சமூலம் கொண்டுவந்து இடித்து உள்ளுக்குக் கொடுக்க வெறிநாய் கடித்த விஷம், புலிக்கடித்த விஷம் முதலாகியதும் இறங்கும்.

***வேறுமுறை :***

| | |
|---|---|
| மாதுளம் கொழுந்து | வன்னி இலை |
| அறுகம்புல் | எள்ளு |
| வெல்லம் | வெள்ளைக் குங்கிலியம் |

இவைகளைச் சமஅளவு எடுத்து அரைத்து கடித்த வாயிலே பூச விஷம் இறங்கும்.

***வேறுமுறை :*** கடுகு, வெல்லம், நெய் இவைகளை ஊமத்தை இலைச்சாறு கூட்டி அரைத்து வெறிநாய் கடித்த இடத்தில் தடவ விஷம் இறங்கும்.

***வேறுமுறை :*** சித்ரமூலம் (கொடிவேலி) கொண்டுவந்து நெய்விட்டு அரைத்து பூசினால் விஷம் இறங்கும். இதற்கு மந்திரம்

ஓம் நமோ நாரசிம்ஹாய
விஷ்ணுதேவாய, வாமநாய
அம்ருத சொரூபாய,
வாசுதேவாய, நமோ நம:

## நரைபோக மருந்து

*செய்முறை :* குந்துமணிவேர் முருங்கன்வேர்
சேராங்கொட்டை முள்ளிக்காய் வேர்
தாசானி பூ என்னும் செம்பருத்திப்பூ

இவற்றை சம அளவு எடுத்து சூரணம் பண்ணி தேனில் குழப்பி தலையில் தடவி வந்தால் மயிர் கருத்து வளரும்.

*வேறுமுறை :* திப்பிலியை கருப்பு பசுவின் கோமயத்தில் போட்டு அத்துடன் செம்பருத்திப் பூவையும் சேர்த்து அரைத்துத் தலையில் தடவினால் மயிர் கருப்பாகும்.

*வேறுமுறை :* குந்துமணிவேர், முள்ளிக்காய்வேர் இவற்றை அரைத்துத் தலையில் தடவினால் மயிர் கருப்பாகும்.

## பேன் போக மருந்து

*செய்முறை :* கருப்பு அல்லிக்கிழங்கு, நாககேசரம் இவ்வை இரண்டையும் சம அளவு எடுத்து நெல்லிக்காய்ச் சாற்றில் அரைத்துத் தலையில் தடவினால் பேன் செத்து சுத்தமாய் விட்டுப்போகும், மீண்டும் வராது.

*வேறுமுறை :* முருங்கைவேர், கோஷ்டம் இவை இரண்டையும் சம அளவு அரைத்து நல்லெண்ணையில் கலந்து தலைமயிரில் தடவினால், பேனும் தலைக்கனமும் தலைநோவும் தீரும்.

*வேறுமுறை :* வெற்றிலைச்சாற்றில், பாதரசத்தை அரைத்து தலையில் தடவினால் பேன் அத்தனையும் செத்துப்போகும்.

*வேறுமுறை :* மனோசிலை சந்தனம்
வாயுவிளங்கம் கடுகுரோகிணி
இவைகளை சம அளவு எடுத்து கோமூத்திரத்தில் அரைத்து காயவைத்துப் பொடிசெய்து நல்லெண்ணெயில் குழப்பி

தலைக்கு தேய்த்து வந்தால் பேன் எல்லாம் செத்துப்போகும். மீண்டும் வராது.

## இரத்தபேதிக்கு மருந்து

***செய்முறை :*** மாதுளங்காய்வத்தல் மாதுளங்கொழுந்து
அதிமதுரம் துளிர்வில்வம்
கோரைக்கிழங்கு (வில்வக்கொழுந்து)

இவைகளை சம அளவு எடுத்து கசாயம் போட்டு உள்ளுக்குக் கொடுக்க சகலவிதமான பேதிகளும் போகும்.

## கர்ப்பிணி சுவாசத்துக்கும் இருமலுக்கும் மருந்து

***செய்முறை :*** கடுக்காய் அதிமதுரம்
சுக்கு சிறுதேக்கு
கடுகுரோகிணி

இவை சம அளவு எடுத்து சூரணம் பண்ணி வெல்லப்பாகு காய்ச்சி அதில் சூரணத்தைப் போட்டு லேகியமாகக் கிளறி நெல்லிக்காய் பிரமாணம் கொடுக்க கர்ப்பிணி சுவாசம் இருமல் போகும்.

## வாந்தி மயக்கத்திற்கு மருந்து

***செய்முறை :*** அழுக்கில்லாத ஒரு வெள்ளைத் துணியை, சுண்ணாம்பைக் கரைத்து தெளிகிற சமயத்தில் நன்றாக நனைத்து காயவைத்து அந்த துணியை சுட்டு கரியாக்கி அந்த சாம்பலை வெந்நீரில் கரைத்து உள்ளுக்கு கொடுக்க வாந்தியும் மயக்கமும் போகும்.

***பத்தியம்:*** தயிரும் சாதமும்.

***வேறுமுறை :*** சுக்கு உப்பு
ஏலம் லவங்கம்

இவைகளை சம அளவு சேர்த்து அரைத்து அடைதட்டி ஓட்டிலே காயவைத்து எடுத்து அதை மோரிலோ தயிரிலோ கலந்து உள்ளுக்கு கொடுத்துவர வாந்தி, மயக்கம், கழிச்சல் இவைகள் போகும்.

## மஹா ஏலாதிச் சூரணம்

*செய்முறை :*

| | |
|---|---|
| ஏலம் | லவங்கம் |
| நாககோசரம் | நல்ல சந்தனம் |
| லவங்கப்பத்திரி | ஜடாமாம்ஸி |
| தாமரைக்கிழங்கு | சூடம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கொத்தமல்லி |
| தேவதாரு | விலாமிச்சைவேர் |
| குறுவேர் | தாளீசபத்திரி |
| ஜாதிக்காய் | கபளா |
| அகில்கட்டை | ரத்தசந்தனம் |

பத்ராக்ஷி கிழங்கு என்கிற துத்த முளறி
அந்திமல்லிகை என்னும் வாடாமல்லி

| | |
|---|---|
| யஷ்டிமதுரம் | திராட்சபழம் |
| இலுப்பைப்பூ | கோஷ்டம் |
| பேரீச்சங்காய் | நிலப்பனங்கிழங்கு |
| யானைத்திப்பிலி | அட்டரஸம் |
| பாவட்டைவேர் | சீரகம் |
| மஞ்சள் | வசம்பு |
| சிறுமுசிட்டைவேர் | தூகாக்ஷீரி |
| நெல்லிப்பருப்பு | சிவதைவேர் |
| அல்லிக்கிழங்கு | எலிக்காது செடிமூலம் |
| நெரிஞ்சிவேர் | தக்கோலம் |
| காசுகட்டி | நிலவேம்பு |
| கண்டுபாரங்கி | கருப்பு அல்லிக்கிழங்கு |
| ரேணுகை | சீந்தில்கொடி |

இவைகள் வகை 48யும் சமபாகம் கூட்டி சூரணம்பண்ணி சலித்து வைத்துக்கொண்டு 10 கிராம் அளவு தேன் அல்லது பசும் நெய்யில் குழைத்து தினம் இரண்டுவேளை 40 நாட்கள் சாப்பிட வேண்டும்.

***தீரும் வியாதிகள் :***

| | |
|---|---|
| ஸ்லேஷ்ம பைத்தியம் | தலைநோய் |
| மேகம் | தலைச்சுற்றல் |
| அரோசகம் | உஷ்ணம் |
| உன்மாதம் | தீபனம் |
| சூர்யதேஜஸ் | ஸர்வ கன்னி ஸௌக்யம் |

மலபந்தம் இவைகள் போகும்.

## நிலப்பனங்கிழங்கு கல்பம்

***செய்முறை :*** பொன்வர்ணமாய் இருக்கிற பூவோடு கூடியிருக்குமிதை நிலப்பனங்கிழங்கு என்று சொல்லப்படுகிறது. ஆத்மாவை ரக்ஷிக்க ஏற்பட்டது. பரத்யேக பலனைக்கொடுக்கும். இது தினம் யாருடன் இருக்கிறதோ அவர்கள் குழந்தைகள், பேரன் பேத்திகளுடன் சகல சௌபாக்யங்களுடன் இருப்பார்கள். வழக்காடுகின்றவர்களுக்கு இம்மூலிகையை நெற்றியிலே தரித்தால் ராஜபயத்திற்கும், புலிக்கும் வெளியில் திருடர் பயத்திற்கும், கையிலிருந்தால் ஆத்மரக்ஷையும், இந்த நிலப்பனை புஷ்பத்தினால் சர்வ சித்தியும் உண்டாகும். மேலும் சபைக்கு போகிறவர்களுக்கு கையிலேயும், ராஜா வீட்டிற்கு போகிறவர்களுக்கு தலையிலேயும் வைக்க சர்வ சௌபாக்யம் உண்டாகும். இது கையிலே இருந்தால் வியாதிகள், ஜுரங்கள், பூதங்கள், பேய் பிசாசுகள் இவைகள் சேராது. இது பிரம்மாவால் சொல்லப்பட்டது. இதனால் பூதங்கள், பேய் பிசாசுகள், எதிரிகள் நாசத்தை அடைவார்கள். இது உண்மை. இந்த கந்தர்வர், யக்ஷர், ராக்ஷஸர் இந்த மரத்தை எந்தக் காரியத்துக்கும் யோசித்தபின்தான் முடிவு எடுப்பார்கள்.

## இந்த மரத்தின் அறிகுறியும் இதை உபயோகப்படுத்தும் முறையும்.

இதன் பழம் பொன்னிறமாய் இருக்கும். இலை பேரீச்சன் இலைபோல் இருக்கும். பனைமொக்கு போல முன்னே இருக்கும். இதற்குப்பெயர் நிலப்பனை. இதை

அஷ்டமி, நவமி, அமாவாசை, சதுர்த்தசி, பௌர்ணமி இவைகளில் மிகவும் சுத்தமாய் இருந்து இதன் சமூலத்தைக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி சூரணம் பண்ணவேண்டும். நல்லநேரத்தில் அந்த சூரணத்தில் சம அளவு வெல்லம் சேர்த்து தினமும் இருவேளை சாப்பிட்டால் ஆறுவகை தினவு ரோகங்கள் தீரும்.

***பத்தியம் :*** பாலும் சாதமும்.

**இதன் பலன்**

ஒரு மாதம் சாப்பிட்டால் நரை போகும். இரண்டு மாதம் சாப்பிட்டால் யானை போல பருமன் ஆவான். மூன்று மாதம் சாப்பிட்டால் முப்பது வயது ஆயுள் கூடும். இந்த சூரணத்துடன், வெல்லம், நெய் இவைகள் கலந்து ஆறு மாதம் சாப்பிட்டால் தீர்க்காயுசு உண்டாகும். நரையே வராது. மேலும் சகல வித்தைகளையும் அறியும் சக்தியை உண்டாக்கும்.

***பத்தியம் :*** காடைக்கன்னி, அரிசிசாதம், பாலும் சாப்பிட வேண்டியது.

***இதன் பலனும் அனுபானமும் :*** இந்த சூரணத்தை, கோமூத்திரத்தில் கொடுக்க சகல ஜுரம் நீங்கும். தேனில் கொடுக்க, திரிராத்ர ஜுரம் நீங்கும். பாலில் கொடுக்க சாதுர்த்திக ஜுரம் நீங்கும். ஜுரத்திற்கு இந்த முறைப்படி கொடுக்கவும்.

**விஷத்திற்கு**

இம்மூலிகையை, தேள் கொட்டினால் தண்ணீர்விட்டு அரைத்து கண்ணுக்கு மைபோல இடவும். நிலப்பனை இலையும், கடுக்காய், திப்பிலி, சுக்கு, மஞ்சள் இவைகள் சமமாய் சூரணம் பண்ணி 10 கிராம் அளவு காலையில் ஒரு மாதம் சாப்பிட்டால் சகல விஷரோகங்களும் நீங்கும்.

நிலப்பனங்கிழங்கு, சுக்கு, கொடிவேலி, தேவதாரு இலை இவைகள் சரி எடை தூள் பண்ணி வெல்லப்பாகு காய்ச்சி, லேகியம் பண்ணி ஒரு மாதம் சாப்பிட ஆறுவித ரோகங்கள் போகும். இந்த கிழங்கு சூரணம் தேனில் சாப்பிட வயிற்றில் உள்ள ரோகம் தீரும். மூத்திர ரோகங்கள் தீரும். தேன் நெய்யில் இந்த கிழங்கும், திப்பிலியும், தேய்த்துக் கண்ணுக்குப் போட்டால் கண்படலம்,துர்மாம்சம், கண்ணில் நீர் வடிதல், கண்ணில் பூ விழுதல் இவைகள் தீரும். இந்த சூரணத்தைப் பசுவின்பாலில் சாப்பிட்டால் க்ஷயரோகம் தீரும். குஷ்டரோகங்களும் தீரும். வசம்பு, அஞ்சனக்கல், இந்தக்கிழங்கு ஆகிய இம்மூன்றையும் வெள்ளைப்பூண்டு ரசத்தில் அரைத்து பாம்பு கடித்த இடத்தில் தடவினால் சகலவித பாம்புகடி விஷமும் தீர்ந்து போகும்.

## சீந்தில் சர்க்கரை எடுக்கும் முறை

முற்றின சீந்தில் கொடியை கொண்டுவந்து கையால் மேல்தோலை உரித்து எடுத்து சிறு துண்டுகளாக வெட்டி உரலில் போட்டு தண்ணீர்விட்டு நன்றாகப் பிசைந்து வடிகட்டிக்கொண்டு அதை வாய் அகன்ற பாத்திரத்திலிட்டு வெய்யிலிலே வைத்து தெளியவைக்க வேண்டும். தெளிந்த நீரை அப்புறப்படுத்திவிட்டு, அடியில் இருக்கும் குழம்பு போன்றுள்ளதை வெய்யிலில் காயவைத்துக்கொண்டு இருந்தால் தண்ணீர் எல்லாம் சுண்டி வெண்மையான சர்க்கரை கிடைக்கும். அந்த சர்க்கரையை எடுத்து வைத்துக்கொண்டு, கருவங்க பஸ்பம் முறைப்படி சேர்த்து, நெய்யில் அல்லது தேனில் அல்லது பசும் வெண்ணெயிலாவது அநுபானமாகக் கொடுக்க நல்ல பசியும் சகலவிதமான மேக வியாதிகளும் தீரும்.

## நன்றாகப் பசியெடுப்பதற்கு மருந்து

எவக்ஷாரம், சுக்கு இந்த இரண்டையும் தூள் பண்ணி நெய்யிலே சாப்பிட்டால், நல்லபசி உண்டாகும்.

*வேறுமுறை :* 1 திப்பிலி இந்துப்பு
கடுக்காய் கொடிவேலி

இவைகளை சமபாகம் சேர்த்து சூரணம் பண்ணி, வெந்நீரில் சாப்பிட்டால் நல்ல பசியுண்டாகும்.

2. நொச்சியிலை ஓமம்
கொடிவேலி பெருங்காயம்
சுக்கு இந்துப்பு

இவைகளை சமபாகம் சேர்த்து சூரணம் செய்து சாப்பிட்டாலும் நல்ல பசியுண்டாகும்.

**சீத தோஷம், ஜுரங்கள் ஜன்னிக்கு உரிய மாத்திரை**

*செய்முறை :* வசம்பு வெள்ளைக்கடுகு
சாட்டரணை வெள்ளைப்பூண்டு
சுக்கு திப்பிலி
மிளகு மணிப்புங்கம்
பழத்தோல்

இவைகளை சமபாகம் சேர்த்து புளித்த கழுநீர் சேர்த்து மைபோல அரைத்து பயறு அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவேண்டும். இந்த மாத்திரையை புளித்த கழனியிலாவது, எலுமிச்சம்பழச் சாற்றிலாவது, ஒரு மாத்திரை கொடுக்க சீத தோஷம், ஜுரங்கள், ஜன்னி தீரும்.

***பத்தியம் :*** இதற்கு புளி தவிர்க்கவும்.

**சிறுகுழந்தைகளின் மாந்தத்திற்குரிய விளக்கெண்ணெய்**

*செய்முறை :*

விளக்கெண்ணெய் படி ஒன்று வல்லாரை இலை
கற்பூரவல்லி இலை விழுதியிலை
சிகப்பு நொச்சியிலை மணத்தக்காளியிலை

| | |
|---|---|
| நாய்துளசியிலை | நல்ல துளசியிலை |
| கரிசிலாங்கண்ணியிலை | பொன்னாங்கண்ணியிலை |
| முசுமுசுக்கையிலை | வில்வயிலை |
| மாசிப்பத்திரியிலை | ருத்திரத்செடை |
| நொணாயிலை | நெட்டப்பெருமறட்டை |
| பெருமுட்டி | பூலாங்கிழங்கு |

இந்த வகைச்சாறு எல்லாம் சேர்த்து படி இரண்டு இத்துடன் விளக்கெண்ணெயும் சேர்த்து தைல முறைப்படி காய்ச்சி எடுக்கவும். தக்க அளவு எடுத்து தைலத்தை உள்ளுக்குக் கொடுக்க மாந்தம் போகும்.

***வேறுமுறை :*** சாட்டறணை, மூக்கரட்டை, ஆதண்டை இவைகளின் வேர்களை தனித்தனியே வறுத்து பொடிபண்ணி சேர்க்கவேண்டும். வட்ட கிலுகிலுப்பை, புலிக்கரணை இவ்விரண்டின் மேல்தோலை சீவி எண்ணெய்விட்டு வறுத்த எண்ணெயில் சேர்க்கவும்.

***கடைச்சரக்குகள் :***

| | |
|---|---|
| வசம்பு | கொத்தமல்லி |
| கடுகுரோகிணி | தாளீசபத்திரி |
| குருசானி ஓமம் | சோம்பு |
| கருஞ்சீரகம் | கிராம்பு |
| திப்பிலி | நாய்க்கடுகு |
| வெந்தயம் | பரங்கிப்பட்டை |

இவைகள் வகைக்கு ¼ பலம் எடுத்து எண்ணெய் விட்டு வறுத்து அரைத்து சேர்த்துக்கொள்ளவும். எண்ணெய் காய்ச்சும்பொழுது பூண்டு ¼ பலம், வெங்காயம் ¼ பலம் இவ்விரண்டையும் நசுக்கிப் போடவும். தைலத்தை இறக்கும் சமயத்தில் ஜாதிக்காய் அரைக்கால் பலம், ஜாதிப்பத்திரி அரைக்கால் பலம், வால் மிளகு அரைக்கால் பலம், குங்குமப்பூ 1 வராகனெடை, கோரோசனை 1 வராகனெடை இவைகளை தனித்தனியாகப் பொடிசெய்து எண்ணெயில் சேர்க்கவும். இந்த எண்ணெயை சகலவிதமான மாந்தத்திற்கு குழந்தைகளுக்கு உள்ளுக்கு கொடுக்கவும்.

## மதுமேகத்துக்கு மருந்து

இலவன் மரத்தின் பிசினைக் கொண்டுவந்து நன்றாக பொடிசெய்து தேனில் குழைத்து இருவேளை வீதம் மூன்று நாள் சாப்பிட மதுமேகம் போகும்.

*பத்தியம் :* பால் சாதம்.

## சூலை நோவுக்கு மருந்து

யவச்சாரம், கொடிவேலி, இஞ்சி இவைகளை சமபாகம் கூட்டி முள்ளங்கிக் கிழங்கு ரசமாவது, எலுமிச்சம்பழம் ரசமாவது விட்டு அரைத்து கலக்கி சாப்பிட்டால் சூலைநோய் குணமாகும்.

*பத்தியம் :* பால் சாதம்.

## கண்ணுக்கு மருந்து

முற்றின வெள்ளைச் சாட்டரணைவேர் கொண்டுவந்து, நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு அதை நன்றாகப் பொடிசெய்து அதை நெய்யில் குழப்பி கண்ணில் போட்டுக் கொள்ள கண்ணில் உள்ள பூ போகும்.

## பெருமூச்சுக்கு மருந்து

| | |
|---|---|
| பெரண்டை | கடுக்காய்த்தோல் |
| சேராங்கொட்டை | ஓமம் |
| உப்பு | |

இந்த ஐந்தையும் சமபாகம் சேர்த்து இடித்து நெல்லிக்காய் அளவு உருண்டை செய்து காலையிலும் இரவிலும் சாப்பிட பெருமூச்சு சரியாகிவிடும்.

## சொறிசிறங்குக்கு மருந்து

ஓமத்தை கரிசிலாங்கண்ணி சார் விட்டரைத்து சிறங்கிற்கு பூச வேண்டும். விஸர்ப்பம் என்னும் தோல்

வியாதியும், அரிப்புகளுடன் கூடிய சொறிசிறங்குகளும் குணமாகும்.

**கண்பார்வைக்கு மருந்து**

வெள்ளைச்சாரணை வேரை வெள்ளாட்டு கோமயத்தில் வேகவைத்து உலர்த்தி, பிறகு சிறு துண்டுகளாக்கி வைத்துக் கொள்ளவேண்டும். இதை வெந்நீர் விட்டு அரைத்து கண்ணில் போட கண்பார்வை தெரியும்.

***வேறுமுறை :*** சாட்டரணை ரசத்தை கண்ணில் பிழிந்தால், கண்மயக்கம், கண்பிறை, கண்பார்வை குறைபோகும். கண்பார்வை குறை உள்ளவர்களுக்கு ரசத்தின் சக்கையை கண்ணின்மேல் வைத்து கட்டவேண்டும். குளிர்க்காய்ச்சலால் வரும் மாலைக் கண்ணுக்கும் இந்த மூலிகையை உபயோகிக்க குணமடையும்.

**வீர்ய விருத்திக்கு மருந்து**

பச்சையாய் இருக்கும் சாட்டரணை வேரை தாம்பூலத்தில் சேர்த்து போட்டுக்கொண்டால் வீர்ய விருத்தி உண்டாகும்.

**வாந்தி நிற்க மருந்து**

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | ஓமம் |
| இந்துப்பு | பெருங்காயம் |

இவைகளை சமபாகம் எடுத்து பதமாக வறுத்து பொடி பண்ணிக்கொண்டு, உணவு உண்ணும்பொழுது முதல்பிடி சாதத்தில் போட்டு பிசைந்து சாப்பிடவேண்டும். சாப்பிட்ட பின்பு

| | |
|---|---|
| இந்துப்பு | மிளகு |
| சுக்கு | சமுத்திர உப்பு |
| கல்லுப்பு | சீரகம் |

இவைகளை பொடிசெய்து மோரில் கலந்து குடிக்கவும். வாந்தி நிற்கும். நன்கு ஜீரணமாகும்.

***வேறுமுறை :*** நல்ல துளசி இலையைப் பறித்து வாயில் போட்டு நன்றாக மென்று உள்ளே விழுங்கும்பொழுது பசும் வெண்ணையையும் போட்டுக்கொண்டு விழுங்கினால் எப்படிப்பட்ட வாந்தியாயிருந்தாலும் நின்றுவிடும்.

### கண்ணில் பூப்பட்டதை நீக்க மருந்து

கல்லுப்பு, இந்துப்பு, ஆலம்பால் இவைகளை சமபாகம் கூட்டி புளித்த கழுநீர் விட்டரைத்து கண்ணில் பூச, கண்ணில் உள்ள பூ மறைந்து போகும்.

### பெருமூச்சு, இருமலுக்கு மருந்து

| | |
|---|---|
| கடுக்காய் | அதிமதுரம் |
| சுக்கு | சிறுதேக்கு |

இவை நான்கையும் சமபாகம் கூட்டி, இடித்து, சலித்து போதுமான அளவு வெல்லம் போட்டு இடித்து உருண்டை செய்து நெல்லிக்காய் அளவு சாப்பிட பெருமூச்சு, இருமல் போகும்.

### சன்னிபாத ஜுரத்திற்கு மருந்து

திராட்சைப்பழம் அல்லது கடுக்காய் ஏதாவது ஒன்று

| | |
|---|---|
| பற்பாடகம் | காரைப்பழம் |
| சிறுகோரைக்கிழங்கு | கடுகுரோகிணி |

இந்த ஐந்து சரக்குகளையும் சமபாகம் எடுத்து கசாயம் போட்டு தினம் இருவேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிட்டால் அதிகமாக பிதற்றுதல், மூர்ச்சை போனாற் போலிருப்பது, நடுங்கிப் பேசுதல், தாகம், அழுகை, நெஞ்சு உலர்ந்து போதல் இவைகளுடன் கூடிய பித்த ஜுரங்கள் தீரும்.

## ஜுரத்திற்கு மருந்து

வில்வவேர் அல்லது வில்வ இலை அல்லது வில்வப் பழத்தினுள் இருக்கும் விதையுடன் கூடிய களை ஆகிய இம்மூன்று வகையில் ஒன்றை எடுத்துக்கொண்டு இத்துடன் திப்பிலி மூலம், கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி இந்நான்கையும் சமபாகம் எடுத்து ஊரல் கசாயம் போட்டு தினமும் இருவேளை வீதம் மூன்றுநாள் கொடுக்க சீத கட்டோடு கூடிய வாதம் கபத்தோடு கூடிய ஜுரமும் நீங்கும். மேலும் விடாத குடல் நோவும் (வயிற்றுவலி) நீங்கும். பசியை உண்டாக்கும்.

## கண்ணில் காணும் சிவப்பு மறைய மருந்து

தேவதாரு கட்டை, மஞ்சள் இவற்றை வெள்ளாட்டு கோமயத்தில் அரைத்து கண்ணில்போட கண்ணிலுள்ள சிவப்பு வண்ணம் மறையும்.

*வேறுமுறை :*

| | |
|---|---|
| நல்ல சந்தனம் ஒருபங்கு | இந்துப்பு இரண்டு பங்கு |
| கடுக்காய்த்தோல் மூன்று-பங்கு | பலாசன் பிசின் நான்கு - பங்கு |

இவைகளைச் சேர்த்து மைபோல தாய்ப்பால் விட்டரைத்து, பின்பு மாத்திரையாக திப்பிலி போல திரட்டி உருட்டி நிழலில் காயவைத்துக் கொள்ளவேண்டும். பின்பு தேவையானபொழுது மாத்திரையை தாய்ப்பாலில் தேய்த்து கண்நோய்களுக்குப் போட கண்பிறை, கண்ணருவல், கண்ணில் பூப்பட்டது போன்ற கண்நோய்கள் தீரும்.

## ஒருபக்கத் தலைவலிக்கு மருந்து

சாட்டரணை இலை, கடுகு இந்த இரண்டையும் புளித்த கழுநீர்விட்டு அரைத்து பிழிந்து எடுத்துக்கொண்டு அதில் இரண்டு சொட்டு மூக்கில்விட்டு (நசியம்) நன்றாக

உறிஞ்சவும். இவ்வாறு ஒருவாரம் செய்தால் ஒற்றைத் தலைவலி போகும். இச்சமயம் தலைமுழுகக் கூடாது.

### கண்நோய்க்கு மருந்து

வெள்ளை முருங்கை இலைச்சாற்றை கண்களுக்குப் பிழிந்தால் கண்நோய் சிறிது குறையும்.

### மூலைச் சிலந்திக்கு மருந்து

எருக்கன் கட்டை, ஊமத்தன் கட்டை, அழிஞ்சிக்கட்டை, எள்ளுக்கட்டை, சாட்டரணைவேர் இவை ஐந்தும் சமபாகமாக எடுத்து ஒன்றாகச் சேர்த்து சுட்டு கரியாக்கியபின் அந்த கரிச்சாம்பலில் புதுச்சுண்ணாம்பைக் கரைத்துவிட்டு காயவைத்து அதை நன்றாக பொடிசெய்து இந்த பொடியை நீரில் குழப்பி சிலந்திப் புண்ணுக்குத் தடவினால் மூலை சிலந்தி தீரும்.

### 64 வகை தலை நோய்க்கு மருந்து

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | வெள்ளை சாட்டரணை |
| கோஷ்டம் | ஜ்யேஷ்டம் |
| மதுயஷ்டி | வசம்பு |
| இந்துப்பு | நாயுருவி விதை |

இவைகளை சமபாகம் எடுத்து ஒன்றாகச் சேர்த்து சூரணம் செய்து சிறிது நல்லெண்ணெயில் போட்டு எரிக்கவேண்டும். எரித்த நல்லெண்ணெயை வெற்றிலையில் தேய்த்து மூக்கில் விட்டு நன்றாய் உறிஞ்சினால் 64 வகையான தலை நோவுகளும், முகத்தில் உண்டாகும் ரோகங்களும், கண்ணில் உண்டான சூலைகளும் தலைவலி வகைகளும் தீரும்.

### ஜுரத்திற்கு கசாயம்

| | |
|---|---|
| நொச்சிவேர் | சீந்தில்கொடி |
| சுக்கு | கோஷ்டம் |

இவைகளை சமபாகம் எடுத்து நறுக்கி தண்ணீரில் போட்டு பாதியளவு வற்றினதும் வடிகட்டி உள்ளுக்குக் கொடுக்க கபத்தோடு கூடின ஜுரம், சுவாசம், இருமல், அரோசகம், பக்க நோவு, ஜுரத்தால் ஏற்படும் கோளாறுகள் முதலியவைகள் போகும்.

### கண்நோய்க்கு மருந்து

குதிரை மூத்திரத்தில் பாகற்காய் வேரை அரைத்து கண்ணிலே போட கண்நோவு, கண்ணிலே நீர்வடிவது, தினவு இவைகள் தீரும்.

***வேறுமுறை :*** தேவதாருகட்டையை மஞ்சளுடன் வெள்ளாட்டுக் கோமயத்தில் அரைத்து கண்ணிலே போட, கண்சிவப்பு நீங்கும்.

***வேறுமுறை :*** நாயுருவி வேரும், இந்துப்பும் சமம் கூட்டி தேன்விட்டு அரைத்து தாமிரத்தட்டிலே போட்டு, தாமிர செம்பாலே நன்கு தேய்த்து அரைத்து மையானபின் எடுத்து தாமிர டப்பியில் வைத்துக்கொண்டு, கண்ரோகத்திற்கு தினம் இரண்டுவேளை வீதம் 2 நாள் தொடர்ந்து கண்ணில்போட, கண்ணிலுள்ள நோய்கள் தீரும்.

### தலைநோவுக்கு மருந்து

திப்பிலி, மிளகு, மனோசிலை இம்மூன்றையும் புளித்த கழுநீர் விட்டரைத்து, தலையில் பத்துப் போட்டால், தலையில் பிடித்த சூலை, தலை நோவும் தீரும்.

***வேறுமுறை :*** சாட்டரணை, கடுகு இவ்விரண்டையும் அரைத்து தினம் இரண்டு வேளையும், மூன்றுநாள் நசியம் பண்ணினால் ஒற்றை தலைவலி நோவு தீரும். இதே முறையில் தலையை பற்றிய சகல நோய்களுக்கும் செய்வதுண்டு.

## பசி உண்டாக மருந்து

யவச்சாரம், சுக்கு இவ்விரண்டையும் சூரணம் செய்து பசு நெய்யிலே குழைத்து 15 தினம் சாப்பிட்டால் நல்ல பசியுண்டாகும்.

**வேறுமுறை :** திப்பிலி இந்துப்பு
கடுக்காய்த்தோல் கொடிவேலி

இவ்வகைகளை சமபாகம் எடுத்து சூரணம் செய்து 10 கிராம் அளவு வெந்நீரில் போட்டு 15 நாள் சாப்பிட்டால் நல்ல பசியுண்டாகும்.

**வேறுமுறை :** நொச்சியிலை ஓமம்
கொடிவேலி பெருங்காயம்
சுக்கு இந்துப்பு

இவைகள் சமபாகம் எடுத்து சூரணம் செய்து 10 கிராம் அளவு புளித்த பசுவின் மோரில் போட்டு 1 வாரம் சாப்பிட நல்ல பசியுண்டாகும்.

## தாகம் நீங்க மருந்து

உப்பை புளித்த கழுநீரில் போட்டு சிறிது காய்ச்சி அந்த நீரை தினந்தோறும் நான்கு முறை வாயை கொப்பளிக்க தாகம் நிற்கும்.

**வேறுமுறை :** நெருஞ்சிவேர், யஷ்டி மதுரம், சர்க்கரை இவைகளை சமபாகம் எடுத்து சூரணம் பண்ணி 15 நாள் இருவேளையும் சாப்பிட தண்ணீர் தாகம் நின்று போகும்.

## ஸர்வ ஜ்வர ராமபாணம்

| | |
|---|---|
| சாதிலிங்கம் | விராகனிடை (7.10 கிராம் |
| மனோசிலை | 2 விராகனிடை (7.10 கிரா |
| கடுகுரோகிணி | 2 விராகனிடை (7.10 கிரா |
| நீர்வாளம் | 2 விராகனிடை (7.10 கிர |

இந்த மடங்குக்கு பசும்பால் வார்த்து இரண்டு சாமம் நன்றாய் அரைத்து, கடுகுப் பிரமாணமான மாத்திரையாகச் செய்து ஒரு டப்பியிலே வைத்துக்கொண்டு தாபசுரத்திற்கு வெந்நீரிலும், இளநீரிலும் கொடுக்கலாம். குளிர் காய்ச்சலுக்கு நொச்சியிலையை புட்டாய் வைத்து அந்த சாற்றிலே கொடுக்கலாம். முறைக் காய்ச்சலுக்கு இஞ்சி ரசத்திலாவது அல்லது சுக்குப் பொடியிலாவது கொடுக்கவும்.

### குளிர்காய்ச்சலுக்குக் கஷாயம்

துளசியிலை, ஆலம்பழுப்பு, விஷ்ணுகிராந்தி, சுக்கு, கத்தாழைச்சோறு, தழுதாழைவேர், நாரத்தையிலை இவையெல்லாம் சிறிதாக அறுத்து ஒரு நாழிகை தண்ணீரில் போட்டு எடுத்துவிட்டு அந்த தண்ணீரை உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

### நீர்கட்டுக்கு

மூக்கரட்டைவேரை நறுக்கிக் கஷாயம் வைத்துக் கொடுக்க நீர் இறங்கும்.

***வேறுமுறை :*** சிறுகுறிஞ்சாவை சமூலம் கொண்டுவந்து வேகவைத்து அரைப்படி தண்ணீர் இறுத்துக்கொண்டு ஒரு விராகனிடை வெங்காரம் பொரித்துப் பொடிசெய்து போட்டுக்கொடுக்கவும்.

### அதிக அளவில் மூத்திரம் போக

கீழாநெல்லி ஒருபிடி சமூலம் கொண்டுவந்து வரகரிசி அரைப்படி உரலில் போட்டு அத்துடன் கீழாநெல்லியையும் போட்டு இடித்துக்கொண்டு மூன்று நாள் இப்படிச் சாப்பிடவும்.

***பத்தியம் :*** புளிப்பு, உப்பு தள்ளுபடி.

## விடாத சுரத்திற்கு மருந்து

கையாந்தகரை சமூலம் கொண்டுவந்து அதை நன்றாகக் கழுவி, அரிந்து வைத்துக்கொண்டு இரண்டுபடி தண்ணீர் விட்டு அதில் சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்ளைப்பூண்டு, சித்தரத்தை, ஓமம், கருஞ்சீரகம், கடுகுரோகிணி ஆகிய இந்த எட்டுவகையும் முடிந்து அந்தக் கஷாயத்தில் போட்டு, இந்த முடிச்சு மருந்தை எடுத்து அரைத்து இந்தக் கஷாயத்தில் கரைத்து ஏழு பொழுது கொடுக்க சீதஜ்வரம், ஒட்டுக்காய்ச்சல் எல்லாம் விடும்.

***பத்தியம் :*** புளி, உப்பு தள்ளுபடி.

## தலைக்குத் தைலம் செய்யும் முறை

| | |
|---|---|
| *எண்ணெய்* | *அரை படி (960 மில்லி)* |
| *பொன்னாங்கண்ணிச்சாறு* | ,, |
| *ஆதண்டையிலைச்சாறு* | ,, |
| *தாமரைக்கொடிச்சாறு* | ,, |
| *வெற்றிலைக்காம்புச்சாறு* | ,, |
| *பால் சமன்படி* | ,, |

## கடைச்சரக்கு

*கோஷ்டம் 1 விராகனிடை (3.5 கிராம்) அரைத்துப் போட்டு எரித்துக்கொண்டு இறக்கி இதுக்குமேல்*

| | |
|---|---|
| *ஏலம்* | *1 விராகனிடை (3.5 கிராம்)* |
| *அதிமதுரம்* | ,, |

இந்த இரண்டையும் பொடிசெய்து போட்டு வைத்துக்கொண்டு மூழ்கி வரவேண்டும்.

***குணமாகும் வியாதிகள் :*** பித்தகாசம், நேத்திரவாயு, பித்தவெட்டை, அரோசகம், வெள்ளெழுத்து, கண்புகைச்சல் ஆகியவை.

## வயிற்று நோவுக்குத் தென்னங்காய் (தேங்காய்) அமிழ்தம்

களருஷாயி, வருஷாயி, சிறுகீரை, எருக்கம்வேர், உத்தாமணிவேர், பிராயம் வேர், புகையிலை விதை, மேனிவேர், சதிர்கள்ளிப்பால், எருக்கம்பால், நல்லவெல்லம், ஒரு பசுமாட்டின் பால், வெற்றிலை 5, களிப்பாக்கு 2, தேங்காய் 1.

இந்த மருந்தையெல்லாம் கூட்டி பசும்பால் வார்த்து அரைத்து அந்தத் தேங்காய்த் தண்ணீரை வடித்தபின், இந்த மருந்தை அந்தத் தேங்காய்க்குள் அடைத்து காட்டெருவில் பதமாய்ச்சுட்டு எடுத்துக்கொண்டு, தினமும் ஒரு விராகனிடை (3கிராம்) தின்னவும்.

| | |
|---|---|
| ஆனை வாதத்திற்கு | 5 நாள் |
| விப்புருதிக்கு | 3 ,, |
| சத்தி குன்மத்திற்கு | 7 ,, |
| வட்டிப்பூச்சிக்கு | 1 ,, |
| குடல் வாதத்துக்கு | 3 நாள் |

***பத்தியம் :*** கயிப்பு, புளிப்பு தள்ளுபடி.

***உணவும், முறையும் :*** பச்சரிசியும், கொள்ளும் காய்ச்சித் தண்ணீரும் பருக்கையும் குடிக்கவும்.

தேங்காய்க்குள் இருக்கும் மருந்தை ஒரு கலசத்தில் வழித்து வைத்துக்கொண்டு ஒரு சிறு தேத்தாங்கொட்டை அளவில் கொடுக்கவும். இதையும் மிஞ்சி வேதனை கண்டு பொறுக்க முடியாவிடில் ஒரு குடம் தண்ணீரைத் தலையில் விடவும்.

## குழந்தைகளின் மாந்தம்-வயிற்றுக் கடுப்புக்கு மாத்திரை

ஓமம், பூண்டு, ஆமை ஒடு, மிளகு, திப்பிலி, வாயுவிளங்கம், கழக்கோடியிருப்பு ஆகிய இந்த தினுசுப் பொருட்களை சமனாகச் சேர்த்துக்கொண்டு பொடுதலை

இலைச்சாற்றை வார்த்து அரைத்துச் சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை செய்து உலர்த்திக்கொள்ளவும்.

*அனுபானமும், வியாதியும் :* இருமலும், காய்ச்சலுமாயிருந்தால் கண்டங்கத்திரி கஷாயத்தில் கொடுக்கவும்.

ஓக்காளம், வயிற்றுப்பொருமலுக்கு உத்தாமணிக் கஷாயத்தில் கொடுக்கவும்.

வயிறு கழிஞ்சால் ஓமக்கஷாயத்தில் கொடுக்கவும். இழுப்பு, வலிப்பு கண்டால் வட்டத்திரிப்பிவேர் கஷாயத்தில் கொடுக்கவும்.

**ரத்தக்கடுப்புக்கும், இருமலுக்கும் மருந்து**

17.50 கிராம் மிளகை வறுத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து வைத்துக்கொண்டு ஒருபொழுது தயிரிலும், ஒரு பொழுது வெண்ணையிலும் கூட்டிக்கொடுக்கவும்.

*பத்தியம் :* தயிர்ச்சோறு, இருமலுக்கு நெய்யில் கொடுக்கவும்.

**இருமல், ஈளை முதலியவற்றிற்கு அஸ்வகந்தாதி லேகியம்**

**தேவையான பொருட்கள் :**

தூதுவேளைவேர் அரைத்த விழுது (எலுமிச்சங்காய் அளவு)

| | |
|---|---|
| மிளகுப்பொடி | ஆழாக்கு 1 (240 மிலி.) |
| சுக்குப்பொடி | ஆழாக்கு 1 ,, |
| திப்பிலி | 70 கிராம் |
| பசுநெய் | அரைப்படி (960 மிலி.) |
| தூதுவளைப்பழம் | 1 சிராங்காய் (ஒரு கையளவு) |

*தயார் செய்யும் முறை :* மேலே காணும் மருந்துகளை வெந்நீர் வார்த்து அரைத்து, விழுதையெல்லாம் நெய்யிலே

போட்டு எரித்து மெழுகுப்பதமானால் இந்த நெய் இறுகும்போது ஒரு சிராங்காய் தூதுவளைப் பழத்தைப் போட்டு வேகவிட்டு இறக்கி வைத்துக்கொள்க.

***அளவு :*** ஒரு நாளைக்கு 1 காசிடை சாப்பிடவேண்டும்.

***தீரும் வியாதிகள் :*** இருமல், ஈளை முதலான நோய்கள்.

## அஸ்வகந்தாதிச் சூரணம்

அமுக்கிராக்கிழங்கு பலம் 8 (280 கிராம்), சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, கண்டங்கத்திரி, சித்ரமூலம், சிறுதேக்கு, அரத்தை, திப்பிலிமூலம், கடுகுரோகிணி, இந்துப்பு, வளையலுப்பு, கறியுப்பு சேவியம், விலாமுச்சிவேர், எவச்சாரம், சத்திச்சாரம், ஓமம், சீரகம், வாயுவிளங்கம், கருஞ்சீரகம், திராக்ஷைப்பழம், கூகைநீறு, முக்காவேளை, குப்பைமேனிவேர், சாட்டரணைவேர், செவதைவேர் இவைகள் வகைக்குப் பலம் 1 (35 கிராம்). இவைகளைச் சூர்ணம்செய்து வைத்துக்கொள்ளவும்.

***அனுபானம் :*** நெய், தேன், சர்க்கரை இவைகளை அனுபானமாக சாப்பிடலாம்.

***தீரும் வியாதிகள் :*** மேகம், பித்தம், வாயு, இருமல், காங்கை முதலிய நோய்களுக்குக் கொடுக்க நீங்கும்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம், நெய், பால், மோர் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவும்.

## மேக வாத சூலைக்குப் பரங்கிப்பட்டைச் சூரணம்

பரங்கிப்பட்டை பலம் 16 (560 கிராம்) இதனை இடித்து வஸ்திரகாயம் செய்தபின், கருநொச்சியிலைச்சாற்றில் ஒருநாள் கலந்து காயவைத்து, கொட்டக்கரந்தை சாற்றில் ஒரு

நாள், வெள்ளெருக்குச் சாற்றில் ஒருநாள், கோழியவரைச் சாற்றில் ஒருநாள், குப்பைமேனிச் சாற்றில் 1 நாள், பொடுதலைச் சாற்றில் ஒருநாள், பொன்னாங்கண்ணிச் சாற்றில் ஒருநாள், செருப்படைச் சாற்றில் ஒருநாள், கையாந்தகரைச் சாற்றில் ஒருநாள், முசுமுசுக்கைச் சாற்றில் ஒருநாள், செலந்திநாயக (சென்னிநாயகம்) சாற்றில் ஒருநாள், கொடிவேலிச் சாற்றில் ஒருநாள் வைத்த பின்,

மலாக்காசாம்பிராணி, மகிஷாக்ஷி குக்குலு, வெள்ளக்குங்கிலியம் இவைகளைப் பொடிபண்ணி வைத்துக் கொண்டு, ஒரு சட்டிக்கு வேடுகட்டி அதுமேலே இந்த சூர்ணத்தைப் பரப்பி, அந்தச் சட்டியைப் பக்கத்தில் பொத்தலாக்கி அதன் உள்ளே நெருப்பைப் போட்டு, வாய்க்குச் சாணிமூடி பரப்பின தூளுக்கும் மேல் சட்டிமூடி, இந்தப்படி ஏழுநாள் கொடுத்து அந்தச் சூர்ணத்தை எடுத்து வைத்துக்கொண்டு 40 நாள் சாப்பிடவும்.

***பத்தியம் :*** நல்லெண்ணை சாப்பிடக்கூடாது. அரப்பு தேய்த்துக்கொண்டு (சோப்பு தேய்த்துக்கொள்ளக்கூடாது) குளிக்கவும்.

***தீரும் நோய்கள் :*** மேகசூலை, வாயுக்கிரந்தி, மேகவாதம், கைகால் கொடைச்சல், கீல்வாயு, சூலைக்கட்டு எல்லாம் தீரும்.

## ஜீரண வடகம்-இருமலுக்கு

ஸர்ஜக்ஷாரம், எவச்சாரம், சித்ரமூலப்பட்டை, இந்துப்பு, வெடியுப்பு, சீரகம், வாயுவிளங்கம், வெண்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி இதுகள் சமன்-இதுகளெல்லாம் ஒரு பங்கும், சேங்கொட்டை ஒரு பங்கும், எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணிக்கொண்டு சகல பேதிகளுக்கும் வெந்நீரில் கொடுக்கவும். சுக்குக் கஷாயத்தில், பொடுதலைச் சாற்றில், மோரில் வயதிற்குத் தகுந்தபடி அறிந்து கொடுக்கலாம்.

***தீரும் வியாதிகள் :*** *அஜீர்ணம், இரைச்சல், கழிச்சல், பொருமல், இசிவு, கிராணி (கிரஹணி) குடல்வாதம் இதுகள் தீரும்.*

***பத்தியம் :*** மோர், தயிர், மிளகு நீர் முதலாகியது சேர்த்துக்கொள்ளலாம்.

## கண்டந்திப்பிலி சூரணம் செய்யும் விதம்

*( 1 பலத்திற்கு 35 கிராம் என்ற அளவில் கணக்கிட்டுக் கொள்ளவும்.)*

| | | | |
|---|---|---|---|
| இஞ்சி | பலம் 16 | நெய் | சேர் 1 |
| சர்க்கரை | ,, 8 | மிளகு | பலம் 1¼ |
| திப்பிலி | ,, 1 | திப்பிலிமூலம் | ,, 1 |
| சுக்கு | ,, ½ | ஜாதிக்காய் | ,, ½ |
| ஏலம் | .. ½ | கொடிவேலி வேர்ப்பட்டை | பலம் ½ |
| கவாக்ஷரி (துவாக்ஷீரி) | ½ பலம் | | |
| சீரகம் | ,, | பேரீச்சங்காய் | ,, |
| நாகேஸரம் | ,, | வில்வவேர் | ,, |
| ஜீவத்ராக்ஷி | ,, | ஜடாமாம்ஸி | ,, |
| சூடம் | ,, | சோம்பு | ,, |
| தாளிசபத்திரி | ,, | கற்கண்டு | பலம் 1 |
| கருஞ்சீரகம் | ,, | ராயபுரிச்சர்க்கரை | ,, |
| வெள்ளை மிளகு | ,, | பொட்டுலுப்பு | பலம் ½ |

இந்தக் கடைச்சரக்கை சூர்ணம் செய்து இஞ்சியை மேற்புறம் சீவி, பொடியாக அரிந்து நெய்வார்த்து வறுத்து அரைத்து கடைச்சரக்கு சூர்ணமும் இந்த அரைத்த இஞ்சியும், சர்க்கரையும், கல்கண்டும் ஒன்றாகச் சேர்த்துப் பிசரி (கலந்து) வைத்துக்கொண்டு தினம் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிடவேண்டும்.

***இதற்குக் குணமாகும் நோய்கள் :*** ஒட்டுக்காய்ச்சல், விடாத உஷ்ணவாயு, குடல் எரிச்சல், சூலை, வாயு, வயிறு

உப்புசம், உழலை எல்லாம் தீரும். அதிக எருவு, ரத்த பைத்தியம், ரத்த காஸம் தீரும்.

## ரஸபூபதி

சுத்திசெய்த ரஸம், நாபி, கந்தகம், மனோசிலை, வெங்காரம், நவச்சாரம், போந்தரிதாரம் (அரிதாரம்) தாளகம் இவை சமம் கொண்டு, ஊமத்தையிலைச் சாற்றில் கரைத்து காயவைத்து, குந்துமணி அளவில் உருட்டி காயவைத்து இஞ்சி ரஸத்தில் சாப்பிடவும். இதனால் சன்னி தீரும்.

சுத்தி செய்த லிங்கம், நாபி, துத்தம், மிளகு, திப்பிலி, வெண்காரம், கெந்தகம் இவை சமம் கூட்டி, எலுமிச்சம் பழச்சாறு வார்த்து நன்றாக அரைத்து உருண்டை செய்து காயவைத்துக் கொள்ளவும்.

அதிஸார பேதிக்கு வில்வப்பழத்தின் ஓடும், மாதுளம் பழத்தின் ஓடும் சேர்த்துக் கஷாயம் வைத்து அந்தக் கஷாயத்துடன் சேர்த்துக் கொடுக்கவும். இதனால் அதிஸார பேதி நிற்கும்.

## அறிவழிந்த ஜன்னிக்கு

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த ரஸம் | 8 பங்கு | நாபி | 7பங்கு |
| கந்தகம் | 6 ,, | அரிதாரம் | 6 ,, |
| ரக்தபோலம் | ,, | வெண்காரம் | 6 ,, |
| ஊமத்தை விதை | 4 ,, | சுக்கு | 3 ,, |
| மிளகு | 3 ,, | திப்பிலி | 3 ,, |

இவற்றையெல்லாம் கொடிவேலிக் கஷாயத்தை விட்டு நன்றாக அரைத்து நிழலில் உலர்த்தி நெல்லுப் பிரமாணம் இஞ்சி ரஸத்தில் சாப்பிடவும்.

***இதற்குத் தீரும் வியாதி :*** (அறிவு) அருவு அழிந்த ஜன்னி மற்றும் எல்லா ஜுரமும் தீரும்.

## இருமல் இரைப்புக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் இவை நான்கையும் பொடிசெய்து வடிகட்டிக்கொண்டு தேனில் குழைத்துக் கொடுக்கவும். இருமலும் இறைப்பும் நீங்கும்.

## அருஞ்சுவைக்கு

*புளிச்ச தயிரும், சாதமும் சாப்பிட நீரிழிவு நிற்கும்.*

*[இனிப்பு, புளிப்பு, கசப்பு, உப்பு, துவர்ப்பு, உரைப்பு ஆக ஆறு சுவைகள். இவற்றில் புளிப்பு, இனிப்பு, உப்பு இவை மூன்றும் வாதத்தை அடிக்கும். கசப்பு, இனிப்பு, துவர்ப்பு இவை மூன்றும் பித்தத்தை அடிக்கும். உரைப்பு, துவர்ப்பு, கசப்பு, மூன்றும் ஸ்லேஷ்மத்தை அடிக்கும். வாதத்தையும் ஸ்லேஷ்மத்தையும் அடிக்கும். காரம், சுக்கு, திப்பிலி, காயம், பூண்டு இவை நான்கும். பித்தத்தை அடிக்கும் வஸ்து-புளி, மாதுளை நெல்லிக்காய்.]*1

## பீனிசத்துக்குத் தைலம்

| | |
|---|---|
| *கரிசலாங்கண்ணிச்சாறு* | *2 படி (5840 மி.லி.)* |
| *பலாசன் பூவின்சாறு* | *1 படி (920 மி.லி)* |
| *அபினி* | *2½ விராகனிடை (6.15 கிராம்)* |
| *பச்சைக்கற்பூரம்* | ,, ,, |
| *அதிமதுரம்* | *½ பலம் (17½ கிராம்)* |
| *அக்காரக்காரம்* | *¼ பலம் (8¾ கிராம்)* |
| *கோஷ்டம்* | ,, ,, |
| *மிளகு* | ,, ,, |

இவைகளை அரைத்துப் பொடிசெய்து பசுவின் நெய் இரண்டு சேர் விட்டு, அதில் இந்தப் பொடிகளைப்போட்டு மூலிகைச்சாற்றையும் அதில் விட்டு பதமாய்க்காய்ச்சி எடுத்துக்கொள்ளவும்.

---

1. *ஏட்டில் இது தனியாக எழுதப்பட்டுள்ள பொதுக்குறிப்பு.*

இந்தத் தைலத்தை இரண்டு வேளையும் மூன்றுநாள் நாசியிலிட பீனிஸம் தீரும்.

**கண்ணுக்கு மாத்திரை**

திப்பிலி 2, மிளகு 5, கடுக்காய் கொட்டையில் உள்பருப்பு 12, நெல்லிக்காய்ச்சாறுவிட்டு அரைத்து உருண்டை செய்து, நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு பழரசத்திலாவது, முலைப்பாலிலாவது தேய்த்துக் கண்ணுக்குப்போட மாசு அறிந்து கண் பிரகாசமுண்டாகும்.

**மன்மத பாணம் - வீரிய விருத்திக்கு**

நல்ல கடைக்கெஞ்சா சேர் 1½ (420 கிராம்) இதைப் பூச்சியில்லாமல் பார்த்து இரண்டுபடி நீர்விட்டுக் காய்ச்சி சலம் சுண்டின பின்பு, அதில் ஒரு சேர் நெய் விட்டுக் காய்ச்சி அதை உறப்பு வெள்ளைத்துணியில் போட்டு முறுக்கிப் பிழிந்தால் குழம்பாக விழும். அதில் ராயபுரிச் சர்க்கரை பலம்8, லவங்கப்பட்டை பலம்4, லவங்கம் பலம் 2 (280 கிராம்), சாதிக்காய் பலம் 2 (70 கிராம்), ஜாதிப்பத்திரி பலம் 2 (70 கிராம்), இந்திரசோதி விதை பலம் 2 (70 கிராம்) இவைகளை இடித்துச் சூர்ணம் செய்து, பிழிந்து வைத்த குழம்பில் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி லேகியமாக்கி கழல் பிரமாணம் இருபது நாள் கொள்ளவும்.

வீரியமில்லாதே இருக்கின்றவர்களின் புருஷ வியாதியை அறுத்து மன்மத பாணம் எழும்பும்.

**மகாதாளிச பத்திரி சூரணம்**

| | |
|---|---|
| தாளிசபத்திரி | ஜாதிக்காய் பூ |
| ஏலம் | கோஷ்டம் |
| சதகுப்பை | சிறுநாவல் பூ |
| சவ்யம் (செவியம்) | தக்கோலம் |
| கார்போக அரிசி | கடுகுரோகிணி |
| கர்கடகசிருங்கி | கோரோசனை |

| | |
|---|---|
| திரிபலம் | விளாம்பிஞ்சு |
| சித்தாமுட்டிவேர் | விலாமிச்சம்வேர் |
| லவங்கப்பத்திரி | முந்திரிப்பழம் |
| லவங்கம் | கிராம்பு |
| கொத்தமல்லி | பெருநாவல் பூ |
| சித்தரத்தை | கருஞ்சீரகம் |
| அதிவிடயம் | ஆனைத்திப்பிலி |
| குகைநீறு | திப்பிலிமூலம் |
| திரிகடுகம் | மாதுளம் ஒடு |
| சிறுநொச்சிவேர் | குங்குமப்பூ |
| ஜாதிக்காய் | பேரீச்சன்பழம் |
| அதிமதுரம் | குரோசானி ஓமம் |
| வாயு விளங்கம் | செண்பகப்பூ |
| சிறுதேக்கு | நல்ல சீரகம் |
| ஓமம் | வால்மிளகு |
| காட்டெருமைப்பால் | தெசவீரம் |
| வில்வப்பிஞ்சு | முத்தங்காசு |
| வெட்டிவேர் | |

ஆக 42 வகையும் சமன் கூட்டி சூர்ணம் பண்ணி வஸ்திரகாயம் செய்து கொண்டு இரண்டுவேளை (வெருகடி) விரற்கடைப் பிரமாணம் (10 கிராம் அளவு) தேனிலாவது, சர்க்கரையிலாவது கொள்ளவும்.

***இதனால் தீரும் வியாதிகள் :*** க்ஷயப்பித்தம், இரத்தப் பித்தம், உள்வாதப் பித்தம், க்ஷயம், காசம், ஸ்வாச காசம், அஸ்திஜ்வரம், மாரல் ஜ்வரம், பாண்டு ஜ்வரம், பாண்டு வீக்கம், பித்தத்தினாலுண்டான வியாதியெல்லாம் தீரும்.

***பத்தியம் :*** கசப்பு, புளிப்பு தள்ளுபடி, வெந்நீர் கூட்டவும். உப்பு, மிளகு வறுத்து உட்கொள்ளவும்.

***காலம் :*** ஒரு மண்டல காலம் உட்கொள்ளவும்.

## தேத்தாங்காய் (கொட்டைச்) சூரணம்

தேத்தாங்காய் அரைக்காய் பக்குவத்தில் ஒன்றை நான்காக வெட்டி வெய்யிலில் உலர்த்தி சூர்ணம் செய்து வஸ்திரகாயம் பண்ணிய தூள் பலம் 8 (280 கிராம்)

| | |
|---|---|
| திரிபலம் | நல்லசீரகம் |
| வாயுவிளங்கம் | கஸ்தூரிமஞ்சள் |
| சிறுதேக்கு | கண்டத்திப்பிலி |
| கர்கடகசிங்கி | சாதிக்காய் |
| சிறுநாவல்பூ | விலாமுச்சவேர் |
| அமுக்கிராக்கிழங்கு | திரிகடுகம் |
| ஓமம் | சதகுப்பை |
| செவ்வியம் | திப்பிலி மூலம் |
| அதிவிடங்கம் | ஏலம் |
| சாதிப்பூ | செண்பகப்பூ |
| சிறுவழுதலைவேர் | கோரைக்கிழங்கு |
| கருஞ்சீரகம் | கொத்தமல்லி |
| வால்மிளகு | அறத்தை |
| ஆனைத்திப்பிலி | தக்கோலம் |
| கிராம்பு | தாளிசபத்திரி |
| வெட்டிவேர் | பிரண்டைவேர் |

ஆக 40 வகை ஒவ்வொன்றுக்கும் விராகனிடை 2 (6.10 கிராம்) வீதம் சூர்ணமான தேத்தாங்காய்ச் சூர்ணத்துடனே சமனாகக் கலந்து, தேத்தாங்காய் பிரமாணம் சாப்பிடவேண்டும். இளவெந்நீரில், வெள்ளாட்டுப்பாலில், பசும்பாலில், வெண்ணெயில், தேனில், நெய்யில் அவரவர்க்கு உகந்ததில் கொள்ளவும்.

**இதனால் தீரும் வியாதிகள் :** க்ஷயரோகங்கள், வாதரோகங்கள், சகல ஜன்னிகளும் தீரும்.

### கந்தகத்தைச் சூரணம் பண்ணும் முறை

கந்தகத்தை வெள்ளாட்டுப் பாலில் சுத்தி பண்ணிய கெந்தகம் பலம் 2 (70 கிராம்), பரங்கிப்பட்டை பலம் 4 (140 கிராம்), திரிபலம், திரிகடுகம், திப்பிலிமூலம், செவ்வியம், அரத்தை, சிறுதேக்கு, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், வாயுவிளங்கம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ இந்த இருபது வகையும் ஒவ்வொன்றும் விராகனிடை 2 (6.10 கிராம்).

| | |
|---|---|
| மஞ்சனாத்திப்பட்டை | சங்கன்சூலம்பட்டை |
| வெள்ளெருக்கு | கையாந்தகரை |
| செங்கத்தாரிப்பட்டை | முக்காவேளைவேர் |
| சித்திரமூலம் | சங்கன்பட்டை |
| சிவதைவேம்புவேர் | வெள்ளைச்சாரவேளைவேர் |

இந்த பத்து வகையும் வகைக்கு ஒவ்வொன்றும் பலம் 1 (35 கிராம்) வீதம் 32 வகையும் கூட்டி உலர்த்திச் சூர்ணம் செய்து, வஸ்திரகாயஞ் செய்து தினம் விரற்கிடைப் பிரமாணம் கொள்ளவும்.

***இதனால் தீரும் வியாதிகள் :*** சோகை, காமாலை, விரைவாதம், பாண்டுரோகம், பாண்டுசுரம், பாண்டு க்ஷயம், பாண்டு கிராணி தீரும்.

*பத்தியம் :* திதிப்பு, புளிப்பு, கசப்பு தள்ளுபடி. மிளகும் துவரம் பருப்பையும் வறுத்து சேர்த்துக்கொள்ளவும். பெரி(ய) மிளகுநீர் சேர்த்துக்கொள்ளவும். நெல்லிக்காய் வடகம் தொகையல் சேர்த்துக்கொள்ளவும்.

**ரசப்பிடிப்பு முறிவுக்குரிய வகைகள்**

1. ருத்ராஷம், கலைக்கொம்பு, சந்தனம், சிறுகீரைவேர், பொன்னாங்கண்ணிவேர் ஆகியவை சமனாக எடுத்து அரைத்து இந்த ஐந்துங் கூட்டி வெல்லமும், பசுவின் வெண்ணையும் கூட்டிக் குழைத்து மூன்றுநாள் கொடுக்கவும்.

2. பொன்னாங்கண்ணிவேர், சிறுகீரைவேர் இந்த இரண்டும் சமன். இதை அரைத்து வெல்லமும், பசுவின் வெண்ணையும் கூட்டிக் குழைத்து மூன்றுநாள் கொடுக்கவும்.

3. நன்னாரிவேர் அரைத்து பசுவின்பாலில் (½ படி) மூன்றுநாள் கொடுக்கவும்.

4. பேயன் வாழைப்பழம், சர்க்கரை, தேன், திப்பிலிப் பொடி இந்த நாலும் கூட்டி மூன்று நாள் கொடுக்கவும்.

## நேத்ர சந்திரோதயம்

கடுக்காய் அரிசி
கோஷ்டம்
வசம்பு
மிளகு
மனோசிலை
திப்பிலி
தானிக்காய் அரிசி
சங்குப்பொடி
மரமஞ்சள்

இவைகளைச் சமன் கூட்டி வெள்ளாட்டுப் பால்விட்டு, கலுவம் பால் உண்ண அரைத்து மாத்திரை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலில் உரைத்து கண்ணுக்குப்போட, திமிர்ப்படலம், காசப்படலம், தெனவு, நெரிமி, தளிப்பு, துர்மாம்ஸம் இப்படியான கண்வியாதிகள் தீரும். ஐம்பது வருஷத்துப் பூவானாலும் பத்துநாள் அல்லது ஒரு வாரத்தில் தீரும்.

**வேறுமுறை :** கடுக்காய் அரிசி 3, நெல்லிக்காய் அரிசி 1, தானிக்காய் அரிசி 2 இவைகளைக் கூட்டி திரிபலா கஷாயத்தில் நன்றாக அரைத்து மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு வெந்நீரில் உரைத்துக் கண்ணிலே போட கண்சிகப்பு, கண் வியாதிகள் அனைத்தும் தீரும்.

## அமிர்த தைலம்

சீந்தில் தண்டுச் சாறு
கத்தாழைச்சாறு
கையாந்தகரைச்சாறு
தாழன் விழுதுச்சாறு
முசுமுசுக்கைச்சாறு
நெல்லிக்காய்ச்சாறு

இவைகள் வகைக்கு சாறு படி1 (1920 கிராம்)

பசுவின் பால்
கிராம்பு
செஞ்சந்தனம்
நல்லெண்ணெய் கலந்து
சாதிக்காய்
வெட்டிவேர்
லவங்கம்
லவங்கப்பத்திரி
ருத்திராக்ஷம்
அதிமதுரம்
சதகுப்பை
ஏலம்

| | |
|---|---|
| கோஷ்டம் | முந்திரிப்பழம் |
| நல்ல சந்தனம் | விலாமுச்சிவேர் |

வகை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு என்கிற விராகநிடை 1 ( 3.05 கிராம்) வீதம் கூட்டி அரைத்துக் கரைத்து அனைத்தையும் ஒன்றாகக்கூட்டி, காய்ச்சி பதத்தில் வடித்து கேசாதி பாதபரியந்தம் தேய்த்துக்கொண்டு சீயக்காய் வெந்நீர் விட்டு ஸ்நானம் செய்யவும்.

***தீரும் வியாதிகள் :*** தலைபாரம், தலைதியக்கம், தலையாட்டம், சிரோவாதம், நேத்திர வியாதிகள், பைத்தியம், வாந்தி, உஷ்ணம் முதலியவைகள்.

## காஞ்சிரவேர்

காஞ்சோரிவேர் விதை, அழிஞ்சில்வேர் விழுது இவை சமன்கூட்டி தைலம் இறக்கி அந்தத் தைலம் படிக்கு 1 (1920 மி.கி.)

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | ஜடாமாம்சி |
| வெப்பாலை அரிசி | கந்தகம் |
| கர்கடகசிருங்கி | மரமஞ்சள் |
| கருஞ்சீரகம் | |

வகைக்குப் பலம் ¼ (8¾ கிராம்) கூட்டிப்பொடிசெய்து இந்த தைலத்தில் போட்டுக் கலந்து தினம் ஒரு விராகனிடை (3.05 கிராம்) உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசவேண்டும்.

***தீரும் வியாதிகள் :*** பதினெட்டு வகை குஷ்ட வியாதிகள், பெருவியாதிகள், செவ்வட்டைக்கடி, செய்யான் கடி, வண்டுகடி, கண்டமாலை, புற்றுநோய், அரையாப்பு, பிளவை இப்படிப்பட்ட ஆறாத புண்களும், உஷ்ணமும் தீரும்.

## அஷ்ட குன்மம், சூலை நோய்களுக்கு வல்லாதி நெய்

பசுநெய் படி 1 ½ (2880 கிராம்), சுத்திசெய்த சேராங்கொட்டை படி 1க்கு பலம் 16 (560) வீதம் உரலில்

இடித்து கரண்டியினாலே எடுத்து நெய்யில் விட்டுக் காய்ச்சவும். காய்ந்தபின் நெய்யை இறுத்துக்கொண்டு சட்டியிலே விட்டு வைத்துக்கொண்டு, இதுக்கு முன்னதாக ஒருபடி (1920 மி.லி.) பச்சைக் கடலையைத் தண்ணீரிலே ஊறப்போட்டு தண்ணீரில்லாமல் வடித்து சட்டியிலே இருக்கும் நெய்யில் போட்டு முறுகாமல் இளம்பதமாய், நசுக்கிய பின்

கண்டங்கத்திரி, செவ்வியம் பலம் ½ (17½ கிராம்), லவங்கம் விராகனிடை 1 (3.05 கிராம்), குரோசானி ஓமம் பலம் ½ (17½ கிராம்) பரங்கிப்பட்டை பலம் ½ (17½ கிராம்), நிலப்பனங்கிழங்கு பலம் 2 (70 கிராம்) இந்த ஏழு வகையும் இடித்து வைத்துக்கொண்டு இளம் பதத்தில் விட்டுத் துழாவி வைத்துக்கொண்டு 40 நாள் இரண்டு வேளையும் வேளைக்கு ½ கரண்டி கொள்ளவும்.

***தீரும் வியாதி/ள் :*** குன்மம் எட்டுவகை, சூலை நோவு 2வகை, குண்டி நோவு, கிரந்தி நோய் 11 வகை, ரக்த பிரமேயம், கிழப்ரமேயம், வெள்ளைப் பிரமேயம், சுக்லப் பிரமேயம், அரையாப்பு, சூலை வாயு 21 வகை, வயிற்றுவலி, ஆமைக்கட்டு, அட்டைக்கடி, வயிற்றுப்புற்று இது முதலான வாயு, வயிற்றிலுண்டான வியாதிகளெல்லாம் தீரும்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம். இது கை கண்டது.

### ஜ்வரத்திற்கு மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| உள்ளி | ½ | விராகனிடை | |
| அரிதாரம் | | ,, | |
| சுத்திபண்ணிய வாளம் | 3 | ,, | (9.15 கிராம்) |
| ரஸம் | ½ | ,, | |
| கடுக்காய்ப்பொடி | 2 | ,, | (6.10 கிராம்) |
| தாணிக்காய் | 2 | ,, | ,, |
| நெல்லிமுள்ளி | 1 | ,, | (3.05 கிராம்) |

| | |
|---|---|
| சுக்கு | ½ விராகனிடை |
| மிளகு | ,, |
| திப்பிலி | ,, |

இவை அனைத்தையும் கையாந்தகரைச் சாற்றில் வார்த்து அரைத்துப் பச்சைப் பயறளவு உருண்டை செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு மிளகு கஷாயத்தில் கொடுக்க ஜ்வரம் தீரும்.

### வினோத தாகத்திற்கு

*1.* ஆலங்கொழுந்து ஒரு பிடி கொண்டுவந்து ஜலத்தில் போட்டுக் காய்ச்சிக்குடிக்கத் தாகம் தீரும்.

***வேறுமுறை :*** 2. நெல்லிப்பட்டை, சீரகம், சுக்கு இவை மூன்றையும் அரைத்துத் தயிரில் குழப்பிக் குடிக்கத் தாகம் தீரும்.

### பீனிசம், தும்மல், தலைபாரம், சிரசிலிருந்து நீர்வடிதல் முதலியவற்றுக்கு

| | |
|---|---|
| பச்சைக்கற்பூரம் | பணவிடை *8 (3.904* கிராம்) |
| கஸ்தூரி | விராகனிடை ½ |
| மரமஞ்சள் | ,, |
| சதகுப்பை | ,, |

இவ்வளவையும் பொடிசெய்து ஒரு பழம் சீலையைக் கிழித்து குந்துமணியிலையை இடித்துச் சாறுபிழிந்து அந்தச் சாற்றில் நனைத்து நன்றாக உலர்த்தி இந்தப் பொடியை மேற்படித் துணியில் பரப்பி திரியாகத் திரித்து விளக்கில் கொளுத்தி அந்தப் புகையை வெற்றிலைக் குழாய் சுருட்டி அதில் வைத்து மூக்கில் உரிஞ்சவும். மூன்று அல்லது நான்கு நாள் உரிஞ்சினால் பீனிசம் தீரும்.

### அண்ட வாதத்துக்கு

தேத்தாங்கொட்டைப் பிரமாணம் சுண்ணாம்பு, வெல்லம், ஒட்டரணை, பெருங்காயம் இவை மூன்றையும்

சமனாகக் கூட்டி இளவெந்நீரில் கரைத்து உள்ளுக் கொடுக்க குணமாகும்.

### உஷ்ணத்துக்கு விளக்கெண்ணெய்

வெள்ளெருக்குச்சாறு, பூண்டு, நீரடிமுத்து வெப்பாலை அரிசி, கருஞ்சீரகம் வகை ஒன்றுக்குப் பலம் 1 (35 கிராம்), விளக்கெண்ணெய்ப் படி 2 (3.840 மி.லி.), சுக்கு பலம் 2 (70 கிராம்), திப்பிலி பலம் 2 (70 கிராம்).

| | |
|---|---|
| திப்பிலி | பலம் 2 (70 கிராம்) |
| திரிமூலம் | ,, |
| காயம் | ,, |
| மிளகு | ,, |
| சிவதைவேர் | ,, |
| ஓமம் | ,, |
| சாதிப்பத்திரி | ,, |
| செவ்வியம் | ,, |
| கடுகு | ,, |
| கடுகுரோகிணி | ,, |
| வெங்காரம் | ,, |
| கத்தாழைச்சாறு | ,, |
| கடுக்காய் | ,, |
| லவங்கப்பத்திரி | ,, |
| லவங்கப்பட்டை | ,, |
| வெந்தியம் | ,, |
| வெண்சாறுவேளை | ,, |
| சீரகம் | ,, |
| இந்துப்பு | ,, |

ஆக இருபத்திரண்டு கடைச்சரக்குகளையும் போட்டு எண்ணெய்க் காய்ச்சி பதமாய் இறக்கி வைத்துக்கொண்டு தினந்தோறும் காலையில் அரைப்பலம் (17 ½ மில்லி) எண்ணெய் 40 நாள் சாப்பிட உஷ்ணம் தீரும்.

**பத்தியம்:** இச்சா பத்தியம்.

## பித்தத்திற்கு

மேலே காணும் எண்ணெய்யுடன்கூட எள்நிரக்காய்(?) எலுமிச்சம்பழச்சாறு, சர்க்கரைப் போட்டு மூன்று நாள் குடித்த பின்பு, இஞ்சிச்சாறு ஒரு உழக்கு (240 மி.லி.) எலுமிச்சம் பழச்சாறு இரண்டு உழக்கு (480 மி.லி.) ஒரு விராகனிடை (3.05கிராம்) சீரகத்தைப் பொடி பண்ணிப்போட்டு கொடுக்கவும். ஒரு நாழிகைக்குப் பின்பு இளநீர் கொடுக்கவும். பின்பு மீண்டும் இஞ்சிச்சாறு எலும்பிச்சம்பழச்சாறு பசும்பாலுடன் கூட்டிச் சர்க்கரை போட்டுக் குடிக்க பித்தந் தீரும்.

## சைத்தியச் சூரணம்

| | |
|---|---|
| சுக்கு | பலம் 1 (35 கிராம்) |
| கண்டு பாரங்கி | ,, |
| மிளகு | ,, |
| மாவுலிங்கப்பட்டை | பலம் 4 (140 கிராம்) |
| வெள்ளைச்சாரணைவேர் | ,, |
| கல்யாணமுருங்கைப்பட்டை | ,, |
| ஆடுதின்னாப்பாளை | ,, |
| முருங்கைப்பட்டை | ,, |
| வெள்ளெருக்கம்பட்டை | ,, |
| இலைக்கள்ளிப்பட்டை | பலம் 2 (70 கிராம்) |
| வராகிச்சூரணம் | ,, |

ஆகியவற்றைச் சேர்த்துச் சூர்ணம் செய்து தேன் அல்லது வெந்நீரில் அனுபானமாகக் கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள் :** வாத, பித்த ஸ்லேஷ்மம்.

**பத்தியம் :** உரைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

## வயிற்று நோவுக்கு

| | |
|---|---|
| ஆகாசகெருடன் கிழங்கு | பலம் 4 (140 கிராம்) |
| கடுக்காய் | |

| | | |
|---|---|---|
| வெங்காயம் | | ,, |
| திப்பிலி | | ,, |
| நல்லெண்ணெய் | சேர் 1 | ஆக வகை 5 |

| | |
|---|---|
| சாதிக்காய் | ஓமம் |
| சுக்கு | சீரகம் |
| நல்லவெல்லம் | வாயுவிளங்கம் |
| கோஷ்டம் | லவங்கம் |
| கருஞ்சீரகம் | மிளகு |
| லவங்கப்பத்திரி | தூம்ராஷ்டம் |
| ஜடாமாம்சி | தெசவீரம் |
| திப்பிலி | சாதிப்பத்திரி |
| குரோசானி ஓமம் | கண்டுபாரங்கி |
| சித்திரமூலம் | அதிமதுரம் |
| கடுக்காய் | |

இவைகள் வகைக்கு பலம் 1 (35 கிராம்) வீதம்.

மாதுளங்காய் ஓடு, தேன் 2 சேர், நெய் 2 சேர், பரங்கிப்பட்டை 2 பலம் (70 கிராம்), சர்க்கரை 10 பலம் (350 கிராம்) ஆக வகை 28. இவைகளை இடித்துச் சூரணம் செய்து சர்க்கரையைப் பாகு காய்ச்சி தேன், நெய் விட்டு லேகியம் செய்துகொள்ளவும்.

***இதனால் தீரும் வியாதிகள் :*** மேக ரோகங்கள், சைத்தியம், அக்னிமந்தம் முதலியன. நெல்லிக்காய் பிரமாணம் 40 நாள் கொடுக்கவும்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம்.

**மூலரோகத்துக்கு**

| | |
|---|---|
| காட்டுக்கரணைக்கிழங்கு | நல்ல கருணைக்கிழங்கு |
| மெருகன் கிழங்கு | பிரண்டைவேர் |
| நிலப்பனங்கிழங்கு | நில ஆவாரைக்கொடி |

வேலிப்பட்டை வகை ஒன்றுக்கு 4 பலம் (140 கிராம்).

இவைவற்றையெல்லாம் உலர்த்திச் சூரணம் பண்ணி வெள்ளாட்டு மோரில் குழப்பிக் கொடுக்கவும்.

***நீங்கும் நோய் :*** மூலவியாதி தீரும்.

**குளுமைக்கு மூலிகைச் சூரணம்**

மயிர்மாணிக்கம் கொண்டுவந்து இலையைக் காயவைத்து அந்த இலையை நன்றாக இடித்து வடிகட்டிக் கொள்கிறது. இதுக்குச் சரியாக சூரியகாந்தம் என்னும் இலைக்குப் பெயர் சிறுபுரசு என்று சொல்வது வழக்கம்.ஓரிலைத் தாமரை என்னும் இலையைக் காயவைத்து இடித்து முன்சொன்ன பொடிக்குச் சரியாய் வடிகட்டி, இந்த இரண்டுக்கும் சரியாய் வெல்லச் சர்க்கரையைச் சேர்த்து வைத்துக்கொண்டு தினம் இரண்டுவேளை நெல்லிக்காய்ப் பிரமாணம் எடுத்து இலையில் வைத்துக்கொஞ்சம் சீரகம் கலந்து பசுநெய்யில் குழைத்து 20 நாள் சாப்பிடவும்.

***நீங்கும் நோய் :*** இதனால் சகலமான காங்கைகளும் தீரும்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம்.

**பிரமேகத்திற்கு**

நெல்லிக்காய்ச்சாறு பிழிந்து, வசம்பு சூரணம் செய்து அந்தச் சாற்றில் போட்டு சிறிது தேன்விட்டுக் கொடுத்தால் பிரமேகம் வாங்கும்.

**மூல வியாதிக்கு**

நிலப்பனங்கிழங்கு கொண்டுவந்து காயவைத்து இடித்துச் சூரணஞ்செய்து பசுவின் கோமயம் அல்லது மோரில் ஒருமாதம் சாப்பிட மூல வியாதிகள் அனைத்தும் தீரும்.

***வேறுமுறை :*** உப்பும், வேப்பிலைக் கொழுந்தையும் கழுநீர் வார்த்து அரைத்துக் கொடுக்கவும். இந்தப்படி

கோமயத்தில் அரைத்து ஆசனத்தில் தடவினால் மூல வியாதிகள் தீரும்.

## குஷ்டத்துக்கு

சேராங்கொட்டைப்பால், கள்ளிப்பால், மனோசிலை இவை மூன்றும் சரிஎடை கூட்டி அரைத்து குஷ்டமாயிருக்கும். இரணத்தில் தடவினால் புண் உலர்ந்து வாசியாகும்.

## கண்ணுக்கு மருந்து

நல்ல சந்தனம் ஒரு பங்கு, சைந்தலவணம் இரண்டுபங்கு, கடுக்காய் மூன்று பங்கு, பலாசன் பிசின் நான்கு பங்கு இவைகளெல்லாம் கூட்டி மை போலே அரைத்து மாத்திரை செய்து, நிழலில் உலர்த்தி தண்ணீரிலே தேய்த்துக் கண்ணிலே போட கண்புரை, அருவல், கண்ணில் பூப்பட்டது வாங்கும்.

## கழுத்தில் காணும் நோய்களுக்கு

வடாமல்லிகைகிழங்கு பாவட்டைவேர், பிச்சக்காய்(?) வட்டத்திருப்பிவேர், கடுகுரோகிணி இவைகள் சரியெடை கோமூத்திரத்திரத்தில் கஷாயம் காய்ச்சி எடுத்துக்கொண்டு, தேன்விட்டுக் கலந்து சாப்பிட்டால் களரோகம் தீர்ந்துபோம்.

## நாவில் ஏற்படும் நோய்களுக்கு

வெற்றிலையைச்சுட்டுக் கரியாக்கி நல்லெண்ணெயில் குழப்பி நாக்கிலே தடவினால் ஜிஹ்வா (நாவில் ஏற்படும்) தோஷங்கள் மாறும்.

***வேறுமுறை :*** புளித்திருக்கிற கழுநீரிலே சிறிது உப்புப் போட்டு கொஞ்சம் சுடவைத்து அதனாலே வாயைக் கொப்பளிக்க நாவில் ஏற்படும் நோய்கள் தீரும்.

### பக்ன நேத்ர ஸந்நிபாதத்திற்கு

சுக்கு, எருக்கன்வேர் இவைகள் சரிக்குசரி கஷாயம் வைத்துக்கொடுத்தால் பக்னநேத்ர ஸந்நி பாதம் போகும்.

### கர்ப்பிணி சாரத்திற்கு

மிளகு, பஞ்சதாரம் இது இரண்டும் சரி ......(ஏடுஇல்லை)

### தாமர பஸ்பம்

பழம் புளியைக் கொஞ்சமாய்த் தண்ணீர்விட்டுப் பிசைந்து அதிலே செப்புக்காசை ஒரு இரவு ஊறப்போட்டு, ஒரு அகலில் முற்றலாயிருக்கும் துத்தியிலை இரண்டு இலையை வைத்து அதுக்குமேல் காசையும், ஊறப்போட்ட புளியிலே பாதியையும் அந்த இலைமேலே வைத்து அதுக்குமேலே துட்டை வைத்து அதன்மேலே கோரைப் புளியையும் வைத்து, அதுக்குமேலே இரண்டு துத்தியிலை வைத்து மேலே அகலை மூடி சீலை ஏழு பண்ணி காயவைத்து காட்டு முட்டையிலே கெஜபுடம் பள்ளத்தில் போடவும். மறுநாள் புடம் போட்ட வேளைக்கு எடுத்தால் நன்றாய் பஸ்பமாகும்.

இது சகல ரோகங்களுக்கும் நெய், வெண்ணை, இஞ்சிச்சாறு, தேன், விளக்கெண்ணெய் இதிலே கொடுக்கலாம். பத்தியமில்லை.

### மேகத்திற்கு

| | |
|---|---|
| ரசகற்பூரம் | விராகனிடை 1 (3.05 கிராம்) |
| ரசசெந்தூரம் | ,, |

இந்த இரண்டுக்கும் சரியாய் புழுங்கலரிசி விராகனிடை 2 (6.10 கிராம்) ஒரு இரவு துளசியிலைச்சாற்றில் புழுங்கலரிசியை ஊறப்போட்டு எடுத்துக்கொண்டு இந்த

சரக்கு இரண்டும், புழுங்கலரிசியும் கூட்டி அரைத்து உருண்டை பண்ணி காயவைத்தால் உருண்டை பிளந்துபோனால் அரைப்பு மட்டு என்று அறிந்து நன்றாக அரைத்துக்காயவைத்துக்கொள்ளவும்.

***உண்ணும் முறை :*** நான்கு வருஷத்துக்கு மேற்பட்ட மேக சுரணமானால் கடலைப்பிரமாணத்தில் உருண்டை பண்ணிக் கொடுக்கவும். ஒரு வருஷத்து மேகமானால் துவரைப் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொடுக்கவும். காலையில் ஒரு உருண்டையும், மாலையில் ஒரு உருண்டையும் சாப்பிடவும்.

***பத்தியம் :*** இதற்கு மூன்றுநாள், ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பதுநாள், பதினோருநாள் இப்படி உப்பில்லாப்பத்தியம் இருக்கவேண்டும். பத்திய முடிவன்று எண்ணெய்தேய்த்து ஸ்நானம் பண்ணவும். இதற்குமேல் குளுமை எண்ணெய் சாப்பிடவேண்டும்.

## தாம்பர சுத்தி

அம்மான் பச்சரிசி கொண்டுவந்து கசக்கி மூசையிலே வைத்து, அதில் தாம்பரத்தை வைத்து அதற்குமேல் ஷை இலையைக் கசக்கிவைத்து அமுக்கி குக்குடபுடம் போட்டால் தாம்பரம் கலும்பு வாங்கி சுத்தியாகும்.

## வீட்டுப்புறத்தில் (மாதவிடாய்)-வயிற்று நோவுக்கு

முருங்கைப்பிசின் எடுத்து காயவைத்துக்கொண்டு வீடுபுறத்தில் வயிற்று நோவு கண்டவர்களுக்கு ஒரு கடலை பிரமாணம் வெந்நீரில் போட்டுக் கரைந்தபின் கொஞ்சம் உப்புப் பொடிசெய்து போட்டு வெறும் வயிற்றில் மூன்று நாட்கள் கொடுக்கவும். நோவு அதிகமாக இருந்தால் இரண்டுவேளை கொடுக்கவும்.

***பத்தியம் :*** இல்லை.

## ரஸ முறிவுக்கு

| | | | |
|---|---|---|---|
| துத்தியிலை | 1 | பாகஇலை | 1 |
| நெல்லியிலை | 1 | ருத்ரஜெடை | 1 |

இந்த நான்கையும் ஒன்றாகக்கூட்டி இடித்து ரஸம் பிழிந்து உள்ளுக்குக் கொடுத்து, சாணியைக் கரைத்து அதை ஒரு தாம்பாளத்தில் விட்டு காலும் கையும் முழுக வைத்துக் கொண்டு வெய்யிலில் முதுகு காயும்படி நான்கு நாழிகையிருந்தால் நெகக்கண்ணாலே அந்த சாணிக்குள் ரஸம் இறங்கிப் போகும்.

## கந்தகத் திரவம்

| | |
|---|---|
| கெந்தகம் | பலம் 5 (175 கிராம்) |
| வெடியுப்பு | பலம் 1 (35 கிராம்) |
| நவச்சாரம் | விராகனிடை 1 (3.05 கிராம்) |
| சவ்வீரம் | ,, ,, |
| தாளகம் | விராகனிடை 3 (9.15 கிராம்) |

இவையெல்லாம் கலுவத்திலிட்டு பசுநெய்விட்டு ஐந்து நாழிகை அரைத்து அழுக்கில்லாத வெள்ளைத்துணியில் தடவி திரியாகத் திரித்து விளக்கில் கொளுத்தி இடுக்கியினாலே பிடித்துக்கொண்டு ஒரு அகன்ற சட்டி நிறைய தண்ணீர் வைத்து அதன்மேலே நேராகப்பிடிக்கவும். அந்த தண்ணீரில் தைலம் இறங்கும். அந்தத் தைலத்தை ஒரு சீசாவில் வழித்துக்கொண்டு பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு சர்க்கரை, கல்கண்டுப் பொடியில் ஒரு பணவிடை (488 மி.கி.) தினந்தோறும் நாற்பது நாட்கள் சாப்பிடவும்.

***தீரும்வியாதிகள் :*** குஷ்டம் பதினெட்டு வகையும், குன்மம் 8 வகை, மேகம் நாற்பது, மேகரணம் வாயு ஆகிய கொடிய வியாதிகள் தீரும்.

***பத்தியம் :*** கிடையாது.

## தாளிசபத்திரிச் சூரணம்

| | |
|---|---|
| தாளிசபத்திரி | விராகனிடை 24 (7.320 கிராம்) |
| மிளகு | விராகனிடை 12 (3.660கிராம்) |
| சுக்கு | விராகனிடை 6 (1.830 கிராம்) |
| திப்பிலி | விராகனிடை 8 (9.015 கிராம்) |
| கூகைநீறு | விராகனிடை 1 (3.05 கிராம்) |
| லவங்கப்பட்டை | விராகனிடை 2 (6.010 கிராம்) |
| ஏலம் | ,, 2 ,, |

இவற்றைக் காயவைத்துச் சூர்ணம் செய்து வடிகட்டிக் கொண்டு விராகனிடை 24 (7.320 கிராம்) சர்க்கரை சேர்த்துத் தினமும் மூன்றுவிரல் தேனில் குழைத்து (10 கிராம் அளவு பெரிவர்களும்-5 கிராம் சிறியவர்களும்) சாப்பிடவும்.

***தீரும் வியாதிகள் :*** கபம், க்ஷயம், காசம், அன்னதுவேஷம், வாந்தி இவைகள் தீரும்.

***பத்தியம் :*** இச்சா பத்தியம்.

## கருவங்கச் சுண்ணம்

சித்தண்டம் சவ்வு★ எடுத்துப்போட்டு அதற்குச் சரிக்குச்சரி கருவங்கத்தை தகடுபோல் மெல்லியதாய் தட்டி கத்தரித்து எடுத்துக்கொண்டு கருவங்கத்தின் எடைக்கு சித்தண்டம் சேர்த்துப் பொடிசெய்து அந்தப்பொடியும் மை போலே அரைத்து மூசையில் வைத்து சில்லுமூடி சீலைசெய்து கன்னான் உலையில் மூசை பழுக்க ஊதி நிறுத்தி அப்படியே சாங்க சீதளமான பின்பு எடுத்தால் சுண்ணமாகும்.

***நீங்கும் நோயும் , முறையும் :*** இந்தச் சுண்ணம் சகல மேகத்திற்கும் தேன், இஞ்சி ரசம், பசுநெய், பசுவெண்ணெய் இதில் அனுபானமாகக் கொடுக்கவும்.

***பத்தியம் :*** இச்சா பத்தியம்.

---

★சித்தண்டம், சவ்வு (அடைகாத்த கோழிமுட்டை)

## தாம்பரச் சுண்ணம்

தாம்பரத்தைப் பொடியாக ராவி மேலே கூறியபடி அண்டங்கூட்டி அரைத்து இப்படியே ஊதி எடுக்கச் சுண்ணமாகும். இதுவும் சகல ரோகங்களுக்கும் நெய், தேன், இஞ்சி ரஸம், பசுவெண்ணெய் இதிலே அனுபானமாகக் கொடுக்கவும்.

## வெண்காரக் கட்டு

சிறு அம்மான் பச்சரிசி சாறுவிட்டு வெண்காரத்தை அரைத்துக் கரியைத் துளைத்து அதிலே வைத்து கன்னான் உலையில் உருக்கினால் கண்விட்டு மணியாகும்.

## நெல்லிக்காய் கந்தகம் மயனம்

கந்தகம் ஒரு பலம் (35 கிராம்) கொண்டுவந்து கரண்டியிலே போட்டு பசுநெய் சிறிது ஊற்றி அடுப்பில் வைத்து உருக்கி பசும்பாலில் சாய்த்து எடுத்துக்கொண்டு, மீண்டும் உருக்கி, இதுபோல நான்குமுறை உருக்கியும், நான்கு முறை சாய்த்தும் வைத்துக்கொண்டு, எருக்கன் செடியைச் சமூலம் வெட்டி உலர்த்தி, சுட்டு, சாம்பலை எடுத்து, பெரிய சாலில் தண்ணீர் கொண்டுவந்து அந்தத் தண்ணீரில் அச்சாம்பலைக் கரைத்து, இரண்டு நாட்கள் அப்படியே அதை தெளியவைத்து அந்தத் தெளிவை இறுத்து அடுப்பில் வைத்துச் சுண்டக்காய்ச்சினால் உப்பு இறங்கும். அந்த உப்பை எடுத்து வைத்துக்கொண்டு, எருக்கம்பால் கரந்து அந்த உப்பிலே சிறிது எருக்கம்பாலில் போட்டால் எருக்கம்பால் தண்ணீராகி முறிந்துபோகும். அந்தத் தண்ணீரால் சுத்தி பண்ணி கந்தகத்தைக் கலுவத்திலே மூன்று சாமம் நன்றாக அரைத்து மெழுக்கான பின்பு எடுத்து டப்பியிலே வைத்துக்கொண்டு மிகுதியை வெள்ளியிலே இலைபோலே தகடு அடித்து அந்தத் தகட்டின் கீழும் மேலும் இந்த மையைத் தடவி நான்கு முட்டையில் தகட்டை ஒரு அகலில் வைத்து மேலே அகலை மூடி சீலைசெய்து புடம் போடவும். அது வர்ணம் கொடுக்கும். கடை ஏறும்.

### கருவங்க பஸ்பம்

நெல்லிக்காயின் கொட்டைக்குள்ளே இருக்கும் பருப்பை எடுத்து பொடிசெய்து ஒரு சட்டியின் அடியில் வைத்து அந்தப் பொடியின்மேல் கருவங்கத்தை கட்டியாய் வைத்து மேற்படி பொடியாகவே வங்கம் தெரியாமல் மூடி அந்தச் சட்டி நிறைய உப்பைப் போட்டு, அந்த உப்பு நனையும்படி எலுமிச்சம்பழச்சாறுவிட்டு சட்டியின் வாயை மூடி அதைச் சுற்றி சீலைமண் செய்து அடுப்பில் வைத்து இரண்டு சாமம் எரித்து சாங்க சீதளம் ஆனபின்பு எடுத்தால் எடை குறையாமல் கருவங்கம் சுண்ணமாயிருக்கும்.

***தீரும் நோய்கள் :*** அனுபான விஷயத்தில் சகல மேகத்துக்கும், சகல இரணங்களுக்கும், சகல குஷ்டங்களுக்கும் கொடுக்கலாம்.

***பத்தியம் :*** இச்சாபத்தியம்.

### சம்பளகார மாத்திரை

ஸம்வி கம்பளகாரம் ¼ சேர் சுண்ணாம்புத் தெளிவு வார்த்து அரைப்பு 15 நாள், அதுக்கு மேல் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைப்பு நாள்-3, இதற்குமேல் ஊமத்தையிலைச் சாற்றில் அரைப்புநாள்-3, இதன்பின் சோளத்தைவிட சிறியதாக மாத்திரையை உருட்டி நிழலிலே உலர்த்தி வைத்துக்கொண்டு சுண்ணாம்புக்கு இடையில் 14 நாளைக்கு, தினம் ஒரு மாத்திரை வீதம் கொடுக்கவும்.

***இதனால் தீரும் வியாதிகள் :*** குஷ்டரோகம், கருங்குஷ்டம், பறங்கிசூலை, பாரிசவாயு, கீல்வாயு, வாதசூலை, பீனிசம், மூக்கிலே சீழ் பெருகுவது, கண்டமாலை, உதிரவாயு, பல்குத்து ஆகிய நோய்கள் குணமாகும்.

***அனுபானமும் பருகும் முறையும் :*** சூலைக்கு ¼ சேர் நெய்யுடன் 1½ விராகனிடை மிளகுப்பொடி பண்ணிப்

போட்டு ஒரு மாத்திரை சேர்த்துக் கொடுக்கவும். சூலைநோய் தீரும்.

***வெறும் காய்ச்சலுக்கு*** : பஞ்சதாரத்துடன் (சர்க்கரை) அரைத்துக்கொடுக்கவும்.

***ரத்தக் கிராணிக்கு*** : வெள்ளாட்டுப்பாலும், எலுமிச்சம் பழச்சாறும் கலந்து ஒரு மாத்திரை கொடுக்கவும்.

***சகலமான சூலைக்கு*** : விளக்கெண்ணெயுடன் கம்மார் வெற்றிலைச்சாறு 18 விராகனிடையும் (54.090 மிலி. கிராம்), ஒரு மாத்திரையும் கூட்டிக்கொடுக்கவும்.

***ரத்த அதிஸாரத்திற்கு*** : தித்திவேர் (துத்திவேர்) கொணர்ந்து மோர்விட்டு இடித்துக் காற்படி ரஸம் (480 மிலி)/ பிழிந்து இத்துடன் 1 மாத்திரையை கொடுக்கவும்.

***பெண்களின் குறியில் இரத்தம் காணுதற்கு*** : வெள் வேலன்வேர் பட்டையில் ரஸம் ¼சேர், காசிக்கட்டி, பாக்கு, தீயில் சுட்ட சாதிக்காய், சுக்கு, திப்பிலி ஆகியவை முறையே ஒன்றுவீதம் கூட்டி, சிறிது மிளகையும் சேர்த்துப் பொடிசெய்து அந்தப்பொடியுடன் ஒரு மாத்திரை கொடுக்கவும்.

***சக்தி கிராணிக்கு*** : ஆவாரைவேர் தைலம் சிறிது, திப்பிலி விராகனிடை 1 (3.05 கிராம்)ஐ, சுட்டுப் பொடிசெய்துப் போட்டு ஒரு மாத்திரை கொடுக்கவும்.

***ரத்த பித்தத்துக்கு*** : மாதுளம்பூ ரஸம் சிறிது, பச்சை மஞ்சள் ரஸம் சிறிது, இரண்டையும் சரியிடைக் கலக்கி ஒரு மாத்திரை கொடுக்கவும்.

***மூக்கால் ரத்தம் ஒழுகுதற்கு*** : மாதுளம்பூ ரஸம் சிறிது, அறுகம்புல்வேர் ரஸம் கொஞ்சம் கலந்து ஒரு மாத்திரை கொடுக்கவும்.

கண்டமாலைக்கும், இன்னும் அனேக நோய்களுக்கும் இம்மருந்தைக் கொடுக்கலாம்.

### காயங்கள் ஆறுவதற்கு

இடக்கால் செருப்புச்சுட்டு, அந்த கரியையும் வெள்ளாட்டு வெண்ணையும் குழச்சு காயத்தின் மேல் தடவினால் வாசியாகும்.

### மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று நோவுக்கு

திப்பிலி அக்ரமுப்பாதி 1 விராகனிடை (3.05 கிராம்) அப்ளகாரம் 1 மாத்திரை ஆகிய இரண்டையும் கையிலே வைத்துப் பொடிசெய்து அந்த இலையோடு கூடக்கலந்து கீழும் மேலும் நெய்யின் விழுது வைத்துக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாட்கள் கொடுக்க வயிற்று நோவு வாங்கும்.

***பத்தியம்:*** இச்சாபத்தியம்.

### மார் அடைப்புக்கு

மார்பில் எப்பொழுதும் அடைப்புடனே இருப்பதற்கு தாழை மொக்கு விழுதை இடித்து ரசம் புழிஞ்சு கால் சேர், இஞ்சி ரசம் கால்சேர், சீரகம் விராகனிடை அரை(1.050கிராம்), பஞ்சசாரம் (மதுரம்) தயிர் அரை சேர் இவைகளை ஒன்றாகக் கூட்டி மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும். இதனால் மார் அடைப்பு வாங்கும்.

***பத்தியம்:*** கோதுமை அடை சாப்பிடவும்.

### பும்ஸ்வாசத்திற்கு (புல்லிய மூச்சுக்கு)

பிரண்டை, கடுக்காய்த்தோல், சேறாங்கொட்டை, ஓமம், உப்பு ஆகிய ஐந்தையும் ஒன்றாக இடித்து வைத்துக்கொண்டு நெல்லிக்காய் அளவு சாப்பிடவும்.

### மருந்திட்டதற்கு முறிவு (வாந்தியெடுக்க)

வெள்ளை சக்ரவர்த்திவேர் சிராங்காய் எடுத்துவந்து முதல் நாளிரவு எடுத்துவைத்த நீரில் ஊறப்போட்டு அதை விடியல்பொழுதிலே எடுத்து மெதுவாகும்வரை பிசைந்து

வடிகட்டி, வடிகட்டின தண்ணீர்த் தெளிவைச் சாப்பிட்டு வெய்யிலிலே இருக்கவும். வாந்தியாகும். எந்த மருந்து சாப்பிட்டிருந்தாலும் வாங்கிப்போகும்.

## மயக்கம் தெளிய

சகதேவி சமூலம், வஜ்ரநீலிதேவர் இந்த இரண்டையும் நன்றாக இடித்து ரஸம் பிழிந்து கால்சேர் ரஸம் எடுத்து, அதில் சிறிது மிளகு பொடிசெய்துப்போட்டு, ஆறு துளி எண்ணெயை அதில் கலந்து குடிக்க வாசியாகும்.

## வாந்தி எடுப்பதை தடுக்க

வாந்தி எடுப்பதை தடுக்க, சாதிக்காயைப் பொடிசெய்து எலுமிச்சம்பழத்தை அறிந்து அதில், அந்த சாதிக்காய்ப் பொடியை அமுக்கி மீண்டும் எலுமிச்சம்பழத்தை மூடி சிறிது நேரம் கழிந்தபின், அந்த எலுமிச்சம்பழத்தை வாயில் வைத்து ரஸத்தை உறிஞ்சிக் குடிக்கவேண்டும். இதனால் வாந்தி போகும்.

## பித்த காங்கைக்கு மருந்து

சீரகம் - எலுமிச்சம்பழச்சாற்றில்
சுக்கு - கையாந்தகரைச்சாற்றில்
ஏலம் - இளநீரில்
திப்பிலி - முசுமுசுக்கைச்சாற்றில்
மிளகு - பசுவின் பாலில்

இந்த தினுசுகள் ரஸம் சுண்டுகின்றவரைக்குட ஊறவைத்தபின் எடுத்துக்காயவைத்து அதை எடுத்து இடித்து வடிகட்டிக்கொண்டு அந்தத் தூளுக்குச் சரியான சீனிச்சர்க்கரை சேர்த்து ஒரு மண்டலம் சாப்பிடவும்.

***தீரும்நோய்கள்:*** கால் எரிவு, கை எரிவு, கண்ணெரிவுகள், பித்தகாங்கையாலே காணும் நோய்கள்.

***பத்தியம்:*** இச்சாபத்தியம்.

## மாந்தத்திற்கு எண்ணை

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | வீசை ¼ (350மி.லி.) |
| நொச்சியிலைச்சாறு | பலம் 5 (35கிராம்) |
| கருநொச்சியிலைச்சாறு | ,, |
| செம்பையிலைச்சாறு | ,, |
| வல்லாரையிலைச்சாறு | ,, |
| பூண்டு | பலம் ½ (17.05 கிராம்) |
| வெங்காயச்சாறு | பலம் 5 (35 கிராம்) |
| மிளகு | பலம் ¼ (8.075 கிராம்) |
| திப்பிலி | பலம் 1/8 (4.035 கிராம்) |
| மொடி | பலம் ¼ (8¾ கிராம்) |
| கருஞ்சீரகம் | பலம் 1/8 (17.5 கிராம்) |
| லவங்கப்பட்டை | பலம் ¼ (17.5 கிராம்) |
| லவங்கம் | பலம் 1/8 (8¾கிராம்) |
| கஸ்தூரி | விரானிடை ¼ (.075 கிராம்) |
| கறிமஞ்சள் | பலம் ½ (17.5 கிராம்) |

முன் எழுதின இலைகளின் சாற்றை எண்ணையில் கலந்து கடைச்சரக்கை இடித்துப்போட்டு எண்ணையில் ஒரு சாமம் கூட்டி வெய்யிலிலே வைத்துக் காய்ச்சின பின்பு கஸ்தூரியைக் கலந்து பத்துநாள் பழகின பின்பு குழந்தைகளுக்கு மாந்தசுரம் கண்டிருந்தாலும், இறைப்பு மாந்தம் கண்டிருந்தாலும், இசுவு மாந்தம் கண்டிருந்தாலும், சகல மாந்தங்களுக்கும் மூன்றுநாள் வாரக மாந்தங்கள் (முறைமாந்தங்கள்) தீரும்.

**இசிவுக்கு கஷாயம்:** மிளகும், கரிசிலாங்கண்ணியும் சாம்பலாக்கிக் கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு கஷாயம் கொடுக்கவும்.

***பத்தியம்:*** புளிப்பு மோர், நெய், எண்ணெய், பூசனிக்காய், அகத்திக்கீரை, கொள்ளு இவைகள் தள்ளுபடி.

**மாந்தத்திற்கும் குளுமைக்கும் எண்ணெய்**

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | வீசை 1 |
| வசம்பு | பலம் 2 (70 கிராம்) |
| கருஞ்சீரகம் | பலம் 1 (35 கிராம்) |
| வெங்காயம் | பலம் 1 (35 கிராம்) |
| வெப்பாலை அரிசி | பலம் ½ (17½ கிராம்) |
| கப்பு மஞ்சள் | .. .. |
| ஓமம் | பலம் 1 (35 கிராம்) |
| மிளகு | ,, |
| பூண்டு | ,, |
| கசகசா | பலம் ½ (17½ கிராம்) |

செம்பறண்டைக்கிழங்கு பலம் 5 (175 கிராம்)

பழைய சாதம் சாப்பிடக்கூடாது. இரவு கஷாயம் சாப்பிடவேண்டும்.

கஷாயம் போடும் முறை: கரிசிலாங்கண்ணியும், மிளகும் சாம்பலாக்கி கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு செலம் விட்டுக் காய்ச்சி கஷாயம் போட்டுக்கொள்ளவும்.

எண்ணெய் தயார்செய்யும்போது வெங்காயத்தைப் பொடிப் பொடியாக நறுக்கிப்போடவும். பூண்டைத் தேய்த்துப்போடவும். மஞ்சளை சிறியதாக உடைத்துப்போடவும். இந்தப்படிச் செய்யவும்.

இந்த எண்ணெயால் உடல் சூடு தணியும், உடல் குளுமையாக இருக்கும். மாந்தம் வராது.

## கெந்தகச்செந்தூரம்

சுத்திசெய்த இரும்புத்தூள் விராகனிடை 1 (3.5 கி)

சுத்திசெய்த கந்தகம் ,,

பொன்னாங்கண்ணிச் சாறுவிட்டு, ஒரு சாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து, அகலிலே வைத்து மேலே அகலைமூடி வாயில் ஏழு சீலைசெய்து, ஆறு விராட்டியில் புடம்போடவும். ஒன்றரை விராகனிடை செந்தூரம் நிற்கும். அந்த செந்தூரத்திற்கு எடைக்கெடை கந்தகம் சேர்த்து ஷை சாறுவார்த்து ஒரு சாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து முன்போலே வைத்து சீலை ஏழுசெய்து, முன்சொல்லிய கணக்குப்படி எருவில் புடம்போடுகிறது. இப்படி எடைக்கு எடை சேர்த்து மீண்டும் அரைத்துப் புடம்போடுகிறது. இப்படிச் செய்ய செந்தூரமாகும். அந்த செந்தூரத்தை தேனில், பசுநெய், பசுவெண்ணெயில் அனுபானமாகக் கொடுக்கவும்.

***தீரும் நோய்கள்:*** மேகபாண்டு, பித்தபாண்டு, காமாலை, பித்தசோகை இவைகளுக்குக் கொடுக்கவும்.

***பத்தியம்:*** இச்சாபத்தியம்.

## இரணங்களுக்கும் ஆறாத புண்களுக்கும் மருந்து

வேப்பம் பிசினைக்கொண்டுவந்து நன்கு காயவைத்து மயில்துத்தம், பால்துத்தம், முருதாரசிங்கு (ம்ருதாரசிங்கி) இவைகளைச் சரியெடை சேர்த்து கலுவத்தில் போட்டு காட்டாமணக்குப் பால்விட்டு அரைத்து பின்பு கொஞ்சம் பழச்சாறும் நல்லெண்ணையும் விட்டு அரைத்து, அந்த விழுதை எடுத்து செப்புத்தாம்பாளத்தில் போட்டு செப்பு செம்பினாலே நன்றாய்த் தேய்த்து எடுத்து வைத்துக்கொண்டு நல்லெண்ணை விட்டுக் குழப்பிக் கொழைத்துச் சீலையில் தடவி புண்ணில் போட்டால் ரணம் ஆறும்.

### நாகபஸ்மம்[1]

துத்தநாகம் கொண்டுவந்து ஒரு பெரிய கரண்டியிலே போட்டு உருக்கி கீழாநெல்லிவேர், பெருமரவேர் ஒருசாண் நீளத்தில் கொண்டுவந்து பச்சைவேராலே கிளறினால் நாகம் பொரிந்து பஸ்மமாகும். குளுமைக்கு பசுவெண்ணெய் நெய்யில் கொடுக்கலாம்.

### காங்கையினாலே வெள்ளை கண்டால்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | பலம் 6 (210 கிராம்) |
| பூண்டு | பலம் 3 (105 கிராம்) |
| தும்மட்டியிலைச்சாறு | பலம் 6 (210 கிராம்) |
| சாதிக்காய் | 2 |
| வசம்பு | சேர் 1 (280 கிராம்) |

இது போட்டுக் காய்ச்சி பதமாய் இறக்கி வைத்துக்கொண்டு கால்மண்டலம் (12 நாள்) சாப்பிட்டால் வெள்ளை தீரும்.

***பத்தியம்:*** இச்சாபத்தியம்.

### காக்கை வலிப்புக்கு மருந்து

| | |
|---|---|
| நவச்சாரம் | விரானிடை 1 (3.5 கிராம்) |
| புதுச்சுண்ணாம்பு | ,, ,, |

இரண்டையும் சேர்த்துப் பொடியாகச் செய்து கொஞ்சம் விரலாலே தொட்டு மூக்கிலே உறிஞ்சினால் காக்கைவலி தீர்ந்துபோம்.

### கருவங்க போக்கு வாதம்

காரீயத்தை கள்ளிச்சாற்றில் 30 முறை உருக்கி ஊற்றினால் கருவங்கம் சாற்றால் சுத்தியாகும். அதில் ஒருபலம் (35 கிராம்)

---

1 இம்முறை ஆய்வுக்குரியது.

நிறுத்து எடுத்துக்கொண்டு நிமிளை விராகனிடை 1¼ (4.4 கிராம்) தாளகம் விராகனிடை 1 ¼ (4.4 கிராம்) இந்த இரண்டையும் பசுநெய்விட்டு அரைத்து வங்கத்தை பில்லைதட்டி அதுக்கு

(ஏடு விடப்பட்டுள்ளது)

**பாரிச வாயுவுக்குத் தைலம்**

| | |
|---|---|
| வேப்பெண்ணை தைலம் | பலம் 4 (140 கிராம்) |
| வெள்ளைப்பூண்டு | பலம் 4 (140 கிராம்) |

இந்த இரண்டையும் ஒன்றாய்க் கலந்து நல்லதாயும் உயர்ந்ததாயுமுள்ள பெருங்காயம் விராகனிடை 2 (6.10 கிராம்) பொரித்துப் பொடிசெய்துப்போட்டு சைந்தவலவணம் இரண்டு விராகனிடை பொடிசெய்துப் போட்டுக் காய்ச்சி சூடாறியபின் இந்தத் தைலத்துக்குச் சமமாய் தேன் சேர்த்துக்கொண்டு தினமும் வேளைக்கு ½ பலம் (17½ கிராம்) வீதம் இரண்டு வேளையும் சாப்பிடவும்.

***பத்தியம்:*** அரை புளி போடவும், முருங்கைக்காய்ப் பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு சேர்த்துக்கொள்ளவும்.

**மேலுக்கு உரம் போட்டுக்கொள்வதற்கு**

| | |
|---|---|
| வெள்ளைப்பூண்டுத்தோல் | எருக்கன்மொக்கு |
| எட்டிவேர்ப்பட்டை | வேப்பன்பட்டை |
| நீரடிமுத்து | |

இவை தினுசுக்கு ஒருபலம் எடுத்து நன்கு பஞ்சுபோல இடித்து வெள்ளைத்துணியில் பொட்டலம் கட்டிக்கொண்டு ஒருசட்டியிலே கொஞ்சம் வேப்பெண்ணெயை விட்டு, சிறிது சுடவைத்து அதில் இந்த பொட்டலத்தைத் தேய்த்து அதிக சூடில்லாமல் பொறுக்கும்படி இரண்டு மூன்றுவேளை ஒத்தடம் போடவும். பாரிசவாயு தீரும்.

## தாம்பர பஸ்மம்

சயிது1 துட்டு கொண்டுவந்து, சென்ற வருஷத்துப் பழம்புளியைக் கொஞ்சம் எடுத்து கெட்டியாய்ப் பிசைந்து அதில் துட்டை ஊரப்போட்டு ஒரு இரவு வைத்திருந்து மறுநாள் ஒரு அகலில் துத்தி இலை இரண்டு இலையை வைத்து அந்த ஊரிய புளியை கொஞ்சம் வைத்து அதிலேஷி துட்டை வைத்து அதுக்கு மேலே அந்த புளியை வைத்து மேலே முன்வைத்தபடி துத்தி இலையைவைத்து மேலே அகல்மூடி ஏழுசீலை செய்து கெஜம் குழிவெட்டி, அந்தக் குழியில் சாண் உயரம் நெல்லுமிப் போட்டு அதுக்கு மேலே காட்டுமுட்டை (விரட்டி) போட்டு நடுவில் அகலை வைத்து மேலேயும் காட்டுமுட்டையை முழுதுமாகப் போட்டுப் புடம் போடவும். மறுநாள் புடம் சாங்க சீதளம் ஆனபின்பு எடுத்தால் வெளுத்து பஸ்மமாயிருக்கும், சகல ரோகங்களுக்கும் அரிசியிடை தேன், நெய், வெண்ணெயில் கொடுக்கவும்.

## மேகரணம் கிரந்தி முதலியவைகளுக்கு

சுத்திசெய்த இரஸகர்பூரம் விராகனிடை 1 (3.5கிராம்)
சுத்திசெய்த இரஸசெந்தூரம் விராகனிடை 1 (3.5 கிராம்)

இந்த இரண்டுக்கும் சரியாக புழுங்கலரிசி விராகனிடை2 (6.10 கிராம்) வெள்ளைத்துளசி அல்லது கருந்துளசி இதில் ஒன்றை எடுத்து ரஸம் பிழிந்து அதில் அரிசியை ஊறப்போட்டு, ஒரு இரவு வைத்து மறுநாள் எடுத்துக் கலுவத்தில் போட்டு மேற்படி சரக்கு இரண்டையும் இத்துடன் கூடப்போட்டு அரைத்து துவரை பிரமாணம் உருண்டை செய்து காயவைத்து (உருண்டை பிளந்தால் அரைப்புப் போதாது என்றும் பிளக்காமலிருந்தால் அரைப்புப் போதும் என்றும் அறிந்துகொள்க.) காலையில் ஒரு உருண்டையும், மாலையில் ஒரு உருண்டையும் கொடுக்கவும்.

---

1 சயிது - முகலாய மன்னரின் தாம்பர காசு.

வாயு பிடித்த உடனே பத்தியம் முறித்து வறுத்த உப்புப் போட்டுக் கொள்ளவும். மறுபத்தியம் ஆன உடனே உப்பும், புளிப்பும் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

மருந்து சாப்பிடுகின்றவரை வெந்நீர், சுடுசாதம் சாப்பிடவும்.

**ரஸ பஸ்மம் பண்ணும் முறை**

சுத்திசெய்த ரஸம் விராகனிடை *1*-க்கு *(3.5* கிராம்*)* வெற்றிலை *1* சேர்த்து புளிக்கருணைக்கிழங்கு ரசம் விட்டு அரைத்து உருண்டை செய்து கருணைக்கிழங்கை அரிந்து அந்தக் கிழங்கை நன்கு கடைந்து அதிலே இந்த உருண்டையை வைத்து, அறுத்த பாதியை மேலே மூடி ஒரு சீலைமண் பண்ணி குக்குடபுடம் போடவும்.

இந்த பஸ்மம் ஞாயிற்றுக்கிழமை பண்ணவேண்டும். அதைப்போலவே ஞாயிற்றுக்கிழமை அன்றே கொடுக்கவேண்டும்.

***தீரும்நோய்கள்:*** வயிற்றுவலி, சூலை நோவுகளுக்குக் கொடுக்கவும்.

***அனுபானம்:*** சீரகம், சீனிச்சர்க்கரை இவை இரண்டையும் வெந்நீரில் போட்டு அதிலே இந்த பஸ்மத்தைப் போட்டுக் கொடுக்கவும்.

***பத்தியம்:*** இல்லை.

***குறிப்பு:*** இந்த பஸ்மத்தை மார்கழி, ஆடி, ஐப்பசி இந்த மாதங்களில் செய்யக்கூடாது.

**பாஷாணமும், ரஸமும் சேர்ந்து களங்கம் (கல்கம்)1**

| | |
|---|---|
| சுத்திசெய்த பாஷாணம் | விராகனிடை *8 (24.40* கிராம்*)* |
| சுத்திசெய்த ரஸம் | விராகனிடை *8 (24.40* கிராம்*)* |
| சுத்திசெய்த சவுக்காரம் | விரானிடை *8 (24.40* கிராம்*)* |

*1 பரிசோதனைக்குரியது*

இந்த மூன்றும் ஒன்றாகச் சேர்த்து கலுவத்திலிட்டு நல்ல தேன்விட்டு மூன்றுமுறை அரைத்தால் மொழுக்காகும். அந்த மொழுக்கை வாய்குவித்த குடுவையில் போட்டு சீலையில்மூடி சீலைசெய்து வறாகப்புடம் போட்டால் கல்கமாகும். அந்தக் கல்கத்தை எடுத்துக்கொண்டு புளிக்கருணைக்கிழங்கு கொண்டுவந்து புளிச்சமோரில் இடித்துப்போட்டு அதில் தாம்பரத்தை 20, 30 முறை சிவக்கக் காய்ச்சி தோய்த்தால் தம்பரம் சுத்தியாய் வெளுக்கும். அதன்பேரில் இந்தக் கல்கத்தை பத்துக்கு ஒன்று கொடுக்க வெள்ளியாகும். சொக்கம் சோடி சேர்த்துக்கொடுக்கவும்.

**அயத்தாம்பர வயணம்**

| | |
|---|---|
| நிலாவாரைவேர் சமூலம் | 1 கிலோ |
| ஆவாரைவேர் | 1 கிலோ |
| வெள்ளாரைவேர் | 1 கிலோ |

இந்த மூன்றும் முக்கால்வாசி உலர்ந்தபின் ஒரு பானையிலிட்டு குழித்தைலம் இறக்கி ஒரு பீங்கான் பாத்திரத்திலே போட்டு தைலத்தை சிறிது ஊற்றி ஒருநாள் பிசிரி வெயிலிலே வைத்து மறுநாள் மூசையிலேவைத்து சீலை செய்து கன்னான் உலையில் மூசை சுருக்க உருக்கி எடுத்துக்கொண்டு வேறு மூசையில் படிக்காரத்தைப் பொடிசெய்து அதை அயத்திற்குக் கீழும் மேலும் பக்கமும் தெரியாமல் வைத்து சீலைமுடி உருக்கினால் உருகும். அதன்பின் வேறு மூசையிலே வைத்து நவச்சாரத்தை வாயிநீர் (உமிழ்நீர்) வார்த்து அரைத்து ஷை அயத்துக்கு மூசையின் உள்ளே தடவி மூசையை மூடாமல் உருக்கினால் கண்விட்டு உருகி தாம்பரமாகும். நயப்பா(நைப்பாய்)யிருக்கும் ஊறல் ஆறாது . அயத்தாம்பரம் ஒருபங்கும் சொக்கம் இரண்டு பங்கும் உருக்க ஆணுக்கு ஆறுவயசு ஆகும் புடம் போட்டால் எடைகுறையும் மாத்து ஏறும். இது சித்தமான காரியம் அறியவும்.

## பாஷாண சண்டி முறிவுக்கு வயணம்

| | |
|---|---|
| சுத்திசெய்த சண்டி பாஷாணம் (சங்கு பாஷாணம்) | பங்கு 1 |
| சுத்திசெய்த உப்புச்சுன்னம் | ,, |
| சுத்திசெய்த நவச்சாரம் | ,, |
| சுத்திசெய்த வெண்காரம் | ,, |
| சுத்திசெய்த சூதம் | ,, |

இந்த ஐந்தையும் பழச்சாற்றில் ஒரு சாமம் அரைத்து பில்லைதட்டி காயவைத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி, சீலை மூன்று செய்து பத்து எருவில் புடம் போடவும். இப்படி அரைப்படி மூன்று முறை, புடம், மூன்றுமுறை சண்டி முறிந்து சுண்ணம் ஆகும்.

தாம்பரம் உருக்கிக் கொடுத்தால் வெள்ளியாகும். வெள்ளியில் நிறம் வாங்கும்.

## கந்தகத் திரவம்

| | |
|---|---|
| சுத்திசெய்த கெந்தகம் | பலம் 5 (175 கிராம்) |
| சுத்தி செய்த வெடியுப்பு | பலம் 1 (35 கிராம்) |
| சுத்தி செய்த நவச்சாரம் | விராகனிடை 1 (3.5 கிராம்) |
| சுத்தி செய்த சீரகம் | விராகனிடை 1 (3.5 கிராம்) |
| சுத்தி செய்த தாளகம் | விராகனிடை 3 (10.5 கிராம்) |

இந்த ஐந்தையும் கலுவத்தில் போட்டு பசுநெய்விட்டு ஐந்து நாழிகை அரைத்து மெல்லிய வெள்ளைத்துணியில் பூசி, திரியாகத் திரித்து விளக்கிலே இடுக்கியினாலே பிடித்து ஒரு வாயகன்ற சட்டியிலே தண்ணீரை நிறையவைத்து, அதன்மீது பிடிக்க தைலமிறங்கும். அந்த தைலத்தை ஒரு சீசாவில் வழித்து வைத்துக்கொண்டு, சர்க்கரை, கல்கண்டு பொடியில் அனுபானம், அறிந்து ஒரு பணவிடை கொடுக்கவும்.

***தீரும்நோய்கள்:*** குஷ்டம்-18; குன்மம்-8; மேகம்-40; மேகரணம் மற்றும் வாயு மற்றும் கொடிய வியாதிகள் நீங்கும். ஒரு மண்டல காலம் சாப்பிட வேண்டும்.

***பத்தியம்:*** இச்சாபத்தியம்.

**க்ஷயம், க்ஷயகாசம், வாந்தி, அன்ன துவேஷம் முதலியவற்றிற்கு**

| | |
|---|---|
| தாளிசபத்திரி | விராகனிடை 24 (840 கிராம்) |
| சுக்கு | விராகனிடை 6 (210 கிராம்) |
| கூகைநீறு | விராகனிடை 1 (35 கிராம்) |
| ஏலம் | விராகனிடை 2 (70 கிராம்) |
| மிளகு | விராகனிடை 12 (420 கிராம்) |
| திப்பிலி | விராகனிடை 2 (70 கிராம்) |
| லவங்கப்பட்டை | விராகனிடை 2 (70 கிராம்) |

ஆகியவற்றை இடித்து வடித்துக்கொண்டு சீனிச்சர்க்கரை 24 விராகனிடை இந்தச் சூர்ணத்தில் கலந்து ஒரு மண்டலம் சாப்பிடவும்.

***தீரும் நோய்கள்:*** க்ஷயம், க்ஷய காசம், வாந்தி, அன்னத் துவேஷம் முதலியன.

பத்தியம்: இச்சாபத்தியம்.

**சிறுகுழந்தைகளுக்குக் (குளுமை) ஊற்றெண்ணை**

| விளக்கெண்ணை | அளவுகள்: |
|---|---|
| (ஆமணக்கெண்ணை) | படி 1க்கு (1920 மி. லி.) |
| வெங்காயச்சாறு | படி 2 (3840 மி.லி.) |
| கற்பூரவல்லி இலைச்சாறு | ,, ,, |
| கருஞ்சீரகம் | பலம் 1 (35 கிராம்) |

இந்த தினுசுகளைக்கூட்டி சாறுகள் சுண்டும் வரைக்கும் பதமாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு ஐந்து வயது குழந்தைகள் முதற்கொண்டு போடவும். குழந்தைகளுக்கு கணை, மாந்தம், உடலில் இரத்தமில்லாமல் வெளுத்திருத்தல் கால் கை வீங்கியிருத்தல் ஆகியவற்றுக்கு இந்த ஊற்றெண்ணையை ஊற்றிக்கொண்டு வரவும்.

*பத்தியம்:* இச்சாபத்தியம்.

**குழந்தைகளுக்கு கரிசலாங்கண்ணியிலிருந்து சூர்ணம், வயிறு, புறங்கால் வீக்கம், இரத்தமில்லாமல் வெளுத்து இருப்பதற்குரியது.**

| | |
|---|---|
| கரிசலாங்கண்ணி | பலம் 1 (35 கிராம்) |
| (போத்தலை) பொற்றிலை கரிசலாங்கண்ணி | பலம்1 (35கிராம்) |
| வில்வஇலை | பலம் 2 (70 கிராம்) |
| மிளகு | பலம் 1 (35 கிராம்) |

இந்த தினுசுகள் நான்கையும் கலுவத்தில் போட்டு மைபோலே அரைத்துச் சுண்டைக்காய் நிதானத்துக்கு உருட்டி நிழலிலே உலர்த்தியபின் சிறிது (காய்ந்தபின்) வடிந்தபின் ஒருபலம் நெய்யிலே போட்டு அதிலே கொஞ்சம் கூரெள்ளெண்ணையூற்றி குலுக்கி வெய்யிலிலே இரண்டிலே மூன்றிலே வைத்து எடுத்து வைத்துக்கொள்க. இதனை குழந்தைகளுக்கு உடம்பிலே சூட்டினாலோ, இரத்தங்களில்லாமலும், சூணாவயிறும், கால் கை வீக்கமுங் கொடுத்து இருந்தாலும் உடம்பு வெளுப்பாயுமிருந்தாலும் இதிலே ஒரு உருண்டை வாயிலே போட்டு சிறு புளியாயிருக்கும். நெல்லரிசி காடித் தண்ணியை ஒரு பாலாடை வாயிலே போட்டினால் இந்த நோய்கள் அனைத்தும் தீரும். இந்தப்படிக்கு இருபது நாளைக்குக் கொடுக்கவும். இதற்குப் 'பழையது' சாப்பிடலாம்.

*பத்தியம்:* கூழ், வரகரிசி தள்ளுபடி.

## சகல வாயுப் பிடிப்பு, சகல மேகங்கள், பெருவியாதிப் புண்கள், கிரந்திப்புண்கள், வெள்ளை, கண்டமாலை ஆகிய இரணங்களுக்கு

சுத்திசெய்த சேராங்கொட்டை, வேப்பன் கருப்பு, கொப்பரைத் தேங்காய், நாட்டுச்சர்க்கரை, பசுநெய் இந்த ஐந்தும் சரிஎடை.

***செய்யும் முறை:*** சேராங்கொட்டையை உருத்தெரியாமல் உரலில் போட்டு முன்னதாக இடித்துக்கொண்டு, பின்பு வேப்பன் பருப்பைப்போட்டு இடித்து, அதற்குப்பின் கொப்பரைத் தேங்காய், சர்க்கரை, நெய் ஆகியவற்றை விட்டு, இடித்துக்கொண்ட பின் ஒரு பல்லாவில் எடுத்து, வாய்கட்டி, தானியப் புடத்தில் நாற்பது நாள் வைத்து அதன்பின்பு எடுத்து வைத்துக்கொள்ளவும்.

***உண்ணும் முறை:*** தினந்தோறும் இரண்டுவேளையும் சுண்டைக்காய்க்கு முக்கால் திட்டம் உருட்டி உள்ளங்கையில் வைத்துக்கொண்டு அரைப்பலம் நெய்விழுது விட்டுக்கொண்டு சாப்பிடவும். மோர், நெய், தயிர், பால் இவைகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவும். இதனை 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிடவும்.

***பத்தியம்:*** இச்சாப்பத்தியம். உடலுறவு கூடாது.

## கருவங்கச் சுண்ணம்

கருவங்கத்தைத் தகடுதட்டி அவல்போலே கத்தரிப்பதற்கு முன்னே கருவங்கத்தை உருக்கி மஞ்சள் அரைத்த தண்ணீரிலே கரைத்து அதில் மூன்று முறை உருக்கிவிட்டு, பின்பு கத்தரித்த பொடியை கலுவத்தில் போட்டு அவரியைவிட்டு சித்தண்ட1 ஓட்டைப்போட்டு இரண்டு நாழிகை கொதிப்பித்து உலத்தினால் சவ்வு புறப்பட்டுப்போம். அந்த அண்ட ஓட்டை இந்தக்

1. சித்தண்டம் என்பது கோழிமுட்டை.

கருவங்கத்துக்குச் சரியிடை கூடப்போட்டு அவரியிலைச் சாற்றை விட்டு மைபோலே அரைத்து பில்லைதட்டி காயவைத்து அகலிலே வைத்து அகல்மூடி சீலைசெய்து கெஜபுடம் போட்டால் வெளுமையாய்ச் சுண்ணமாகும்.

அந்தச் சுண்ணத்தை கால் விராகனிடையும்.............. சுண்டைக்காய்க்கு முக்கால் திட்டமும் உள்ளங்கையிலே நெய் விழுது வைத்துக்கொண்டு அதன் நடுவிலே இந்த மருந்து இரண்டும், ஷை சொன்ன நிதானத்துக்குத் தப்பாமல் வைத்துக்கொண்டு மேலும் நெய் வைத்துச் சாப்பிட்டால் சகலவாயுவும், சகல மேகங்களும், 20 குஷ்டம், 18 பெருவியாதி ரணம், சூலம் மேகத்தைச் சேர்ந்த ரோகங்கள் யாவும் போம்.

***பத்தியம்:*** இல்லை, நெய், தயிர், பால் இவைகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

## வீக்கத்துக்கு மருந்து

நெருஞ்சில் சமூலம், சிறுகீரை சமூலம், நீருமுள்ளிமேல் செடி, கோரைத்தண்டு இந்த நான்கையும் சமமாய் கிழாயம் வைத்து கால் மண்டலம் இரண்டுவேயையும் சாப்பிட்டால் வீக்கத்தோடு சேர்ந்த நோவுகள் வாங்கிப்போம்.

***பத்தியம்:*** இச்சாபத்தியம்

## உப்புச் சூர்ணம் பண்ணும் முறை

கரியுப்பைக் கலுவத்தில் போட்டு சிறுகீரை வேரை இடித்து அந்த ரஸத்தைவிட்டு மைபோலே அரைத்து, பில்லைதட்டி காயவைத்து, வில்லை நன்றாக இறுகின பின்பு அதை எடுத்து அகலிலே வைத்து மேல் அகல் மூடி, முழ உயரம் புடம் போடவும். இந்தப்படி மூன்று முறை அரைப்பு, மூன்று(தரம்) முறை புடம் போடுகிறது. சுண்ணமாகும்........

***நீங்கும் நோய்கள்:*** சூலம், மதுமேகம், அஜீரணம், வாயு ஆகியவைகளுக்கு தேன், நெய் ஆகியவற்றில் கொடுக்கலாம்.

## மண்டூர சிந்தூரம் செய்முறை

ரோம பழஞ்சிட்டமாயி இருக்கிறது கொண்டுவந்து உலைக்கூடத்தில் சிவக்கக் காய்ச்சி வெள்ளாட்டுக் கோமயத்தில் தோய்த்தால், செதில் செதிலாகப் பிளந்து அதிலே விழும். இப்படி மூன்றுமுறை தோய்த்து அதில் விழுகிற பிளப்பை எடுத்துக்கொண்டு கலுவத்திலே போட்டு போத்தளை, கையாந்தகரைச் சார்விட்டு ஒருசாமம் நன்றாக மைபோலரைத்து வில்லைதட்டிக் காயவைத்து மடக்கிலே வைத்து மேல்மடக்கு மூடியாக்கி சீலைபண்ணி பாதி புடமாய் வராகபுடம் இப்படி அரைப்பும், புடமும் மூன்றுமுறை செய்தால் செந்தூரமாகும்.

***தீரும் வியாதிகள்:*** காங்கை, பித்த பாண்டு, அசீரணம், உடலில் ரத்தமில்லாதிருத்தல், காமாலை, சோகை ஆகிய நோய்கள்.

***பருகும் முறை:*** இந்த நோய்கள் உள்ளவர்கள் நெய், வெண்ணெய், தேன், இதுலே அனுபானம், இரண்டுவேளையும் ¼ விராகனிடை கொடுக்கவும். இப்படி நாள் 40, நெய், தயிர் கூட்டிக்கொள்ளவும்.

***பத்தியம்:*** இல்லை.

***குறிப்பு:*** புடம் எத்துணை முறை போட்டாலும் நல்லதுதான். 10, 20 போட்டாலும் நல்லது.

## சொறி தினவுக்கு மருந்து

சொறி சிரங்குத் தினவுக்கு வேப்பிலை கொண்டுவந்து கரிசிலாங்கண்ணி சார்விட்டு மைபோலே அரைத்து உடல்

முழுதும் சிரங்கு, தினவு உண்டான இடமெல்லாம் தடவி சொறிந்து தடவி ஊறவைத்து இரண்டு சாமம் ஆனபின்பி உடலைத் தேய்த்துப் பச்சைத் தண்ணீரில் குளித்தால் சொறி, தினவு விட்டுப்போம்.

### பெருவியாதி முதலான நோய்களுக்குப் பாஷாண பஸ்மம்.

பாஷாணத்தைக் கொண்டுவந்து கலுவத்திலே போட்டு எருக்கன்பால் விட்டு மைபோலே அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து நன்கு உலர்ந்தபின், எட்டி இலையை உரலில் போட்டு இடித்தபின் அதனை அரைத்து இந்த வில்லைக்கு மேல் கனமாக கவசம்கட்டி ஏழுசீலை செய்து கொஞ்சம் காயவைத்து ஏழு முட்டையில் புடம் போடவும். ஜாக்கிரதையாய் இருந்து வாஸனை கிளம்பினால் செலத்தைத் தெளித்துக் கலைத்துத் தள்ளி · ஆரவைத்து எடுத்துக்கொள்ளவும். இந்த பில்லையிலே கொஞ்சம் தாம்பரத்தை உருக்கிக் கொடுத்தால் வெளுக்கும்.

பெருவியாதி வந்தவர்கள் இந்த பஸ்மத்தை வெள்ளாட்டுப்பாலில் சாதம் சாப்பிட்டபின் நெய்யிலே " எள்ளுப் " பிரமாணம் போட்டு இரண்டுவேளையும் கொடுக்கவேண்டியது. வெள்ளாட்டுப்பால் இல்லாவிட்டால் வெந்நீரில் சாதம் சாப்பிடவும். இந்தப்படி ஒரு மண்டலம் சாப்பிட்டால் பெருவியாதி வாங்கிப்போம்.

வெள்ளாட்டு நெய்யிலாவது, பசு நெய்யிலாவது ஒரு எள்ளு அளவு போட்டு, இரண்டுவேளையும் ஒரு மண்டலம் நாற்பத்தைந்து நாட்கள்சாப்பிட ரோகம் வாங்கும்.

### மேகரணங்கள் ஆராதிருக்குமானால் அதற்குரிய மருந்து

மேகரணங்களுக்கு வெள்ளைத்துணியில் தடவி புண் மேலே போட்டால் இரணங்கள் ஆறிப்போகும்.

**செய்யும்முறை:** ரசத்தை உள்ளங்கையிலே விட்டு வெற்றிலைச் சாற்றைப் பிழிந்து விரலால் தேய்க்க ரசம்

வெண்ணையாகும். அதை இரு கைகளால் அழுந்தத் தேய்க்கப் பஸ்மமாகும். அந்த பஸ்மத்தை எடுத்துக்கொண்டு நல்லெண்ணையில் வெள்ளைத் தேன்மெழுகைப் போட்டுக் காய்ச்சி, அதில் இந்த பஸ்மத்தைப் போட்டுக் கிளறி வைத்துக்கொண்டு வெள்ளைத் துணியில் தடவி ரணங்களின் மீது போட்டால் எப்படிப்பட்ட ரணங்களாயினும் வாசியாகும்.

### பித்தத்துக்கு கஷாயம்

ஒரு விராகனிடை மிளகு ஒரு சட்டியில் வைத்து அதற்குமேல் ஒரு 'அள்ளு' (ஒரு பிடி) வில்வ இலையை அமுக்கி எடுத்து அடுப்பிலே வைத்து மிளகு வெடித்த உடன் அந்த இலையைக் கிளறி சிவக்க வறுத்துக்கொண்டு, வறுத்த பின்பு கொஞ்சம், விராகனிடை சீரகமும் அரை விராகனிடை தாளிசப் பத்திரியும் அந்த சட்டியிலே போட்டு வெடித்து அடங்கினபின்பு தண்ணீரைவிட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி மூன்றுநாள் ஆறுவேளை சாப்பிட்டால், பித்த சம்பந்தரோகங்களான தலைசுத்தல், உடம்பு நடுங்கல், வாய்க்கசப்பு, வாயில் நீர் இழைத்து வருதல், பித்தம் மயக்கம் ஆகிய நோய்கள் நீங்கும்.

### தாளகச் சுண்ணம்

கன்னியான பெண் முதலில் திட்டம் ஆகுற பெண்ணினுடைய ருதுவாகும் இரத்தத்தை கொளஞ்சிக்காய் அளவுத் துணி நனையும்படியாய்ப் பிடித்து (அது உலர்ந்து போனாலும் அக்கரையில்லை) அதனை எடுத்து சிறிது நீர்விட்டு, கசக்கி ஒரு பாத்திரத்தில் பிழிந்து வைத்துக்கொண்டபின், சலவை பண்ணின வெள்ளைத்துணி கொண்டுவந்து பஞ்சுபோல் இடித்து பிழிந்து வைத்த நீரைவிட்டு, மைபோலே அரைத்து வைத்துக்கொண்டு, ஒருபலம் தாளகம், சுண்ணாம்புக்கல் அரைப்படி, ஒரு பல்லாயில் போட்டு அதிலே தாளகத்தை வைத்து அதன்மேல் சுண்ணாம்புக்கல் போட்டு பசும்பால்விட்டு மூடிவைத்து சாங்க சீதளம் ஆனபின்பு எடுத்தால் கருப்புத்தோல் இருக்கும். அதனை உரித்துப்போட்டு தண்ணீரிலே கழுவி எடுத்து

அரைத்த துணி விழுதை இந்த தாளகத்துக்கு மேலே கவசம் கூட்டி, அதுக்கு மேலே பிழிந்துவைத்துத் துணியை சுத்தி சீலைமண் பண்ணாமல் பத்து எருவில் புடம்போடவும். அதிக வெளுமையான சுண்ணம் ஆகும். வெள்ளியாவது தாம்பரமாவது இவைகளுக்கு பத்துக்கு ஒன்று பார்த்துக்கொள்ளவும்.

## வயிற்றுக் கடுப்புக்கு

நல்ல சீரகம் 5 பலம் (175 கிராம்) எடுத்து நன்றாக இடித்துச் சூரணமாக்கி சீரகத்துக்கு சரியிடை சர்க்கரை சேர்த்து, அதை அனலில் காட்டி சாப்பிடவும்.

*அனுபானம்:* தேங்காய்த் துருவல், பழச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு ஆகியவற்றுடன் சாப்பிடலாம்.

வெந்தியத்தை நெய்விட்டு வறுத்துப் பொடிசெய்து தயிரில் போட்டுச்சாப்பிடவும்.

## சௌவீரச் செந்தூரம்

சுத்திசெய்த சௌவீரம் விராகனிடை 4 (12.20 கிராம்) இதனை கரிசிலாங்கண்ணி சாற்றில் மூன்றுநாள் ஊறவைத்து, பிறகு கல்லுருவி 1 பலம் (35 கிராம்) மைபோலே அரைத்து கவசம் கொடுத்து அகலிலே வைத்து மேலே அகலைமூடி இரண்டு சீலை சேர்த்து நாலு எருவில் புடம் போடவும். செந்தூரமாகும்.

***தீரும் வியாதிகள் :*** சகலமான ஜன்னிகள் நீங்கும். இது கை கண்டது.

## மாந்த எண்ணை

ஆலம்பட்டை 1 வீசை (1400 கிராம்) எடுத்து நன்றாக பஞ்சு பறக்க நறுக்கி மிதக்கும்படி தண்ணீர்விட்டு ஐந்து நாட்கள் ஊறவைக்கவும். அத்தண்ணீர் சிகப்பாயிருக்கும்.

அந்தத் தண்ணீர் ஒருபடி, விளக்கெண்ணை ஒருபடி இந்த இரண்டு படியும் ஒரு பங்காகக் காய்ச்சி; மெழுக்காக வரும் பதத்தில் வெங்காயச்சாறு அல்லது வெங்காத்தை சிறு சிறு தூளாக நறுக்கிய துண்டுகள் அதில் வெங்காயம் சிவந்த பக்குவமாய் மேலே எழத்தக்க இறுத்துக்கொண்டு வெந்தயம் எண்ணைக்குத் தக்கதாய் வறுத்து கஸ்தூரி மஞ்சளும் வெந்தயமும் பொடிபண்ணிப் போட்டு வைத்துக்கொண்டு நாக்கில் தடவி வர எப்படிப்பட்ட பேதியானாலும் கட்டும், மிதமாக்கும். சாயந்திரம் கஷாயம், மத்தியிலே வெங்காயம், வெள்ளைப்பூண்டு, புல்லா நதிக்கொழுந்து, ஆலம்பட்டை கஷாயம் கொடுக்க, இந்த எண்ணையில் இளநீரும், பசும்பாலும் விட்டால் மேகவாயு, அஸ்தி சுரம் குளிர்ச்சியாகும்.

## வாயுவால் கை - கால் முடக்கினால்

*முடக்குக்கு:*

| | |
|---|---|
| *எலுமிச்சம்பழச்சாறு* | *1 படி (1920 மில்லி)* |
| *முடக்கத்தான்சாறு* | *1 சேர் (280 கிராம்)* |
| *பாவட்டை இலைச்சாறு* | *1 சேர் (280 கிராம்)* |
| *விளக்கெண்ணெய்* | *1 சேர் (280 கிராம்)* |
| *சிறுதேன்மெழுகு* | *1 பலம் (105 கிராம்)* |

இவற்றைப் பதமாகக் காய்ச்சி முடக்குக்குப் பூச முடக்கு தீரும்.

## வாந்தி நிற்க

தேங்காய்ப்பால், பசுவின் மோர், பழம்புளி, மஞ்சள், ஓமம், கருவேப்பிலை இவற்றைக்கூட்டி அரைத்துக் குடிக்கவும். வாந்தி நிற்கும்.

## [illegible]

முருங்கைவேர் வடக்கு போகும் வேராகப் பார்த்து, ஞாயிற்றுக்கிழமையன்று கொண்டுவந்து இளவெந்நீர்

விட்டு அரைத்து மூன்று நாட்கள் குடிக்கவும். ஒருமுறை அல்லது இரண்டுமுறை பேதியாகும். பின் ஸ்நானம் செய்து மோரும் சாதம் சாப்பிடுக. மூலத்தொந்தரவுகள் நீங்கும்.

**வங்க ரஸம்**

சுத்தி செய்த வெள்வங்கம் எட்டிக் கொழுந்தில் அரைத்து அதற்கு நடுவில் வைத்து, சீலைமண் பண்ணி, கனத்த புடம் போட பஸ்மமாகும்.

***தீரும்நோய்கள்:*** சூலை, சூலைவாயு போகும்.

**புளிதாளி சூர்ணம்**

| | |
|---|---|
| தாளிஸ பத்திரி | கால் பலம் (9 கிராம்) |
| சுக்கு | 5 பலம் (175 கிராம்) |
| மிளகு | 5 பலம் (175 கிராம்) |
| சர்க்கரை | 6 பலம் (210 கிராம்) |

இந்த சரக்குகளை இடித்து வடிகட்டிக்கொண்டு சர்க்கரை கலந்து நாற்பது நாட்கள் சாப்பிட பாண்டு வியாதி, சூலை, கண்ணெரிவு நீங்கும்.

***பத்தியம்:*** இச்சா பத்தியம்.

**திப்பிலி ரஸாயனம்**

| | |
|---|---|
| திப்பிலி | 10 பலம் (350 கிராம்) |
| மிளகு | 5 பலம் (175 கிராம்) |

நல்ல சீரகம், கருஞ்சீரகம், குரோசாணி ஓமம், நல்ல ஓமம், சித்தரத்தை, பேரரத்தை, தாளிஸ பத்திரி, லவங்கம், லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, ஏலம், கொடிவேலி ஆகியவற்றை வறுத்து இந்தச் சரக்குடன் கூட்டி இடித்து வடிகட்டி, இதுக்குச் சரியான சர்க்கரை கலந்து சாப்பிடவும்.

***தீரும் வியாதிகள்:*** ஈளை, காசம், க்ஷயம், ஜ்வரம் முதலியன தீரும்.

***பத்தியம்:*** இச்சாப்பத்தியம்

### விஷ பாண்டுவுக்கு

*பொட்டிலுப்பு 1 பலம் (35 கிராம்) சிறு லவங்கப்பட்டை பலம் 2 (70 கிராம்) இவை இரண்டையும் சூரணம் பண்ணி வென்னீரில் சாப்பிடலாம். முள்ளங்கிச் சாற்றிலும் சாப்பிடலாம்.*

***பத்தியம்:*** *தயிர்சாதம். முள்ளங்கியைக்கடித்துக் கொள்ளலாம்.*

### சேராங்கொட்டை லேகியம்

| | |
|---|---|
| *சுத்தி செய்த சேராங்கொட்டை* | *4 பலம் (140 கிராம்)* |
| *கொப்பரைத்தேங்காய்* | *8 பலம் (280 கிராம்)* |
| *எள்ளு* | *8 பலம் (280 கிராம்)* |
| *பனைவெல்லம்* | *12 பலம் (420 கிராம்)* |
| *இஞ்சி* | *4 பலம் (140 கிராம்)* |

இவைகளைப் பொடிசெய்து லேகியமாக்கிச் சாப்பிடவும்.

***தீரும் நோய்கள் :*** கிரந்திப்புண்கள், கடிகள் திமிர்கள் தீரும்.

***பத்தியம்:*** நெய், தயிர் அதிகம் சேர்த்துக்கொள்ளவும்.

### உஷ்ண வாயுவால் ஏற்படும் ரத்தக்கடுப்புக்கு

*மாம்பட்டையை தயிர்விட்டு மைபோலே அரைத்து வழித்துக்கொண்டு கசகசாவைப் போலே உருட்டி, கீழும் மேலும் தயிர்வைத்து மூன்று உருண்டை கொடுக்கவும். இதனால் இரத்தபேதி நிற்கும். தயிரில் குழப்பியும் கொடுக்கலாம்.*

### உப்பு பஸ்மம்

*எருக்கம்பால் அல்லது வெள்ளெருக்கம்பால் இவற்றில் ஏதாவது ஒன்றைக் கறந்து அதில் உப்புக் கற்களைப் பொறுக்கிப் போட்டு இரண்டு சாமம் ஊறவைத்து வெய்யிலிலே வைத்து வற்றியபின் குப்பைமேனிச்சாறு*

விட்டு ஒரு சாமம் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அகலிலே வைத்து மேல் அகல் மூடி இரண்டு சீலைமண் வாங்கிப் பண்ணி காயவைத்து வறாகப் புடம் போட பஸ்மமாகும். அந்த பஸ்மத்தை வைத்துக்கொண்டு அனுபானமறிந்து பருகவும்.

***தீரும் நோய்கள்:*** பக்கசூலை, சகலமான வாயுக்கள், குன்மம், அசீரணம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

***பத்தியம்:*** இல்லை.

### வெள்ளைப்புண், ரணங்களுக்கு

பூ வெள்ளை அதனால் பூவிலே ரணம். அது அதிகரித்து உடல் முழுதும் ரணம். இந்தப் புண்களுக்கு கூறெள்ளு எண்ணை பங்கு இரண்டு, பிரண்டைச்சாறு பங்கு ஒன்று. இந்த இரண்டையும் ஒன்றாகக் கலந்து நித்தம் இரண்டுவேளை விழுக்காடு மூன்று நாட்களுக்கு ஆறுவேளை கொடுத்து உப்பு, புளிப்புத் தள்ளி கடும்பத்தியம் வைத்தால் இந்த மூன்று நாளையிலே நோய்தீரும். நான்காம் நாள் வறுத்த உப்பு சேர்த்துக்கொள்ளவும். அதற்குமேல் எண்ணை தேய்த்துத் தலைமுழுகி சகலமானதும் கூட்டிக்கொள்ளலாம்.

### வெள்ளை கண்டு மஞ்சளாய் ரத்தமாக மாறுதற்கு

நீர்முள்ளி இலையைப் பறித்து வாயிலே போட்டுக் கொண்டு தின்று விழுங்குகிறது. இந்தப்படி மூன்றுநாள் மாங்காய் அளவு இலை விழுக்காடு சாப்பிட்டால் தீரும். பத்தியம் இல்லை.

### தலைநோவு, குத்தல் குடைச்சலுக்கு

நல்ல கூறெள்ளெண்ணை இரண்டுபங்கு; தாழைக் குறுத்து வெள்ளையாயிருக்கிறது பிடுங்கி இடித்துச் சாறுபிழிந்து அந்தச்சாறு பங்கு ஒன்று. இவை இரண்டையும் ஞாயிற்றுக்கிழமையன்று காய்ச்சவும். காய்ச்சும்போது அதிலே இரண்டு லவங்கம் போட்டுத் தலைக்குத் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் பண்ணவும். இப்படி மூன்று ஞாயிறுக்கு அப்போதைக்கப்போது காய்ச்சி தேய்த்துக்கொள்ளவும்.

***பத்தியம்:*** எண்ணெ ஸ்நானம் பண்ணும் தினம் புளிப்புத் தள்ளுபடியாய்ச் சாப்பிடவும்.

**அகஸ்தியர் குழம்பு**

| | |
|---|---|
| சுத்தி செய்த வாளம் | மனோசிலை |
| சுத்தி செய்த ரஸம் | காயம் |
| கடுகுரோகிணி | வால் மிளகு |
| கடுகு | கருஞ்சீரகம் |
| சுத்தி செய்த படிக்காரம் | பொரிக்காரம் |
| சவுக்காரம் | ஆக தினுசு 11 |

இவையெல்லாச் சரக்குகளும் சரியிடைச் சேர்த்துக் கொள்ளவும் அரைப்பு சாமம் 4.

***செய்முறை:*** 'வாளம்' சுத்தி சாணிப்பால் கரைத்து அதிலே போட்டு புழுக்கி எடுத்து, மறுபடி கத்தாழை கொண்டுவந்து மடலைப் பிளந்து அதில் வாளத்தை வைத்து மூடி ஒரு பல்லாயில் வைத்து இரண்டு நாழிகை எரித்து எடுத்துக்கொண்டு வாளத்தை உடைத்து உள்ளே இருக்கும் முளையை எரித்துப் போட்டு காயவைத்து சிறிது நெய்யூற்றி வறுத்து எடுத்துக்கொண்டு சரக்கு தினுசுகளுக்கு சரியிடை சேர்ப்பதற்கு பாதி வறுத்தும், பாதி சுத்தி பண்ணினதும் சேர்த்துக்கொள்ளவும். ரசம் சுத்தி பண்ணி சேர்த்துக்கொள்ளவும்.

**கந்தக பஸ்பம்**

சுத்தி செய்த கெந்தகம் எடுத்து வந்து சிறுசின்னி ரஸத்தில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்து கலுவத்தில் போட்டுஷெ சாறுவிட்டு மூன்று நாட்கள் நன்றாக அரைத்து பில்லைத் தட்டிக் காயவைத்து ஷெ இலையை அரைத்து ஒரு அகலுக்குள்ளே வைத்து அதன்மேல் காயவைத்த கந்தக வில்லையை வைத்து மேலுக்குத் தெரியாதபடி அரைத்த மூலிகையை வைத்து மேல் அகலைமூடி, வாய்க்கி இரண்டு சீலைபண்ணி, இருபது எருவில் புடம் போட கந்தக பஸ்பமாகும்.

***அனுபானமுறை:*** சகல நோய்களுக்கும் நெய், தேன், பசு வெண்ணை இவற்றில் கொடுக்கவும்.

### வெள்ளி பஸ்பம்

அரை ரூபாய், கால் ரூபாய்★ வேண்டிய மட்டுக்கும் எடுத்து காட்டுக்கருணைக்கிழங்கு உள்ளே வைத்து ஒரு சீலைசெய்து கெசபுடம் காட்டு எருவில் போடவும். பஸ்பம் ஆகும்.

***நீங்கும் நோயும், உண்ணும் முறையும்:*** சகலமான காங்கைகளுக்குக் கொடுக்கலாம். தேன், நெய், விளக்கெண்ணை, பசு வெண்ணை இவற்றில் கொடுக்கவும்.

***பத்தியம்:*** இச்சாப்பத்தியம்.

### சில்லரை வைத்தியங்கள்

***அஸ்வகந்தி கல்பம்:*** அமுக்ரா கிழங்குச் செடி சமூலம் கொண்டுவந்து நிழலிலே உலர்த்தி இடித்து வடிகட்டிக்கொண்டு ஒரு புதுப் பாண்டத்திலே வைத்துக்கொண்டு

***ஸ்லேஷ்ம ரோகத்துக்கு:*** திப்பிலிப் பொடியும் இந்தப் பொடியும் தேனில் குழைத்துக் கொள்ளவும்.

***தேள் கடிக்கு:*** வேப்பெண்ணை அல்லது எண்ணையில் குழைத்துத் தடவவேண்டும்.

***ஸ்தம்பனத்துக்கு:*** இந்தப் பொடியை பசுவின் பாலில் கொடுக்கவேண்டும்.

***ஈளை, சோகைக்கு:*** அவுரிச்சாற்றில் அல்லது வெள்ளாட்டுக் கோமயத்தில் கொள்ளவேண்டும்.

***ஈளை, இருமலுக்கு:*** நீரில் கொள்க.

***உடல் பெருக்க:*** நெய்யில் குழைத்துக் கொள்ளலாம்.

***உடல் இளைக்க:*** தேனில் குழைத்துக் கொள்ளலாம்.

***பித்த பாண்டுவுக்கு:*** எருமை மோரில் கொள்க.

***எலி கடிக்கு:*** பசுவின் கோமயத்தில் கொள்க.

---

* சுவடியில் எழுதியுள்ள காலத்தில் சுத்தமான வெள்ளி ஆகையால் சுவடியில் எழுதப்பெற்றுள்ளது. வைத்தியர்கள் தற்காலத்தில் புழக்கத்திலுள்ள காசாகக்கொள்ளக்கூடாது.

***பெரும்பாட்டுக்கு:*** நல்ல வெல்லம்; நல்லெண்ணையில் போட்டுக் குடிக்கலாம்.

***வீரிய விருத்திக்கு:*** வென்னீரில் குடிக்கவும். மேலுக்கும் பூசவும்.

***செய்யான் பூரான் கடிக்கு:*** வெள்ளாட்டு நெய்யில், மேலுக்கும் பூசவும்.

***பிள்ளை இல்லாததற்கு:*** பிரம்மி இலைச்சாறும் பாகல் இலைச்சாறும் எண்ணையுடன் மிளகும் கூட்டிக்கொடுக்கவும்.

***கையில் சிறங்குக்கு:*** வேப்பெண்ணை, பசுவெண்ணை, மிளகுப்பொடியுடன் கூட்டிக்கொடுக்கவும்.

***குஷ்டத்துக்கு:*** வேப்பெண்ணையில் நாள்தோறும் கொள்ளவும்.

***தூமை இல்லாவிடில்:*** உப்பிலிச்சாற்றில் பெருங்காயம் கூட்டிக்கொடுக்கவும்.

***வயிற்று நோவுக்கு:*** வெற்றிலைச்சாற்றில் கொடுக்கவும்.

***வாதத்துக்கு:*** விளக்கெண்ணையில் காய்ச்சிக் கொடுக்கவும், மேலுக்குப் பூசவும்.

***சிறங்குக்கு:*** வெள்ளாட்டு கோமயத்தில் கொடுக்க. மேலுக்கும் பூசுக.

***சன்னிக்கு:*** எண்ணையில் குழைத்துக் குடிக்கவும். மேலுக்கும் பூசுக.

***விப்புருதிக்கு:*** உள்ளி, வசம்பு கூட்டி வென்னிரில் கொடுக்கவும். மேலுக்கும் பூசவும்.

***கக்குவானுக்கு:*** நீரில் குழைத்து, உடம்புக்குப் பூசவும்.

***நீரில் வீரியத்துக்கு:*** பச்சைப்பாலில் கொடுக்கவும். மேலுக்கும் பூசவும்.

***காமாலைக்கு:*** வேப்பம் பட்டைச்சாற்றில் கொடுக்கவும்.

இந்த அனுபானங்களுடன் ஒருவேளைக்கு ஒருவிரற்கிடைப் பிரமாணம் பத்து நாட்கள், இரண்டு வேளைகளும் கொள்ள எல்லா வியாதிகளும் தீரும்.

***பத்தியம்:*** இச்சாப்பத்தியம்.

## தூதுவளை கல்பம்

தூதுவளை சமூலம் கொண்டுவந்து இடித்து வடிகட்டிக் கொண்டு ஒரு புதுப்பாத்திரத்தில் போட்டு வாய்க்கட்டி வைத்துக்கொண்டு கீழே காணும் நோய்களுக்குக் கொடுக்கவும்.

***உடல் பெருக்க:*** நெய்யில் சாப்பிடுக.

***உடல் இளைக்க:*** தேனில் சாப்பிடுக.

***சளை தீங்க:*** தேனும் திப்பிலிப் பொடியும் கூட்டிச் சாப்பிடுக.

***பித்தம் நீங்க:*** வெந்நீரில் சாப்பிடுக.

***எலிக்கடிக்கு:*** வெள்ளாட்டுக் கோமயத்தில் அல்லது பசுத்தயிரில் கொள்ளவும்.

***ஆணைக்கட்டு:*** உப்பிலிச் சாற்றுடன் கொள்க.

***பெருவியாதி:*** வெற்றிலைச்சாற்றுடன் கொள்க.

***செய்யான் கடிக்கு:*** சிறுநீரில் கொள்க.

***சகல கடிகளுக்கு:*** பாக்குடன் தின்க

***அளவு:*** 10 கிராம்.

***பத்தியம்:*** இச்சாப்பத்தியம்.